
www.tamilarangam.net

இதழ் 108 விலை 7.00
ஒக். 24 - நவ.06, 1996

SARINIHAR
# சரிநிகர்
சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே - பாரதி.



# அஷ்ரஃப் பதவி விலகுவாரா?

### பிரபாகரன் மீது வழக்கு:

# பூண்டோடு அழிக்கும் திட்டம்?

### திருமலை:

# கிள்ளுக்கீரையாக தமிழ் கட்சிகள்?



**சித்தார்த்தம்**

காட்டேறி; துர்த்தை; கல்நெஞ்சக் காரியிந்த
நாட்டை அழிக்கவந்த நாரியென்று-கூட்டமிட்டு
கூவுவார்! கூவட்டும்; கொற்றவளே தமிழ்த்தலைகள்
சீவுதலே சித்தார்த் தம்!

—ஈழமோகம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சரிநிகர்
இருவாரங்களுக்கொருமுறை
"சரிநிகர் சமானமாக வாழ்விந்த நாட்டிலே" பாரதி

ஆசிரியர்குழு
ச.பாலகிருஷ்ணன்
சிவகுமார்
சரவணன்
எம்.கே.எம்.ஷகீப்
அரவிந்தன்
சி.செ.ராஜா
சிவகுருநாதன்
சேரன்

வடிவமைப்பு
ஏ.எம்.றஷ்மி

வெளியிடுபவர்
ச.பாலகிருஷ்ணன்
18/2, அலோசாலை,
கொழும்பு-03

அச்சுப்பதிவு
நவமக அச்சகம்,
334,காலி வீதி,
இரத்மலானை

ஆண்டுச் சந்தா விபரம்
இலங்கை - ரூபா 210/=
வெளிநாடு 30 U.$.$
(தபாற் செலவு உட்பட)

காசுக்கட்டளை/காசோலை யாவும் MIRJE என்ற பெருக்கே எழுதப்படல் வேண்டும்.

எல்லாத் தொடர்புகட்கும்
ஆசிரியர்,
சரிநிகர்,
04 ஜெயரட்ன வழி,
திம்பிரிகஸ்யாய,
கொழும்பு -05
தொலைபேசி: 593615
தொலைமடல்: 594229

# சந்திரிகாவை மிரட்டும் அஷ்ரஃப்?

1994ம் ஆண்டு நடைபெற்ற பொதுத்தேர்தலில் பெரும்பான்மை பெறமுடியாத நிலையில் இருந்த பொதுஜன முன்னணி தமது அரசாங்கத்தை அமைப்பதற்காக இந்த நாட்டிலுள்ள ஏனையசிறுபான்மை கட்சிகளின்தயவை நாட வேண்டிய நிலையில் இருந்தது. ஏற்கெனவே பொதுஜன ஐக்கிய முன்னணியின் கூட்டு அமைப்பில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி, ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி, இலங்கை கம்யூனிஸ்ட்கட்சி, சமசமாஜக்கட்சி, இலங்கை மக்கள்கட்சி, தேசவிமுக்தி ஜனதா கட்சி என்பன போன்றகட்சிகளை உள்ளடக்கியும் பின் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், தொண்டமான், சந்திரசேகரன், ஆகியோர்களை உள்ளடக்கியதுமான அரசாங்கம் அமைக்கப்பட்டது. இப்பலவீனமான கூட்டு அரசாங்கம் கடந்த இரண்டு வருடகாலமாக பல பிரச்சினைகளை எதிர்கொண்டு வரும்நிலையில் முஸ்லிம்காங்கிரசுக்கும் அதற்குமிடையிலுமான உறவில் இப்போது முரண்பாடு ஏற்பட்டுள்ளது.

கடந்த இரண்டு வருடகாலத்திற்குமேலான சந்திரிகாவின் அரசில் ஏனைய சிறுபான்மைக்கட்சிகள் நம்பிக்கை இழந்து விட்ட நிலையில் அமைச்சர் அஷ்ரஃப் தனது அமைச்சர் பதவியை காப்பாற்றிக்கொள்வதற்காகசிறுபான்மை மக்களுக்கு நியாயமான அரசியல் தீர்வை, வழங்க முடியாத இப்பலவீனமான அரசுக்கு தனது கண்மூடித்தனமான ஆதரவைத் தொடர்ந்தும் வழங்கி வந்தார். இப்போது அரசுக்கும் அஷ்ரஃப்புக்குமிடையே ஏற்பட்டுள்ள முரண்பாடானது தமிழ் முஸ்லிம் மக்களுக்கு நியாயமான அரசியல் தீர்வு, அவர்களின் உரிமை தொடர்பான கருத்து முரண்பாடாக இல்லாமல் தனது அமைச்சுப்பதவியை உறுதிப்படுத்திக்கொள்வதற்காக நடக்கும் போராட்டமாகவேயுள்ளது. இந்த முரண்பாட்டை பின்வரும் தளங்களில் நாம்பார்க்க வேண்டியுள்ளது.

1. பலவீனமான சந்திரிகாவின் அரசாங்கம் எதிர்காலத்தில் நிச்சயமாகத் தோல்வியைத் தழுவும் நிலையில் இருப்பதால் சரியான சந்தர்ப்பத்தில் மறுகொப்புக்குத் தாவுவதற்கான முதல் கட்ட நடவடிக்கை.

2. முஸ்லிம்களின் உரிமைகளுக்காகப் போராடுவதாக பறைசாற்றி சலுகைகளுக்குப் பின்னால் தன்னை நிலை நிறுத்திக் கொண்ட அஷ்ரஃப் தனது இழந்துவரும் செல்வாக்கை மீளக் கட்டியெழுப்புவதற்கான உத்தி,

3. அரசாங்கத்துடன் தனது இருப்பை நிலைநிறுத்திக்கொள்வதற்காக அரசாங்கத்தை பயமுறுத்தும் நிலையினூடான பேரம் பேசும் சக்தியை அதிகரிக்கும் ஏற்பாடு.



4. நான்தான் அரசைத் தீர்மானிப்பவன் என்ற பேச்சுகளுக்கான தனது வரட்டு கௌரவத்தை காப்பாற்றிக்கொள்வதற்கும், அந்த வறட்டு கௌரவத்திற்கு தீனி போடும் ஒரு நடவடிக்கை.

இவைகளுக்காக மட்டுமே தனது அரசியல் நடவடிக்கையாக இப்போது சந்திரிகாவைப்பயமுறுத்தும் அஷ்ரஃப் நிச்சயமாக தனது வரலாற்றில் சிறுபான்மை மக்களின் அரசியல் உரிமைகளுக்காக தனது அரசியலைப் பயன்படுத்தியவர் அல்ல, இப்போது ஒரு கல்லில் இரண்டு மாங்காய் பறிக்க நினைக்கிறார் அஷ்ரஃப்; ஒன்று அரசாங்கத்தை பயமுறுத்தி பணியவைத்து தனது அமைச்சைக் காப்பாற்றிக் கொள்ளல்; இரண்டு பாமர முஸ்லிம் மக்களை ஏமாற்றல். கடந்த 15 தினங்களுக்கு முன் சந்திரிகாவின் அரசாங்கம் மீண்டும் மீண்டும் 15 வருடங்கள் இந்த நாட்டை ஆட்சிசெய்யும் என மார்தட்டிய அஷ்ரஃப் இப்போது தனது நலன்களுக்காக முரண்பட்டு நிற்கிறார்.

பிரேமதாசவின் ஆட்சிக்காலத்தில் பிரேமதாச மீது இந்த நாட்டிலுள்ள ஜனநாயக சக்திகளினால் கொண்டு வரப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின்போது அமைச்சர் பதவி ஒன்றைப் பெற்றுக் கொள்ள அஷ்ரஃப் பிரேமதாசவுக்கு ஆதரவாக நிலைப்பாடொன்றை எடுத்தார். அஷ்ரஃப் அடிக்கடி தனது நிலைப்பாடுகளை மாற்றிக்கொள்வது முஸ்லிம் காங்கிரசின் வரலாற்றில் ஒன்றும் புதிதல்ல,

அரசுக்கும் அஷ்ரஃபுக்குமிடையிலான முரண்பாடு அஷ்ரஃப் அமைச்சர் பதவியிலிருந்து விலகுவதற்கான சூழலை ஒரு போதும் தோற்றுவிக்காது எனவும் அமைச்சர் அஷ்ரஃப் பதவியை விட்டு வெளியேறமாட்டார் எனவும் அரசியல் விமர்சகர்கள் பலர் அபிப்பிராயம் தெரிவிக்கின்றனர். இம்முரண்பாடானது கொழும்பு துறைமுகத்திலுள்ள ''எலிசபத்'' இறங்குதுறையை தனியாருக்கு வழங்குவதற்கான அஷ்ரஃபின் முடிவை சந்திரிகா ஏற்றுக்கொள்ள மறுக்கிறார் என்பதும் அமைச்சரவையின் இரகசியம் பேணும் பொறுப்பை அஷ்ரஃப் மீறினார் என்ற குற்றச்சாட்டுக்களின் அடிப்படையில் எழுந்த முரண்பாடுதான். கடந்த வாரம் நடைபெற்ற அமைச்சரவைக்கூட்டத்தில் இவ்விடயங்கள் பலத்த வாதப் பிரதிவாதங்களுக்குட்பட்டிருந்தன.

முஸ்லிம் மக்கள் இவ்விடயத்தில் தெளிவுடன் சிந்திப்பது மிகவும் முக்கியமானது அஷ்ரஃபினுடைய அரசியலை உற்று நோக்கும்போது இரண்டு வகையான முன்னெடுப்புக்கள் உள்ளது.

1. முஸ்லிம்களுக்கான அரசியல் தீர்வு, பாதுகாப்பு உத்தரவாதம், உரிமைகள் தொடர்பான அரசியல் நடவடிக்கைகள்.

2. முஸ்லிம் காங்கிரஸ் தனது அரசியலை மாத்திரம் நடாத்தும் நடவடிக்கை.

இதில் முஸ்லிம் காங்கிரஸ் தனது கட்சி அரசியலை மாத்திரமே முஸ்லிம் மக்கள் மத்தியில் நடாத்தி வந்திருக்கிறதே அன்றி முஸ்லிம்களின் அரசியல் தீர்வு, பாதுகாப்பு, உரிமை உத்தரவாதம் போன்ற நடவடிக்கைகளில் முஸ்லிம் காங்கிரஸ் அதிக கரிசனை காட்டவில்லை. தனது கட்சி அரசியலை வளர்ப்பதற்காகவும், அதனை ஸ்திரப்படுத்துவதற்குமான அமைச்சர் பதவி போராட்டமேயன்றி முஸ்லிம்களின் நலன்தொடர்பான முரண்பாடு இல்லை என்பது தெட்டத்தெளிவாகிறது.

முஸ்லிம் மக்களின் ஒரு நியாயமான போராட்டமாக இதனைப் பார்க்க முடியாதவாறு கடந்த கால நடவடிக்கைகளின் ஊடாக முஸ்லிம் காங்கிரஸ் தன்னை வெளிப்படுத்தி வந்திருக்கிறது. இனப்பிரச்சினைக்கான தீர்வில் முஸ்லிம் காங்கிரசின் போக்கானது எப்போதும் சிறுபான்மை மக்களின் அபிலாஷைகளைப் புறம்தள்ளி சிங்களப் பேரினவாதத்திற்கு சேவகம் புரிகிற செயலாகவே தொடர்ந்தும் இருந்து வந்திருக்கிறது. அரசாங்கத்துடன் சிறுபான்மை தொடர்பான விடயங்களில் ஏனைய தமிழ் முஸ்லிம் கட்சிகள் புத்திஜீவிகள் முரண்பட்ட நிலையில் இருக்கும் போது அஷ்ரஃப் எப்போதும் அரசாங்கத்துக்கு வக்காலத்து வாங்குபவராகவும் அரசாங்கத்தின் துரோகமிக்க நடவடிக்கைளுக்கு துணை போகிறவராகவுமே இருந்திருக்கிறார். தமிழ் முஸ்லிம் மக்களுக்கான இனப்பிரச்சினைக்கான தீர்வை அரசாங்கத்திடம் ஆணித்தரமாக அஷ்ரஃப் வற்புறுத்தியிருக்கிறாரா என்ற கேள்விக்கு இல்லை என்பதுதான் பதில்.

பாராளுமன்றத்தில் ஒரு பிரதிநிதித்துவம் மட்டுமே அதிகமாகவுள்ள இவ்வரசாங்கத்தில் இருந்து அமைச்சர் அஷ்ரஃப் நிச்சயமாக பதவி விலகுவாரானால், அரசாங்கத்தின் எதிர்காலம் கேள்விக்குறிதான், சிறுபான்மை மக்கள் மீது அடக்குதலை கட்டவிழ்த்துவிட்டிருக்கும் இவ்வரசாங்கத்திற்கு தமிழ்க் கட்சிகள் ஆதரவு அளிப்பதில்லை என உறுதியாக இருக்குமேயானால், சிறுபான்மை மக்களின் அரசியல் உரிமைகளைப் பேரம் பேசி பெறுவதற்கான ஒரு சூழலாக இது அமையும். அஷ்ரஃப் இதில் என்ன முடிவை எடுத்து தன்னை எப்படி வெளிப்படுத்தப்போகிறார் என்பது முக்கியமானது. அஷ்ரஃப் சந்திரிகாவுடன் மீண்டும் சுமூகமான நிலைக்கு வருவாரேயானால், அஷ்ரஃபின் அரசியல் ஒரு பம்மாத்து என்பதைத் தவிர வேறில்லை என்பது நிரூபிக்கப்படும்.

சிறுபான்மை தமிழ் முஸ்லிம் மக்களின் அரசியல் உரிமைப் போராட்டத்தில் முஸ்லிம் காங்கிரஸ் எப்போது தனது நியாயமான பங்களிப்பை வழங்கும் என்பது இப்போதைய கேள்வியாகும். அமைச்சர் அஷ்ரஃபும் அவரது உதவி அமைச்சர்களும் பாராளுமன்ற பிரதிநிதிகளும் என்ன முடிவை எடுப்பார்கள்?

*கருங்கொடியான்*

# அம்பாறை: நடவடிக்கை இல்லை!

அம்பாறை மாவட்டத்திலுள்ள சம்மாந்துறைப் பிரதேச செயலாளர் பிரிவில் மாணிக்கமடு எனும் மீள்குடியேற்ற தமிழ்க் கிராமம் அமைந்துள்ளது. 72 குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன.

இங்குள்ளவர்கள் பெரும்பாலும் இறக்கமாமம் ஓட்டுத்தொழிற்சாலையில் கூலித் தொழில் செய்பவர்கள். மாணிக்க மடுவைச் சுற்றி ஏனைய இன கிராமங்கள் அமைப்பெற்றுள்ளன. இக்கிராமம் 1983, 1985, 1987, 1990 ஆகிய வருடங்களில் கலவரத்தால் பாதிக்கப்பட்டது.

அங்கு 1957ஆம் ஆண்டிலிருந்து ஒரு தமிழ்ப் பாடசாலை இயங்கி வருகிறது. அங்கு கடந்த காலத்தில் நிலவிய இன அழுத்தம் காணமாக இப்பாடசாலை முஸ்லிம் பாடசாலையாக்கப்பட்டது.

தற்போது இப்பாடசாலையில் 55 மாணவர்களே கல்விபயில்கின்றனர். 49 தமிழ் மாணவர்கள், 6 முஸ்லிம் மாணவர்கள். ஆனால் அதிபருட்பட 4 ஆசிரியர்களும் முஸ்லிம்களாவர். இது எப்படி இருக்கிறது?

இது தொடர்பாக மாகாண கல்வியமைச்சுவரை விடயம் சென்றிருக்கிறது. எந்த வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரியவில்லை.

*நேசன்-*

# எப்படிச் சொல்வேன் இதை?

Crash Programme எனும் துரித அபிவிருத்தி திட்டத்தில் பல அபிவிருத்தி வேலைகள் நடைபெற்றுவருவது வழக்கம். அம்பாறை மாவட்டத்தில் இத்திட்டம் எந்தளவிற்கு ஒரு சாராரின் நலனுக்கு பாவிக்கப்படுகிறதென்பதை இங்கு காணப்போகிறோம்.

கடந்த காலங்களில் பெரும்பான்மையின அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த ஒருவர் புனர்வாழ்வு அமைச்சராக இருந்தார். அவர் அவரது பிரதேசங்களை முன்னேற்றுவதில் முனைப்பாக இருந்தார்.

இந்த ஆட்சிக்காலத்தில் அதே மாவட்டத்தைச் சேர்ந்த சிறுபான்மையினர் ஒருவர் இருக்கிறார். அவர் முன்னவரை விடக்கெட்டிக்காரர். மிகவும் முனைப்பாக அவரது பிரதேசங்களை முன்னேற்றுவதில் அக்கறையாகவுள்ளார்.

இடையில் அகப்பட்டு புறக்கணிக்கப்படுகின்ற சமூகமாக தமிழ்ச்சமூகம் உள்ளது. யாராவது ''புறக்கணிப்பு'' பற்றிக் கேட்டால், ''நான் எங்கே புறக்கணிக்கிறேன். திட்டமிட்டு பழியைப்போடுகிறார்கள். நான் அணைக்க விரும்புகிறேன். அவர்கள் விலகிப்போகிறார்கள்'' என்று சாக்குப்போக்கு கூறுவார் அந்த அமைச்சர்.

புள்ளி விபரங்களைக்காட்டினால், என்ன செய்வாரோ?. இதோ 1996ல் இருதடவைகள் (ஏப்ரல் - ஓகஸ்ட்) அம்பாறை மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட நிதி விபரம்:-

பாருங்கள் அட்டவணையை:

1997 ஏப்ரலுக்கும் ஓகஸ்ட்டுக்குமிடையேயுள்ள மாற்றம்.

முஸ்லிம் பிரதேசத்திற்கு ஒதுக்கப்பட்ட நிதி சுமார் 10 மில்லியனால் அதாவது ஒரு கோடியினால் கூடியிருக்கிறது.

இதனை என்னவென்று சொல்வது?

| 1996 ஏப்ரலில் Crash Programme | | |
|---|---|---|
| முஸ்லிம் பிரதேசம்: | 29.78 | மில்லியன் |
| தமிழ்ப் பிரதேசம்: | 10.37 | மில்லியன் |
| சிங்களப் பிரதேசம்: | 14.06 | மில்லியன் |
| மொத்தம் | 54.21 | மில்லியன் ரூபா |

| 1996 ஓகஸ்டில் Crash Programme | | |
|---|---|---|
| முஸ்லிம் பிரதேசம்: | 39.054 | மில்லியன் |
| தமிழ்ப் பிரதேசம்: | 10.166 | மில்லியன் |
| சிங்களப் பிரதேசம்: | 15.015 | மில்லியன் |
| மொத்தம் | 64.235 | மில்லியன் ரூபா |

*நேசன்*

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# புலிகளின் தலைவர் பிரபாகரன் மீது வழக்கு: இலங்கை அரசாங்கத்தின் கேலிக்கூத்து!

''உலக வரலாற்றில் இடம் பெற்றுள்ள மாபெரும் சம்பவங்கள் அனைத்தும் இரண்டு தடவை தோன்றுகின்றன; மாபெரும் தலைவர்களும் இரண்டு சந்தர்ப்பங்களில் தோன்றுகிறார்கள். என்று ஹெகல் எழுதியுள்ளார். அவர்களுடைய தோற்றம் முதலாவது சந்தர்ப்பத்தில் சோகக் கதையாகவும், இரண்டாவது சந்தர்ப்பத்தில் கேலிக்கூத்தாகவும் இருக்கிறது என்பதை எழுதுவதற்கு மறந்துவிட்டார்'' என்று மார்க்ஸ் ஒரு முறை எழுதினார்.

மாபெரும் தலைவர்களின் தோற்றங்கள் மட்டுமல்ல, சம்பவங்களும் கூட இரண்டாவது தடவையின் போது கேலிக்கூத்தாகவே அமைந்து விடுகின்றன என்பதை அவர் ஏனோ சொல்லாமல் விட்டுவிட்டார்.

இந்தியாவின் முன்னை நாள் பிரதமர் ராஜீவ் காந்தியை கொலை செய்த குற்றத்திற்காக பிரபாகரன் மீது இந்திய உயர் நீதிமன்றம் பிடிவிறாந்து பிறப்பித்தது வரலாற்றின் முதலாவது சோகக் கதையான சம்பவம் என்றால், இரண்டாவது சம்பவமான கேலிக்கூத்தை அரங்கேற்றியிருக்கிறது இலங்கையின் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு!

ஆம், கொழும்பு மத்திய வங்கி மீதான தாக்குதலுக்குக்காரணமானவர்கள் என்று குற்றம் சாட்டப்பட்டு புலிகளின் தலைவர் பிரபாகரன், பொட்டு அம்மான் ஆகியோர் மீது கொழும்பு உயர்நீதிமன்றத்தில் வழக்கொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இது இலங்கை அரசாங்கம் புலிகளை எப்படியாவது அடக்கிவிடுவது என்பதில் தீவிரமாகவே இருக்கிறது என்பதை வெளிக்காட்டுவதாகவும், தனிப்பட்ட முறையில் பிரபாகரனை உயிருடனோ பிணமாகவோ பிடிப்பதற்கும் அப்படிச்செய்வதன் மூலம் புலிகள் இயக்கத்தை வழிக்குக் கொண்டு வந்து விடுவதற்கும் வசதியாக அமைந்துள்ளது என்றும், புலிகள் மீதான தடையை வேறொரு விதத்தில் நடைமுறைப்படுத்தவும், அவர்களைச் சர்வதேச ரீதியில் 'பயங்கரவாதிகள்' என்ற அமெரிக்க அகராதிக்கு சேர்த்து விடுவதற்கும் உதவும் என்றும் பத்திரிகைகள் கருத்து தெரிவித்துள்ளன.

புலிகளுடனான பேச்சுவார்த்தையை இனிமேல் எந்தக்காலத்திலும் நடத்தப் போவதில்லையென்பதையே அதாவது பிரபாகரனோ அல்லது பொட்டம்மானோ தலைமைப்பீடத்தில் இருக்கும் வரை நடத்தப்போவதில்லை என்பதையே இதன் மூலம் இலங்கை அரசாங்கம் வெளிப்படுத்தியிருக்கிறது என்றும், இனப்பிரச்சினைக்கு 'பேச்சுவார்த்தை மூலமாக ஒரு அரசியல் தீர்வை காணும்' நோக்கத்தை நடைமுறைச் சாத்தியமாக்குவதில் அரசுக்கு அக்கறையில்லை என்பதையே இது காட்டுகிறது என்றும் அபிப்பிராயங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

எவ்வாறாயினும், இலங்கை அரசாங்கம், பிரபாகரன் மீது தொடுத்துள்ள இந்த வழக்கிற்குப் பின்னால், இரண்டு முக்கியமான அனுமானங்களைக் கொண்டிருக்கிறது என்பது தெளிவு. அதாவது;

1. இன்று தன்னால் முன்வைக்கப்பட்டிருக்கும் அரசியல் தீர்வு இந்த நாட்டின் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கான ஒரு ஆரம்ப நம்பிக்கையைக்கூட ஏற்படுத்தக்கூடியதல்ல. குறைந்தபட்சம் அரசாங்கத்தை ஆதரிக்கும் தமிழ்க் கட்சிகளையாவது அது கவர்ந்திருக்காத பட்சத்தில் புலிகளை அது ஒரு போதும் மாற்றுவழியென நம்பவைக்கப் போதுமானதல்ல. இந்த நிலையில் புலிகளுடன் பேசுவதற்கு முயல்வதால் எதையும் சாதித்துவிடமுடியாது. ஒன்றில் புலிகள் யுத்தத்தில் தோற்கடிக்கப்பட்டு, அவர்கள் அரசாங்கத்தின் தீர்வுகள் குறித்து எதிர்ப்பைக்காட்டும் சக்தியற்றவர்கள் ஆகவேண்டும். அல்லது பேச்சுவார்த்தைக்கு போகமுடியாத ஒரு சூழ்நிலை நிலவுவதைக்காரணம் காட்டி அரசாங்கம் தான் தப்பித்துக்கொள்ள வேண்டும்.

அரசாங்கத்தைப் பொறுத்தவரை புலிகளுடன் பேசவே முடியாது என்று கூறுவதை இலங்கை அரசியல் வரலாற்றுடன் பரிச்சயமுள்ள, தனது சொந்த நலன்களுக்காக இலங்கை இனப்பிரச்சினையைப் பயன்படுத்தும் நோக்கமற்ற எந்த ஒரு நாடும் ஏற்றுக்கொள்ளப்போவதில்லை. யுத்தத்தால் புலிகளை முற்று முழுதாக நிர்மூலமாக்கி, தான் கையில் வைத்திருக்கும், தீர்வை வடக்கு கிழக்கு வாழ் மக்களது தலையில் கட்டிவிடலாம் என்பது ஒரு உடனடிச் சாத்தியமான விடயம் அல்ல என்பது அரசுக்குப் புரிந்துள்ளது.

முல்லைத்தீவு தாக்குதலும், பூநகரியை கைவிட்டு 'சத்ஜய'வுக்காக இராணுவத்தினை கொண்டு போக வேண்டிய நிலை இருப்பதுவும், இராணுவத்திற்கு பல்வேறு கவர்ச்சிகர விளம்பரங்களை செய்தும் புதிதாக ஆட்சேர்ப்பினைச் செய்வதில் அவ்வளவு சாதகமான நிலைமைகள் இல்லாததும் அரசுக்கு இவ்வாறான புரிதல் ஏற்படக் காரணங்களாகும்.

ஏற்கெனவே விடுவிக்கப்பட்டுவிட்டதாக பெரிதாக விளம்பரப்படுத்தப்படும் யாழ் குடாநாட்டில் கூட, இன்னமும் சிவில் நிர்வாகத்தையோ பிற சாதாரண நடைமுறைகளையோ நடைமுறைப்படுத்துவதற்கு அரசுக்கு பெரும் சவாலாகவே புலிகள் உள்ளனர். சிவில் அதிகாரிகளை கொண்டு காரியங்ளை ஆற்றுவது தான் சிவில் நிர்வாகம் என்று சொல்வதானால், அதைச் செய்ய ஒரு சிவில் அதிகாரிக்கு குறைந்தது பத்துபதினைந்து இராணுவமாவது காவல் நிற்கவேண்டிய நிலை. யாழ் குடாநாட்டின் சந்திகள் தோறும் இந்தியப்படை பாணியில் சிறுசிறு தடைமுகாம்களை வைத்திருக்கவேண்டியுள்ளது. குடாநாட்டை முற்றாக இராணுவ பாதுகாப்புடன் 'சிவில் நிர்வாகிப்பை' நடாத்துவதானால் குறைந்தபட்சம் அங்கு மட்டுமே ஒரு லட்சம் துருப்புகட்கு குறையாமல் வைத்திருக்கவேண்டும். இந்தியப்படையினர் அவ்வளவு ஆயுதப் படையினரையும் பெருமளவு முகாம்களையும் அங்கு வைத்திருந்தும் புலிகள் 1987 - 1988 காலப்பகுதியில் குடாநாட்டிலும் சுதந்திரமாகவே நடமாடினார்கள் என்பதை இலங்கை அரசாங்கம் நன்கு அறியும். இலங்கை அரசாங்கத்திடம் அவ்வளவு படைகள் இல்லை என்பதைத் தவிர வடக்கில் அவ்வளவு படைகளைக் குவித்தால், கிழக்கும் வன்னியும் புலிகளின் கட்டுப்பாட்டில் இருப்பதைத் தவிர்க்க முடியாது போய் விடும். ஆக புலிகளின் 'முதுகெலும்பை ஒடிப்பது' அமைச்சர் அனுருத்தவின் ஆசையென்றாலும் அது ஒன்றும் அவ்வளவு லேசான காரியம் அல்ல என்பது தெளிவு. ஆனால் இந்த நிலையில் இனப்பிரச்சினை தீர்வு, தீர்வை செயற்படுத்தல்போன்ற கோரிக்கைகட்கு முகம் கொடுக்க வேண்டிய நிலை அரசுக்கு ஏற்பட்டுள்ளது. எனவேதான் தன்னைப் பாதுகாத்துக் கொள்ள அரசுக்கு இருந்த ஒரே வழி இந்த வழக்கைத் தொடுப்பது தான்.

ஏற்கெனவே புலிகளைத் தடை செய்வது தொடர்பான சர்ச்சை எழுந்தபோது அதன்மூலம் எதைச் சாதிப்பது என்று கூறிய அரசு இப்போது வழக்குத் தாக்கல் செய்துள்ளது. இது தன்னைப்பாதுகாத்துக் கொள்வதற்கான அரசின் ஒரு தற்காப்பு நடவடிக்கை என்பதற்கு மேல் எதுவும் கிடையாது.

உண்மையில் பிரபாகரன் மீது வழக்குத் தொடுப்பது என்ற விடயம் தொடர்பாக அரசுக்கு மத்திய வங்கித் தாக்குதலின் போது மட்டும்தான் தகவல்கள் கிடைத்தது என்று இல்லை. ஜனாதிபதியை கொல்வதற்கு ஆட்களை அனுப்பியதாக அரசு அறிவித்தபோது, திருகோணமலையில் தற்கொலைக் கொலையாளிகள் எனச்சந்தேகிக்கப்படுவோர் கைதானபோது, கொலன்னாவ தாக்குதலின்போது, ஏன் காமினி திசாநாயக்கவின் கூட்டத்தில் வெடித்த குண்டுக்கு எல்லாம் வழக்குத் தாக்கல்கள் செய்திருக்க முடியும். ஆனால், அப்போதெல்லாம் செய்யாத வழக்குத் தாக்கல் முடிவை இப்போது எடுத்ததற்கு காரணம், சட்டபூர்வமாக புலிகளுடன் பேசமுடியாது என்ற ஒரு நிலையை தனக்குத்தானே உருவாக்கிக் கொள்வது அவசியம் என்று இப்போது அரசாங்கம் கருதுவதுதான் என்பதைத் தவிர வேறில்லை.

இரண்டாவது அனுமானம் இந்த வழக்கின் மூலம் பிரபாகரனையும், பொட்டு அம்மானையும் புலிகளிடமிருந்து பிரித்து விட முடியும். அப்படிப்பிரித்து விட்டால் தலைமை இல்லாத புலிகள் சிதறிப்போய் விடுவார்கள் என்பதாகும். புலிகள் அமைப்பு பிரபாகரன் என்ற தனிமனிதனைச்சுற்றியே கட்டியெழுப்பப்பட்டுள்ளதால், அவரை தனியாக கொல்லவோ, பிடிக்கவோ, முடிந்தால் புலிகள் இயக்கம் சிதறிவிடும் என்பது அரசாங்கத்தின் அபிப்பிராயம்.

இத்தகைய சிந்தனையை அரசுக்கு ஊட்டுவதில் தமிழ் முன்னை நாள் விடுதலைப் போராட்ட இயக்கங்களுக்கும் ஒரு சில தமிழ்ப்புத்திஜீவிகட்கும் பங்குண்டு. அவர்களது அபிப்பிராயத்தில் புலிகள் இயக்கம் என்பது ஒரு தனிமனிதனின் 'தனிப்பட்ட நலன்களுக்கு' அமையக் கட்டப்பட்ட இயக்கம் என்பதே. எனவே பிரபாகரன் கொல்லப்பட்டால், (இதற்காகத்தான் இஸ்ரேலிய நுண்திறன் வாய்ந்த படைக்களங்களும் தருவிக்கப்படிருப்பதாகக் கூறப்படுகிறது) புலிகள் இயக்கம் அழிந்துவிடும் என்பது அவர்களது அபிப்பிராயம். வரலாற்றில் தனி மனிதர்களின் பாத்திரத்தை அளவுக்கதிகமாகவே உயர்த்திப் பிடிப்பவர்களும், ஒரு தனிமனிதனின் சுண்டுவிரலசைவில் உலகை அசைத்து விடலாம் என்றும் பாமரத்தினமாக அல்ல, தமக்கு வசதியாக நம்புகின்ற இவர்கள் இத்தகைய ஆலோசனைகளை அரசுக்கு வழங்கியுள்ளார்கள். இது இன்னொரு புலிப்பாணிச் சிந்தனை என்பதை அவர்கள் ஏனோ மறந்துவிடுகிறார்கள். ஒரு ராஜிவ், ஒரு பிரேமதாச, ஒரு காமினி ஆகியோரின் மறைவு வரலாற்றில் எந்த மாற்றத்தையும் - அவர்கள் சார்ந்திருந்த போக்குகளில் எந்த மாற்றத்தையும் ஏற்படுத்தி விடவில்லை என்பதை இவர்கள் மறந்து விடுகிறார்கள். ஏன் சந்திரிகாவின் பதவியேற்பு கூட இலங்கை அரசின் இயல்பில் எந்த மாற்றத்தையும் ஏற்படுத்திவிடவில்லை என்பதை இவர்கள் ஒருபோதும் நம்புவதில்லை.

ஆக, பிரபாகரன் அழிந்தால் புலிகள் அழிந்துவிடும் என்பதுவும், அதற்கு வசதியாக இந்த வழக்கு அமையும் என்பதுவும் அவர்களது அனுமானம்.

ஆனால், இத்தகைய வழக்குகளின் விசாரணைகள் புலிகளுக்கு புதிதாக என்னதாக்கத்தை ஏற்படுத்தி விடப் போகின்றன? இந்தியாவில் நடந்து கொண்டிருக்கும் ராஜீவ் கொலை வழக்கு இன்னமும் இழுபட்டுக்கொண்டே போகிறது. பிரபாகரனை கைது செய்வது ஒரு புறமிருக்க, இக்கொலையை செய்வித்தவர் அவர் தானா என்பதை இன்னமும் திட்டவட்டமாக இந்திய நீதிமன்றத்தினால் தீர்மானிக்க முடியவில்லை. இலங்கையில் நடக்கப்போகும் வழக்கு விசாரணைக்கும் இதுவேதான் நடக்கப் போகிறது.

ஒருவகையில் பார்த்தால், பிரபாகரன் தலைமையிலான புலிகள் இயக்கம் செய்துள்ள பொதுமக்கள் படுகொலை, சொத்து அழிப்பு, அரசியல் தலைவர்கள் மீதான தாக்குதல்கள் போன்றவற்றிற்காக புலிகள் மீது வழக்கு தொடர்வது 'நியாயமான' தொன்றென்றால், வடக்கு கிழக்கில் இன்று இடித்து தரைமட்டமாக்கப்பட்டுள்ள சொத்துக்கள், குண்டுகளால் பொடியாக்கப்பட்டுள்ள குடிமனைகள், கொல்லப்பட்ட பொதுமக்கள், சிதைக்கப்பட்ட வழிபாட்டுத்தலங்களுக்கான காரணகர்த்தாக்களாக ஜனாதிபதி, பாதுகாப்பு அமைச்சர், முப்படைத்தளபதிகள் ஆகியோர் மீது வழக்குத் தொடரப்படுவதும் நியாயமானதல்லவா?

புலிகளும். புலிகளின் தலைவர் பிரபாகரனும் அரசுக்கெதிராக ஆயுதம் தூக்கித் தாக்குதல் செய்தார்கள் என்பதற்காக குடாநாட்டில் வீடுகளை இடித்து இன்று அணைகட்டி வைத்திருக்கிறதே அரசு அதை நியாயப்படுத்த முடியுமா? பாடசாலைகளைத் தகர்த்து, பாடசாலை மாணவர்கள் மீது குண்டு பொழிந்து ஆலயங்களை உடைத்தது எல்லாம் நியாயமாகுமா? இவற்றுக்கெல்லாம் எந்தக் கேள்வி முறையும் கிடையாதா?

உண்மையில் ஜனாதிபதிக்கு எதிராக இலங்கை அரசியலமைப்புச் சட்டத்தின் கீழ் வழக்குத் தாக்கல் செய்ய முடியாது; இலங்கை அரசாங்கச் சட்டத்தின் வரையறைக்குக் கீழ் இலங்கை அரசுக்கு அந்தச் சட்டத்தை எதிர்ப்பவர்களை அடக்க உரிமை உண்டு. இச்சட்டங்களைப் பாதுகாக்கும் கடப்பாடு மட்டுமே நீதிமன்றத்துக்கு உண்டு என்பதால், அரசாங்கம் இத்தகைய குற்றச்சாட்டுகளில் இருந்து 'யுத்தகாலம்' என்ற ஒற்றைப்பிரகடனத்தின் மூலம் தப்பித்துவிட முடியும். ஆனால் மற்றெவருக்கும் இந்த உரிமை கிடையாது!

ஆனால் பிரபாகரன் யார்? அவர் தன்னை இந்த நாட்டின் சட்டவரையறைகட்கு உட்பட்ட பிரஜையாக எப்போதாவது ஒப்புக்கொண்டிருக்கிறாரா? தாம் தமிழீழத்தின் பிரஜைகள் என்பதாலும், ஸ்ரீலங்கா அரசாங்கம் தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தாததாலும் தம்மை இந்த நீதிமன்றங்கள் விசாரிக்க முடியாது என்று முன்பொருதடவை குட்டிமணியும் தங்கத்துரையும் தெரிவித்திருந்தார்கள். இன்றைய பிரபாகரனும் அதைத்தவிர வேறெதையும் சொல்லப்போவதில்லை. உண்மையில் பிரபாகரன் ஆயுதம் ஏந்தியதற்காகவே அவருக்கு எதிராக வழக்குத் தொடர்ந்திருக்க முடியும். ஆனால், இலங்கை அரசாங்கங்கள் நடப்பிலுள்ள சட்டங்களை ஒதுக்கிவிட்டு அவர்களுடன் பல தடவை பேசியிருந்தன. அப்போதெல்லாம் ஒரு 'குற்றவாளி' யின் அமைப்புடன் பேசுவதை அவர்கள் தப்பாகக் கருதவில்லை. துரையப்பா கொலை வழக்கு உட்பட பல கொலை வழக்குகளில் பிரபாகரன் தேடப்படும் ஒரு நபராக இருந்தும் பிரபாகரனை கைது செய்யும் முயற்சியை இன்றுவரை எந்த ஆயுதப்படைகளும் செய்ததில்லை. மாறாக, அவரின் இயக்கத்தினருடன் 'பேச்சுவார்த்தை' நடாத்தியுள்ளனர்.

ஆக, மத்திய வங்கி குண்டு வெடிப்பு மட்டும் பிரபாகரனை திடீரென குற்றவாளியாக்கிவிட்டதா?

இதைவிடக் கேலிக்கூத்தான விடயம் வேறொன்று இருக்கமுடியாது. இலங்கை அரசாங்கத்தின் சமீபகால கேலிக்கூத்துக்களுக்கெல்லாம் சிகரம் வைத்தாற் போன்ற ஒரு கேலிக்கூத்து இது.

இது நாட்டின் அரசியற் சிக்கலை கேலிக்கூத்தாக்குகிறது; இதுவரை நாட்டின் இனப்பிரச்சினை தொடர்பாக ஒரு மாற்றுத்தீர்வு அவசியம் என்று கூறிவந்தவர்களின் உழைப்பைக் கேலிக்கூத்தாக்குகிறது. இவ்வளவு கால உயிர்ச்சேதம், பொருட்சேதம், எல்லாவற்றையும் ஏன். இந்த யுத்தத்திற்காக இவ்வளவு காலமும் இறந்த படைவீரர்களது ஊழியத்தையும் கேலிக்கூத்தாக்கியுள்ளது!

அரசுக்கெதிராக ஒரு குழு ஆயுதப்போராட்டத்தில் குதிக்கும்போதே அது பயங்கரவாத வழிமுறையை வன்முறையை கடைப்பிடிக்கும் 'குற்றத்தை' செய்ய ஆரம்பித்துவிடுகிறது. அரசு இதை வெறுமனே சட்டநூல்களின் சரத்துகளுக்கூடாக ஆராய்வதாக இருந்தால் அது பேச்சுவார்த்தை என்ற ஒரு விடயத்தைப்பற்றி ஒரு போதும் நினைத்தே இருக்கக்கூடாது.

ஆனால், அரசு அவ்வாறு நிர்ப்பந்திக்கப்பட்டது. தவிர்க்க முடியாமல் பேச்சுவார்த்தைக்கு போகவேண்டிவந்தது. மாற்று யோசனைகளை முன்வைத்து நிலைமைகளை சீராக்க முயலுமாறு தள்ளப்பட்டது. ஆயுதம் ஏந்திய குழுக்கள் ஆயுதத்தைப் போட்டுவிட்டு பேசவருமாறு கோரவில்லை; வரலாற்றில் அவ்வாறு நடப்பதும் இல்லை. ஆனால் அரசுகள் தான் சமரசத்தை நோக்கிப் போவது வழக்கம் அவ்வாறுதான் இங்கேயும் நடந்தது. இனியும் நடக்க வேண்டி வரத்தான் போகிறது. ஒரு பிரபாகரன் போனால் இன்னுமொரு பிரபாகரன் தோன்ற அதிக நாளாவதில்லை. இது தவிர்க்க முடியாத விதி. எனவேதான் சமரமுயற்சியை சமாதான விரும்பிகள் முன்மொழிகிறார்கள்.

ஆனால், இன்றைய அரசாங்கத்திற்கு இப்போது இவையெல்லாம் மறந்து விட்டது.

அமெரிக்காவின் புதிய 'பயங்கரவாத ஒழிப்பு' திட்டத்தின் ஒரு தீவிர சகாவாக தன்னையும் இணைத்துக்கொள்வதில் இப்போது அதற்கு நாட்டம் வந்துவிட்டது. அதன் ஒரு வெளிப்பாடுதான் இந்தக் கேலிக்கூத்து! சர்வதேச பயங்கரவாதியான அமெரிக்கா, ஆக்கிரமிப்புக்கும், மனிதப் படுகொலைக்கும் சூழ்ச்சிக் கொலைகட்கும் பெயர் போன தனது 'ஜனநாயகத்தை' பொ.ஐ.மு. அரசாங்கத்திற்கும் வழங்கியுள்ளது. தனது கையாலாகாத்தனத்திற்கு மாற்றுவழி தெரியாத இந்த அரசாங்கமும் 'அமெரிக்காவின் குரலை' ஓங்கி ஒலிக்கிறது.

இலங்கையை தனது இந்தியப் பிராந்திய நலன்களுக்காக பாவிக்க விரும்பும் அமெரிக்கா, ஆயுதப்பயிற்சி நிதிஉதவி போன்றவற்றின் மூலமாக இலங்கையையும் தனது 'விவிலியத்தை' ஓத வைத்துள்ளது.

அமெரிக்க 'விவிலியத்தை' ஓதியவர்கள் எல்லோரும் அதன் நலனுக்காக உரமாகிப்போனதுதான் வரலாறு.

அந்தப் பட்டியலில் இப்போது சேர்ந்திருக்கிறது இலங்கை.

ஆக, பொ.ஐ.மு. எம் நாட்டு மக்களுக்கு இதன் மூலம் வழங்கியிருப்பது எல்லாம் இதுதான்.

முடிவுறாத யுத்தம்; முடிவுறாத அழிவு; முடிவுறாத துயரம்.

மொத்தத்தில் சந்திரிகாவின் 'சமாதானப் புறா' கழுகாக மாறிய தன்விளைவாக இப்போது நடந்திருக்கும் மாபெரும் கேலிக்கூத்து சம்பவம்தான் இந்த வழக்கு!

இந்தப் பந்தியை மார்க்ஸின் மேற்கோளுடன் தொடங்கினேன். அவருடைய மேற்கோளுடனேயே இதனை முடிப்பது பொருத்தமாக இருக்கும். ஒரு சிறு திருத்தம். 'பொனபார்ட்' என்ற இடத்தில் சந்திரிகா என்று போட்டு வாசியுங்கள்.

*''பொனபார்ட் தன்னுடைய நிலைமையின் முரண்பட்ட தேவைகளினால் துரத்தப்பட்டு, அதே சமயத்தில் நெப்போலியனின் பதிலாள் என்ற முறையில் பொதுமக்களின் கவனத்தை தன்னிடமே நிலையாக வைத்திருக்க வேண்டும் என்ற தேவையினால் ஒரு மந்திரவாதியைப் போல் ஆச்சரிய மேற்படுத்தக் கூடிய காரியங்களை தொடர்ச்சியாக செய்து கொண்டிருக்கிறார்.*

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சொல்வதைத்தவிர வேறு வழியில்லை

# ஆக்கிரமிப்பாளர்கள் திருமலையில் போர்க்கொடி

அபூதிரா

தமிழ் பேசும் மக்களுடைய தாயக பூமியை ஆக்கிரமிக்கும் நோக்குடன் திட்டமிட்டு செயற்பட்டு வரும் சிங்கள இனவாத அரசியல்வாதிகளும் அவர்களுடைய மேலாதிக்க ஆக்கிரமிப்பு சக்திகளும் கிழக்கில் அம்பாறையையும் திருமலையையும் சிங்கள ஆக்கிரமிப்பு விஸ்தரிப்புவாதத்திற்கு உட்படுத்தி, அங்குள்ள தமிழ்,முஸ்லிம் மக்களின் வளங்களையும், நிலங்களையும், வாய்ப்புக்களையும் விழுங்கிவிட்ட சூழலில், இன்று திருமலை மாவட்டம் மேலாதிக்க ஆக்கிரமிப்பாளர்களின் தாயகபூமியென போர்க்கொடி தூக்கும் மண்ணாகிவிட்டது.

திருத்தலமான திருக்கோணஸ்வரர் பூமி இன்று சிங்கள ஆக்கிரமிப்பாளர்களின் கூடாரமாயிற்று! தென்னிலங்கை சிங்கள கரையோரக் கிராமங்களிலிருந்து அரச பிக்குகளின் ஆதரவுடன் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த பிரதேசங்கள் தமிழ் முஸ்லிம்களின் மாவட்டம் என்ற நிலையை மாற்றி சிங்கள பெரும்பான்மையினரைக் கொண்ட மாவட்டமாக ஆக்கிரமிக்கப்பட்டுவிட்டது.

1920ம் ஆண்டின் திருமலை மாவட்ட மொத்த மதிப்பீட்டில் 10 வீதத்திற்கும் குறைவாக இருந்த சிங்கள மக்கள் 1981ம் ஆண்டின் குடிசன மதிப்பீட்டின் படி 33.4 சதவீதமாக இன்று உள்ளனர். உண்மையிலும் இத் தொகையானது சரியான மதிப்பீடல்ல, இதைவிடவும் கூடிய தொகையான சிங்களவர்களே இன்று இம்மாவட்டத்தில் வசிக்கின்றனர். 1981ம் ஆண்டு குடிசன மதிப்பீட்டு அறிக்கை வெளியானவுடன் அன்றைய ஐக்கிய தேசியக் கட்சியின் சிரேஷ்ட அமைச்சராக இருந்த லலித் அத்துலத் முதலி சிங்கள மக்கள் வாழும் ஒரு பிரதேசத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் ''திருமலை மாவட்டம் இப்போது சிங்கள மக்கள் அதிகமாக வாழும் மாவட்டமாகி விட்டது. ஆனால் இதனை நாம் சொன்னால் தமிழர்கள் அஞ்சுவார்கள். ஆகவே நாம் சிங்கள மக்களின் தொகையை குறைத்தே சொல்லியிருக்கிறோம்'' என்று கூறிய கருத்து கவனிக்கத்தக்கது.

இன்று அம்மாவட்டத்தில் 81ம் ஆண்டின் குடிசன மதிப்பீட்டின்படி சிங்களவர்கள் 85 ஆயிரமாகவும், தமிழர்கள் 87 ஆயிரமாகவும் முஸ்லிம்கள் 75 ஆயிரமாகவும் (ஆயிரத்தில் கிட்டிய தொகை) வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். 1950ம் ஆண்டிற்குப் பிறகு திட்டமிட்டு முடுக்கி விடப்பட்ட சிங்களக் குடியேற்றங்கள், அரச நிலங்கள், கோயில் காணிகள், பள்ளிவாசல் நிலங்கள், தமிழர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் சொந்தமான தனியார் காணிகள் என்பவற்றிலேயே நடைபெற்று வருகிறது. விகிதாசார அடிப்படையில் கூட காணிகள் பகிர்ந்தளிக்கப்படாமல், யுத்த சூழலைக் காரணமாக வைத்து அரச படைகளின் ஆதரவுடன் அரசாங்கம் சிங்களக் குடியேற்றங்களை ஸ்தாபித்து வருகிறது. தமிழர்களினதும், முஸ்லிம்களினதும் காணிகளை பலாத்காரமாக சுவீகரித்து சிங்களவர்களுக்கு வழங்குவதும், வங்கிக்கடன், தொழில் வாய்ப்பு, வசதிகளை அளித்து சிங்கள குடியேற்றவாசிகளுக்கு துப்பாக்கிகளும் அளித்து இக்குடியேற்றங்களை அரசு ஊக்குவித்தும் பாதுகாத்தும் வருகிறது.

இந்துக்களின் புனிததலமான திருக்கோணஸ்வரர் பூமியைச் சுற்றி 40க்கும் அதிகமான சிங்களக் குடும்பங்களைக் குடியேற்றி இருக்கிறது அரசு. திருக்கோணஸ்வரர் ஆலயத்தையும் இராணுவம் ஆக்கிரமித்திருப்பதுடன் அங்கு மத வழிபாடுகளை மேற்கொள்வதற்கும் மட்டுப்படுத்தப்பட்ட உரிமையையே அரசு வழங்கியிருக்கிறது. முஸ்லிகளுக்குச் சொந்தமான ஒரு மையவாடியை சிங்களவர்கள் ஆக்கிரமித்து இருக்கிறார்கள். ''லவ்லேன்'' போன்ற பிரதேச தமிழ் முஸ்லிம் மக்கள் அகதிகளாக்கப்பட்டு அகதி முகாம்களில் வாழ்ந்து கொண்டிருக்கும் சூழலில் அம்மக்களின் கண்முன்னாலேயே அவர்களின் வாழ்விடங்கள் சிங்கள ஆக்கிரமிப்பாளர்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டிருக்கிறது. இதை எதிர்த்து இம்மக்கள் உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்த போது உயர் நீதிமன்றம் இச்சிங்களவர்களை வெளியேறுமாறு பணித்தும் அரசும், அதன் இராணுவமும் உயர் நீதிமன்ற தீர்ப்பை உதாசீனம் செய்து விட்டிருக்கிறது.

திருகோணமலை மாவட்டத்தில் சிங்களவர்களாக மாத்திரம் இருப்பதனாலது மட்டுமே சகல அந்தஸ்துகளையும் பெற்றுத் தரும் என்ற நிலையே இருக்கிறது. அரச அனைத்து உதவிகளும் பராமரிப்புகளும் சிங்களவர்களுக்கு மட்டுமே என்றாகி விட்டது. திருமலை நகரத்தின் வியாபாரம் சிங்களவர்களின் கைக்கு மாறிவிட்டது. தமிழர்களுக்கும், முஸ்லிகளுக்கும் வியாபார வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு படையினர் பெரும் தடையாக விருக்கின்றனர். திருமலை மாவட்டம் சிங்கள விஸ்தரிப்பு வாதத்தால் ஆக்கிரமிக்கப்பட்ட ஒரு பூமியாயிற்று. கிழக்கில் அம்பாறையையும், திருமலையையும் தமிழ் மக்களும் முஸ்லிம் மக்களும் இழந்து விட்டனர். மட்டக்களப்பு மாவட்டம் மட்டுமே இப்போது எஞ்சியிருக்கிறது. அதுவும் மகாவலி போன்ற குடியேற்ற தந்திரோபாய நடவடிக்கைகளினால் விழுங்கப்படும் சூழல் உண்டு. தற்போதைய விடுதலைப் புலிகளின் யுத்தத்தினால் ஓரளவு காப்பாற்றப்பட்டு இருக்கிறது. இருந்தும் மட்டக்களப்பு மாவட்டத்தில் 15சதவீதத்திற்குள்ளான நிலங்கள் வெலிக்கந்தையூடாக அபகரிக்கப்பட்டே இருக்கிறது.

இவ்வபாயகரமான ஆக்கிரமிப்புக்கெதிராக தமிழ் முஸ்லிம் மக்கள் ஒன்றிணைந்து குரல் கொடுத்து, சிங்கள ஆக்கிரமிப்புக் கெதிராக போராட வேண்டியிருக்கிறது. தமிழ் முஸ்லிம் அரசியல் சக்திகள் இதற்கெதிராக ஒரு தீர்க்கமான போராட்டத்தை இதுவரை முன்னெடுக்கவில்லை. இந்நிலை தொடர்பாக கூட்டணியும் முஸ்லிம் காங்கிரசும் மௌனம் சாதித்தே வருகின்றன. அங்கிருக்கும் ஓரிரு தமிழ்க் கட்சிகள் தவிர்க்கவியலாமல் இதற்கெதிராகக் குரல் கொடுத்த போது இப்போது சிங்கள ஆக்கிரமிப்பாளர்களால் அச்சுறுத்தப்பட்டிருக்கின்றனர். இந்நிலையானது எமது தாயகபூமி தொடர்பான எதிர்கால நம்பிக்கையை சிதைத்து விட்டிருக்கிறது.

அண்மையில் நடந்த சம்பவங்கள் இச்சிங்களக் குடியேற்றங்களை தடுத்து நிறுத்தும் சக்தி ஜனநாயக சூழலில் உள்ள அமைப்புக்கு முடியாத ஒன்றாகிவிட்டதா என்ற கேள்வியை எழுப்புகிறது. திருமலை கூட்டணி பாராளுமன்ற பிரதிநிதி தங்கத்துரை இது தொடர்பாக காத்திரமான தடுப்பாடுகளை இதுவரை மேற்கொள்ளவில்லை. மண்ணைப் பாதுகாப்போம் என்பது வெறும் அரசியல் மேடைகளில் உணர்ச்சி தரும் தேர்தல் கோஷமாக மட்டுமே உள்ளது.

வரலாற்றில் கூட்டணி விட்ட தவறானது திருமலை பறிபோவதற்கான ஒரு அடிப்படைத் தவறாகி விட்டிருக்கிறது. 1922இல் பொத்துவிலில் ஒரு தமிழர் பிரதிநிதித்துவத்தை பெறுவதற்காக மூதூர் இரட்டை அங்கத்தவர் தொகுதியை மாற்றி சேருவில தொகுதியை சிங்களவர் பெறுவதற்கான ஆதரவை கூட்டணியினர் வழங்கினர். இவர்கள் பாராளுமன்றத்தில் இருக்கும் போதுதான் சேருவில தொகுதி ஏற்படுத்தப்பட்டது.


சேருவில தொகுதியானது தெஹிவத்த, கஙகுவேலி, மேன்காமம், கொலனி 76 போன்ற பாரம்பரிய தமிழ்க்கிராமங்களை ஆக்கிரமித்தே உருவாக்கப்பட்டிருக்கிறது. இத்தொகுதி உருவாக்கமானது தமிழர்களின் நீண்ட கால அரசியல் பிரதிநிதித்துவத்தை பாதித்திருப்பதற்கும், திருமலையை இழப்பதற்குமான அதிக வாய்ப்பை தந்தது;

திருமலை மாவட்டம் 1983, 1985, 1990ம் ஆண்டுகளில் இராணுவத்தின் ஆதரவுடன் சிங்கள மக்களின் ஆக்கிரமிப்புக்குள்ளாகி இருக்கிறது திருமலை. தமிழ் மக்கள் மீதான படுகொலைகள், சொத்துக்கள் வீடுகள், அழிப்பு என பாரிய பொருளாதார இழப்புக்களை இம்மக்கள் சந்தித்து இருக்கின்றனர். பலஸ்தீன மண்ணை இஸ்ரேலிய ஆக்கிரமிப்பாளர்கள் ஆக்கிரமித்தது போன்று ஆக்கிரமிப்பு திருமலை மாவட்டத்தில் நடந்திருக்கிறது. இக்கலவரங்களுக்கும், ஆக்கிரமிப்புக்களுக்கும், காணி அதிகாரி பீரிசும், அவர்சார்ந்த பௌத்த பிக்குகளும் காரணமாய் இருந்திருக்கின்றனர். கோயில் காணிகளில் சிங்களவர்களை குடியேற்றுவதனை நியாயப்படுத்தி வந்தவர் தான் இந்தப் பீரிஸ்!


பீரிஸ் என்ற காணி அதிகாரி திருக்கோணமலை மாவட்டத்தில் வதியும் சிங்கள மக்களின் இரட்சகன். சிங்கள குடியேற்ற திட்ட விஸ்தரிப்பு வாதத்தின் ஒரு குறியீடு , பீரிஸ் அண்மையில் திருமலையில் இனந்தெரியாதவர்களால் சுட்டுக் கொல்லப்பட்டு இருக்கிறார். பீரிசின் இழப்பானது அங்குள்ள சிங்களவர்களின் மனதில் ஒரு நாயகனை இழந்த தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது. இச்சூழலில் பௌத்த பிக்குகள், சிங்கள முதலாளிகள், சிங்கள காடையர்கள், அரச படைகள் அங்குள்ள மக்களை அச்சுறுத்தத் தொடங்கியுள்ளனர்.

திருமலை தங்களது பாரம்பரிய பூமி எனவும், தமிழர்கள் தங்களை வாழ விடுகிறார்கள் இல்லை எனவும் இப்போது போர்க்கொடி தூக்குகின்றனர். தங்களது குடியேற்றங்களுக்கும் ஆக்கிரமிப்பு அதிகாரத்திற்கும் தடையாகவுள்ள சக்திகளை திருமலையில் இருந்து துரத்தி அடிக்கப்போவதாகவும் போர்க்கொடி தூக்கியுள்ளனர். இதில் முன்னணியில் இருப்பவர்கள் பௌத்த பிக்குகளும் ஊள்ளூர் சிங்கள அரசியல்வாதிகளுமே. திருமலை இப்போது தமிழ் முஸ்லிம் மக்களுக்கு எதிரகாக தொடர்பாய் அச்சம் தரும் மண்ணாகிவிட்டது.

சிங்கள இனவாத அரசியல்வாதிகளும் பௌத்தபிக்குகளும் தங்களின் கடமையை ஒழுங்காகச் செய்கிறார்கள். எம்மக்கள் தொடர்பாய் எமது அரசியல் தலைமைகளும் எமது சக்திகளும் எப்போது தங்கள் கடமைகளை ஒழுங்காகச்செய்யப் போகிறார்களோ?




---



# முஸ்லிம் கட்சி எதன்மீது பயணம் ?

பாரதா

இலங்கை முஸ்லிம்களது அரசியல் வரலாற்றில் முஸ்லிம் காங்கிரஸது தனித்துவம் மிகு அரசியல் பிரவேசம் ஒரு முக்கிய மைல்கல்லாகும். இஸ்லாம் என்ற மதசுயத்துவ அடையாளத்தினை மூலவேராகக் கொண்டு தன்னை உரப்படுத்தி இன்று பேரம் பேசும் சக்தியாகவும், மூன்றாம் தேசிய இனம் என்ற அடையாளத்திற்கான காரணியாகவும் அது அமைந்திருக்கிறது என்பதனை மற்றெல்லா விமர்சனங்களையும் பின்தள்ளிவைத்துவிட்டு கருத்திற்கொள்ளவேண்டியதாகும்.

இந்த முஸ்லிம் காங்கிரசின் ஆரம்பகால வளர்ச்சிகளில் முஸ்லிம் மக்களை கவர்ந்திழுக்கின்ற அவர்களின் அடிப்படை உணர்வுகளை தட்டியெழுப்புகின்ற பிரச்சாரப்பாணிகள் பல கையாளப்பட்டன என்பது எல்லோரும் அறிந்த விடயம். இதற்கு சமூகத்தின் முக்கிய இஸ்லாமியக்கல்விமான்கள் பயன்படுத்தப்பட்டதும் கட்சியரசி யல் பற்றிய இஸ்லாமியக் கண்ணோட்டங்கள் இவர்கள் மூலம் ''மக்களுக்கு ''மட்டும்'' வழங்கப்பட்டு இஸ்லாமிய உணர்வுகள் ஊட்டப்பட்டதும் நாமறிந்த ஆரம்ப வரலாறு.

இன்று பல கட்டங்கள் தாண்டி ''இது தாண்டா அரசியல்'' என்கிற பாணியில் முஸ்லிம் காங்கிரஸ் ஸ்திரப்பட்டிருக்கிறது. அண்மைய சர்ச்சைக்குள்ளாகியிருக்கும் வடகிழக்கு ஒருங்கிணைப்புக்குழு என்ற ஓர் விடயத்திலும் முஸ்லிம் காங்கிரசின் அதிகாரம் மிகு தலையீட்டைக் காணக்கூடியதாயிருக்கிறது.

இந்தக் கதைகள் பழையவைதான்; எனினும் ஓர் இனத்தின் படிப்பினை மிகு வரலாறு. அரசியல் அதிகாரங்கள் இவ் வகையான இறந்த காலங்களை மறக்கடிக்கச் செய்யினும், எப்போதும் ஒன்று போலல்லாத நிகழ்வுகள் இவற்றினை ஞாபகப்படுத்திக்கொண்டேயிருக்கின்றன.

### முஸ்லிம் கட்சியின் அரசியல் பிரவேசம்.

கடந்து போனவரலாற்றினை தற்போது ஞாபகப்படுத்துவதில் முஸ்லிம் கட்சியின் அரசியல் பிரவேசம் ஒரு முக்கிய பங்களிப்பைச்செய்கிறது. முஸ்லிம்காங்கிரசின் முக்கியஸ்தர்களில் சிலர் (இவர்களில் பலர் கட்சியிலிருந்து விலகியவர்கள், விலக்கப்பட்டவர்கள் இதற்கான காரணங்களும் வெவ்வேறுவிதமானவை வெளியே சரியாகத் தெரியாதவையும் கூட) இக்கட்சியினை ஸ்தாபிப்பதிலும், வளர்த்துச் செல்வதிலும் கரிசனையாக ஈடுபட்டிருக்கிறார்கள். இவர்கள் தங்கள் கட்சியினை வளப்படுத்துவதற்கான முக்கிய உரமாகப் பயன்படுத்துவது முஸ்லிம் காங்கிரஸ் பற்றிய எதிர்ப்புப் பிரச்சாரத்தையே! இதற்கு தேர்தல் மேடைகளும், முஸ்லிம் கட்சிப்பத்திரிகையும் பிரசுரங்களும் சாட்சியாகும்.

''...முஸ்லிம் காங்கிரஸ் சொன்ன பொய்களும் ஏமாற்றங்களும் எங்களுடைய உண்மைகளுக்கும் நேர்மைகளுக்கும் மேலால் உங்களுடைய கண்களுக்கு பகட்டாகத் தெரிந்து உங்களை ஏமாற்றியது....''

''அற்பத்தனமான மந்திரிப்பதவிகளுக்கும், இரவல்தனமான பா.உ பதவிகளும் முஸ்லிம் சமூகத்தைக் காட்டிக்கொடுத்து முஸ்லிம் சமூகத்தின் அப்பாவிப் பொதுமக்களுடைய பெரும் நெருப்பை நான் கட்டிச் சுமந்துவிடக்கூடாதென்று நான் இறைவனிடம் மன்றாட்டமாகப் பிரார்த்திக்கிறேன்...''

என்றெல்லாம் பேசி மக்களிடையே தன்னை இனங்காட்ட ஆரம்பித்துள்ளது. இது தவிர முஸ்லிம் கட்சியின் ஸ்தாபகத் துணைத் தலைவராக இனாமுல்லாஹ் என்ற இஸ்லாமிய கற்கைகளில் சிறப்புப் பட்டம் பெற்ற ஒருவரும் செயற்படுகிறார். இவரின் பேச்சுக்களில் இஸ்லாமிய நிலைப்பாட்டின் அவசியம் வலியுறுத்தப் படுவதோடு ஓர் அரசியல் கட்சியோடு இணைந்து இஸ்லாமியக் கொள்கைகளை முன்னெடுப்பதற்கான வழிவகைகளும் உணர்த்தப்படுகிறது. எனினும் இது தொடர்பான இஸ்லாமிய அழைப்பு இயக்கங்களின் கருத்து மாறுபட்டதாக வேயுள்ளது. அது மட்டுமன்றி பெரும்பாலானவர்களது கருத்து இஸ்லாத்தின் பெயரால் அரசியல் பிழைப்பு நடத்துபவர்களுக்கு எதிரானதாகவுமேயுள்ளது. இது முஸ்லிம்களுக்கான கட்சியின் ஆரம்ப வரலாறுகளிலிருந்து பெறப்பட்ட படிப்பினையாக இருக்கலாம். மக்கள் பெற்றுக் கொண்ட இவ்வாறான படிப்பினைகளுக்கு மத்தியில் முஸ்லிம் கட்சி தன்னை மீண்டும் அவ்வாறானதொரு நிலைப்பாட்டிலேயே கொண்டு செல்லவும் தொடங்கியுள்ளது. இதற்கான காரணம் இஸ்லாமிய அடிப்படைகளில் ஆழ்ந்த அக்கறை செலுத்தாத வெறும் கட்சி அரசியலை முஸ்லிம்கள் பெரிதாகக் கணக்கெடுக்க மாட்டார்கள் என்பதாகும்.

இதனால்தான் படிப்பினைகள் பெற்றும் கூட மீண்டும் மீண்டும் முஸ்லிம்களை பயன்படுத்தமுடியுமாயிருக்கிற அரசியலை நடாத்த முஸ்லிம் தலைவர்களால் முடியுமாயிருப்பது.

முஸ்லிம் கட்சியின் ஸ்தாபகர் தனதுரையொன்றில்.... ''வெறுமனே பெயரில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியென்று வைத்துக்கொண்டு வெறுமனே சில பிரதிநிதித்துவங்களுக்காக அரசியல் தேர்தல்களை குறியாக வைத்துக்கொண்டு நிற்கும் ஒரு குறிக்கோளை மட்டும்தான் முஸ்லிம் கட்சிகள் வைத்துக்கொண்டிருக்குமானால் என்னுடைய கை சேதமே...'' என்றும்,

→16

www.tamilarangam.net



## அரசியல் குறிப்புகள்:

# தமிழ் குழுக்களுக்கு தலையி(லி)டி

# தமிழர்கள் யாரிடம் வழக்கு தொடர்வது?

# இராணுவம் கண்டு பிடித்த கிரனைட்?

ச.பாலகிருஷ்ணன்.

கடந்த இருவருடகால பொதுஜன ஐக்கிய முன்னணி ஆட்சிக்காலத்திற்குள் அமைதிப்புரட்சியின் மூலம் பூரண ஜனநாயக ஆட்சியை இலங்கையில் நிலைநாட்டி உள்ளதாக வர்ணனை செய்துவரும் ஜனாதிபதி சந்திரிகா அணிந்துள்ள ஜனநாயக முகமூடி சிறிது சிறிதாகக் கழன்று வருவதைக் காணக்கூடியதாக இருக்கின்றது.

சந்திரிகா அரசின் இன உறவு தொடர்பான செயற்திட்டங்கள் அவரின் சமாதானத்துக்கான யுத்த நடைமுறைகள் என்பன இவ்வரசின் பேரினவாத போக்குகளை நிரூபிக்கக்கூடிய வகையில் அமைந்திருப்பதற்கான பல தகவல்கள் வெளிவந்து கொண்டிருக்கின்றன.

இரு வாரங்களாக ஈ.பி.டி.பி கட்சியினருக்கும் அரசாங்கத்தின் பொலிசாருக்கும் இடையில் திருகோணமலையில் ஏற்பட்டுள்ள முரண்பாடும் இம்முரண்பாடு தொடர்பாக அரசு காட்டிவரும் அலட்சியத்தன்மையும் வடகிழக்கு தொடர்பாக இவ்வரசு கொண்டுள்ள உள்நோக்கத்தை வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளது.

ஜனாதிபதி பிரேமதாச ஆட்சிக்காலம் முதல் விடுதலைப்புலிகளை இல்லாதொழிக்கும் நோக்கில் அரசின் சிங்கள இராணுவத்திற்கும் பேருதவியாக நூற்றுக்கணக்கான இளைஞர்களை பலவந்தமாக அணிதிரட்டி போர்க்களத்தில் இராணுவத்திற்கு உதவியாக அனுப்பியவர்கள் ஈ.பி.டி.பியினர் என்பது யாவரும் அறிந்த விடயமே. இச்செயற்பாட்டின் காரணமாகப் பல நூற்றுக்கணக்கான இளைஞர்கள் பலியாவதற்கும் இவர்கள் வழிவகுத்துள்ளார்கள்.

இவ்வரசு பதவிக்கு வந்தது முதல் அதன் அனைத்து நடவடிக்கைகளையும் நேரடியாகவும் மறைமுகமாகவும் ஆதரித்து இவ்வரசுக்குப் பக்கபலமாக செயற்பட்டு வருகின்றனர் என்பதுவும் இரகசியமல்ல. இதன் மூலம் தமது பாதுகாப்பு உட்பட இடைக்கால தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வதற்கு அரசாங்கங்களின் ஆதரவையும் பயன்படுத்திக் கொள்வதிலேயே இவர்கள் பெருமுனைப்பாக இருந்தனரேயன்றி தமிழ் மக்களின் எதிர்கால நலன்களையும், பேரினவாதப்பிடியிலிருந்து அவர்களை விடுவிப்பதையும் நோக்கமாகக்கொண்ட நீண்ட கால செயற்திட்டத்தின் இணக்கப்பாட்டுடனான புரிந்துணர்வின் அடிப்படையில் இவ்வுறவுகள் பேணப்படவில்லை.

இவ்வகையான சந்தர்ப்பவாதத்தை அடிப்படையாகக்கொண்ட உறவு முறைகளானது நிலைத்திருக்கக்கூடியவை அல்ல என்பதுவும், இவை இருதரப்பினர்களதும் தேவைகள் இலாபங்கள் கருதி மாறுபடக்கூடியவை என்பதையும் சந்திரிகா அரசின் அண்மைக்காலப் போக்குகள் மிகத்தெளிவாக எடுத்துக்காட்டுகின்றன. கிழக்கு மாகாணத்தில் செயற்படும் ரெலோ, புளொட் போன்ற அமைப்புகளுக்கு அரசு வழங்கியுள்ள ஆயுதங்களை மீளப்பெறுவதற்கான அரசின் உத்தரவானது சிங்களப் பேரினவாதத்தின் தாக்கத்திற்கு உடன்படுவதற்கான இவ்வரசின் தயார் நிலையை மிகத் தெளிவாகக் காட்டுகின்ற மற்றுமொரு அம்சமாகும்.

புலிகளுக்கு எதிராக நின்று அரச இராணுவத்தினருக்கு உதவிபுரிவதன் இணக்கப்பாட்டுடன்தான் இவர்களுக்கு ஆயுதங்கள் வழங்கப்பட்டன. இவ்வாயுதங்களின் மூலம் இவர்கள் தங்களுக்கு பாதுகாப்பை ஏற்படுத்திக்கொண்டனர். இவ்வாயுதங்களைப் பாவித்து தவறான செயல்களை இவர்கள் செய்திருந்தால் அவை தொடர்பாக முறையாக விசாரணை செய்து அத்தோடு இவ்வாயுதங்களை மீளப்பெறுவதற்கான இணக்கப்பாட்டைப் பேச்சுவார்த்தைகளின் மூலம் அடைதல் வேண்டும். இவற்றை விடுத்து தமிழர்கள் தொடர்பான எல்லா விவகாரங்களிலும் பலாத்கார வழிவகைகளிலேயே செயற்படுவது என்னும் தமது போக்கை இவ்வரசு மீண்டும் ஒரு முறை நிரூபித்து விட்டது.

புளொட், ரெலோ, ஈபிடிபி போன்ற அமைப்புகளை அரசின் மடிக்குள் தள்ளியது புலிகளின் எதேச்சதிகார நடவடிக்கைதான் என்பதும் இதன் மூலம் இவ்வமைப்புகளின் உடனடி எதிரியாக விடுதலைப் புலிகள் விளங்குகின்றார்கள் என்பதுவும் யாவரும் அறிந்த விடயமே. ஆனால் இம்முரண்பாட்டின் மூலம் தமிழ் மக்களின் பிரச்சினை மேலும் சிக்கலானதே ஒழிய தீர்விற்கு சாதகமான எவ்வித பங்களிப்பையும் செய்யவில்லை. தமது ஒன்பது வருடகால ஜனநாயக அரசியலின் மூலம் தாம் அடைந்தது ஒன்றும் இல்லை என முன்னைநாள் தமிழ் ஆயுதக்குழுக்கள் வெளிப்படையாகக் கூறியுள்ள கூற்றையும் இங்கு கவனித்தல் வேண்டும்.

புலிகளுக்கு எதிராக பலவழிகளிலும் செயற்பட்டு வந்த இவர்களால் பேரினவாதத்தை எதிர்த்து செயற்பட முடியாது என்ற நிதர்சனமான உண்மையை ஏற்றுக்கொள்ள வேண்டிய நிலைக்கு இவர்கள் தள்ளப்பட்டுள்ளார்கள்.

தமிழ் அரசியலில், தமிழ் அமைப்பாக இவர்கள் செயற்பட வேண்டுமேயானால், அவர்களின் செயற்பாடுகள் தமிழ் மக்களின் விடுதலையையும் தமிழர்களின் எதிர்கால நலன்களையும் நோக்காகக் கொண்ட கூட்டுச் செயற்திட்டத்தின் ஒரு அங்கமாக செயற்படுவதன் மூலம் இவர்களால் நிலைத்திருக்க முடியுமேயொழிய, பேரினவாதத்திற்கு சவாலாக அமையாத எந்த ஈடுபாடுகளின் மூலமும் இவர்களின் எதிர்காலம் பாதுகாப்பாக அமையாது என்பதையும் இவர்கள் உணர்ந்து செயற்படுவது நல்லது.

### *விடுதலைப் புலிகளுக்கு எதிரான வழக்கு*

இலங்கை மத்திய வங்கியை குண்டு வைத்து தாக்கியது தொடர்பாக பிரபாகரன் உட்பட விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் சிலருக்கு எதிராக கொழும்பில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 7 குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ள இவ்வழக்கில் குண்டு வெடித்ததினத்தன்று கைதானதாகக் கூறப்படும் இரு தமிழ் இளைஞர்களையும் இவ்வழக்கில் சேர்த்துள்ளனர். அரசின் இந்நடைமுறையானது பேச்சு வார்த்தை மூலமான தீர்விற்கு அரசு தயார் என்ற நிலைப்பாட்டுக்கு முரணாகவும் இராணுவ முனைப்பிலேயே முழுக்கவனத்தையும் செலுத்திவரும் இவ்வரசின் உள்நோக்கத்தை உறுதிசெய்வதாகவும் அமைந்துள்ளது.

மத்திய வங்கிக்கட்டிடம் மட்டுமல்ல பெற்றோலியக்கூட்டுத்தாபனம், எண்ணெய்க் குதம் மீதான தாக்குதல் உட்பட பல பாரிய தாக்குதல்களை விடுதலைப்புலிகள் நடத்தியிருக்கின்றனர். இதுபோன்ற மிலேச்சத்தனமான யுத்தம் நடைபெறும் போது இராணுவ இலக்குகள் மட்டுமல்ல அரசியல் பொருளாதார இலக்குகளையும் குறிவைத்து தாக்குவது ஒன்றும் புதிய விடயமல்ல. இலங்கையின் இந்த யுத்தத்தில் இருசாராரும் பொதுமக்களையும் கலாசார நிறுவனங்களையும் அறிவியல் கூடங்களையும் கூட தமது இலக்காகக் கொண்டு தாக்குதல் நடத்தி வருகின்றமை யாவரும் அறிந்த விடயமே. ஆனால் ஆளும் கட்சியினரின் தேவைகளையும் பேரினவாதத்தின் தேவைகளையும் அடிப்படையாகக்கொண்டு மேலெழுந்த இந்த யுத்தத்தைப் பாதுகாத்துக்கொள்வதை நோக்கமாகக்கொண்டு அவசரகால விதிமுறைகளும் பயங்கரவாதத் தடைச்சட்டமும் ஏற்படுத்தப்பட்டன. தமிழர்களின் எதிர்ப்புகளுக்கு மத்தியில் ஏற்படுத்தப்பட்ட இச்சட்டங்களானது இம்முரண்பாட்டில் பேரினவாதத்தின் தேவைகளையும் தமிழர்களுக்கெதிராக பாதிப்புக்களை ஏற்படுத்துபவர்களைப் பாதுகாப்பதையும் எல்லாத் தமிழர்களும் புலிகள் என்ற அடிப்படையில் பேரினவாத அடக்கு முறைகளைத் தமிழ் மக்களின் மீது கட்டவிழ்த்து விடுவதை சட்டரீதியில் நியாயப்படுத்துவதற்கும், அடக்குமுறையாளர்களைப் பாதுகாக்கவுமே இச்சட்டங்கள் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளன. நீதித்துறையை அவமானத்துக்கு உட்படுத்திய இச்சட்டங்களின் அடிப்படையில்தான் இந்த வழக்கும் தொடரப்பட்டுள்ளது. தவறு செய்துள்ளவர்கள் எனச்சந்தேகிக்கப்படுபவர்களைக் கைது செய்து நீதிமன்றத்தின் முன் நிறுத்த முடியாத ஒரு சூழ்நிலையில் இவ்வழக்கு தொடரப்பட்டுள்ள நிலைமையானது சந்திரிகா அரசின் மற்றுமொரு அரசியல் நாடகமாகவே அமைந்துள்ளது.

அரசியல் தீர்வுப் பிரேரணைகளைக் கையில் வைத்துக்கொண்டு அவற்றை நாளுக்கு நாள் சிங்கள இனவாத நலன்களின் அடிப்படையில் மாற்றிக்கொண்டிருப்பதோடு, தமிழ் மக்களுடனோ இவ்வரசில் அங்கம் வகிக்கும் ஏனைய கட்சிகளுடனோ எவ்வித இணக்கப்பாட்டை ஏற்படுத்த எவ்வகையிலும் முயற்சிக்காமல் இப்பிரேரணைகள் காற்றில் பறக்கவிடப்பட்டுள்ளமையும், இனமுரண்பாட்டின் தீர்விற்கு இன்றியமையாதது எனக்கருதப்படும் ஐ.தே.கட்சியின் பங்குபற்றுதலை ஊக்குவிப்பதற்குப் பதிலாக அவர்களுக்கெதிராகப் பலாத்காரங்களைப் பாவித்து அவர்களை தூரத்தள்ளிவைக்க இவ்வரசு மேற்கொள்கின்ற முயற்சிகளும் இராணுவ முனைப்புகளின் மூலம் அடக்குமுறை ஆட்சியை நிலைநாட்டிக் கொள்ளும் அதன் உள்நோக்கத்தை மிகத் தெளிவாக வெளிக்காட்டுகிறது.

பேச்சுவார்த்தைகளின் மூலமான தீர்விற்கு இன்றியமையாத மற்றுமொரு சக்தியான விடுதலைப் புலிகளின் பங்குபற்றுதலை இல்லாதொழிப்பதன் மூலமாக பேச்சுவார்த்தை மூலமான தீர்வை அடையும் முயற்சியை பின்போடுவதை நியாயப்படுத்தக்கூடிய சூழ்நிலையை ஏற்படுத்தும் முயற்சியாகவே இவ்வழக்குத்தாக்கல் சம்பவத்தை இனம்காணல் வேண்டும். விடுதலைப் புலிகள் விட்ட பல தவறுகளின் காரணமாக சர்வதேச ரீதியான செல்வாக்கை அவர்கள் இழந்துள்ளனர். இந்நிலையில் புலிகளின் பலவீனங்களைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தி இவ்வரசு சர்வதேசரீதியில் வலுவான செல்வாக்கை ஏற்படுத்திக் கொண்டுள்ளது. இந்நிலைமையைப் பயன்படுத்தி இவ்வரசு விரும்பும் பேரினவாதிகளின் இணக்கப்பட்டுடனான ஒரு தீர்வைத் தமிழ் மக்களின் மீது திணிப்பதற்கான நடவடிக்கையில் இறங்கியுள்ளமையையும் காணக்கூடியதாக இருக்கின்றது. இதை நடைமுறைப்படுத்த வேண்டுமேயானால் விடுதலைப் புலிகளை ஒதுக்கிவைப்பதும் அவ்வாறு ஒதுக்குவதை நியாயப்படுத்துவதற்கான காரணிகளை முன்வைப்பதும் அரசின் தேவையாகும். எனவே இவ்வகையான வழக்கு நடைமுறைகளின் மூலம் விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தைக்கு முன்வருவதை அவர்களே தவிர்த்துக் கொள்ளும் சூழ்நிலையை உருவாக்க முடியும் என அரசு கருதலாம்.

விடுதலைப்புலிகளினால் மேற்கொண்ட நடவடிக்கைகளுக்கு எதிராக அதன் பிரதான தளபதியான பிரபாகரனுக்கு எதிராக வழக்குத் தொடர சட்டரீதியாக இடம் இருக்கின்றது. ஆனால், இராணுவத்தினர் அப்பாவித் தமிழ் மக்களின் சொத்துக்களை இல்லாதொழிக்கும் போதோ அல்லது அப்பாவி மக்களைக்கொன்று குவிக்கும்போதோ அதன் பிரதான தளபதியாக விளங்கும் ஜனாதிபதிக்கு எதிராக வழக்கு தொடர சட்டத்தில் அவகாசம் இல்லை. ஏனெனில், என்ன அட்டகாசம் செய்தாலும் ஜனாதிபதிக்கு எதிராக வழக்கைத் தொடர்வதற்கு நீதிமன்றத்திற்கு அதிகாரம் இல்லை. இதுதான் சட்டத்தின் வரையறை.

1981ல் யாழ் நூலகம் எரிக்கப்பட்டதிலிருந்து 1996 ரிவிரச வரை படையெடுப்பின் மூலம் யாழ் நகரின் பெரும் பகுதி அழிக்கப்பட்டது வரை இராணுவத்தினரினால் மேற்கொள்ளப்பட்ட அழிவுகளுக்குப் பொறுப்பாளிகள் இல்லை என்பதுதான் இதன் வெளிப்பாடு.

### *சந்திரிகாவின் பழிவாங்கல்கள்*

ஜனாதிபதி சந்திரிகா தான் நினைத்ததையும், விடுதலைப் புலிகள் அவர்கள் நினைத்ததையும் சமாதானப்பேச்சுவார்த்தையாகக்கொண்டு மேற்கொண்ட பேச்சுவார்த்தைகளானது காலத்தை வெறுமனே ஓட்டிக்கொண்டு சென்று முறிவடைந்தது, விடுதலைப் புலிகள் தாக்குதலை ஆரம்பித்து இப்பேச்சுவார்த்தைகளை முடித்து வைத்தனர். இதன் விளைவாக புலிகளுடன் போராட வேண்டிய சந்திரிகா அரசு முன்னைய அரசைப்போல எல்லாத் தமிழர்களுக்கெதிராகத் தனது போராட்டத்தை ஆரம்பித்து தமிழர்களுக்கெதிரான கூட்டுப்பழிவாங்கல் முயற்சியில் இறங்கி செயற்பட்டு வருகின்றது என்பது ஒன்றும் புதிய விடயமல்ல. முன்னைய அரசின் செயற்திட்டங்களையெல்லாம் ஜனசவியவை சமுர்தி என்றும், கம் உதாவவை ஜனஉதான என்றும் சுவர்ண பூமியை ஜயபூமி என்றும் பெயரை மட்டும் மாற்றித் தனது புதிய செயற்திட்டமாகக் காட்டிக்கொண்ட இவ்வரசு இந்தப் பழிவாங்கல் நடவடிக்கைகளையும் சமாதானப் போராட்டம் என்று நாமமிட்டு இந்தக் கொடூர நடவடிக்கையை வெண்தாமரையின் வெண்மைக்குள் மூடிமறைத்துக்கொள்ள முயற்சிகள் செய்தது.

இந்த சமாதானப்போராட்டத்தின் மாபெரும் வெற்றியாக இவர்களும் இவர்களுக்கு ஆலவட்டம் போடுபவர்களும் வர்ணனை செய்த யாழ்ப்பாணம் கைப்பற்றப்பட்டாலும், அதன் உண்மையான விளைவுகள் பற்றியதுமான செய்திகள் வெளிவரத் தொடங்கியுள்ளன.

இளம் பெண்கள் சிங்கள இராணுவத்தினரால் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்படல், ஆட்கடத்தல், காணாமற்போதல் போன்ற சம்பவங்கள் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றமைக்கான தகவல்கள் வெளிவந்துள்ளன. சோதனைச் சாவடியில் வரிசையில் நிற்கும் இளம் பெண்கள், மாணவிகளின் பைகளுக்குள் தம்கைவசமுள்ள கிரெனெட்டுக்களையும் வெடிபொருட்களையும் இரகசியமாகப் போட்டுவிட்டு சோதனையின் போது அவற்றைக்கண்டுபிடித்து கைது செய்யும் சம்பவங்கள் பல நிகழ்ந்துள்ளதாக தெரியவந்துள்ளன. இவ்வாறான ஒரு சம்பவத்தின் போது ஒரு இராணுவ வீரன் வரிசையில் நின்ற பள்ளி மாணவியின் முதுகுப்புறம் இருந்த புத்தகப்பைக்குள் தன்னிடமிருந்த கிரெனைட்டை இரகசியமாகப் போட்டுவிட்டு சோதனைச் சாவடியை அண்மித்ததும் அவனே அப்பையை சோதனை செய்து அந்த கிரெனைட்டைக் கண்டெடுத்து அம்மாணவியை கைது செய்ய முயன்றுள்ளான். அப்போது இச்சம்பவத்தை அவ்வரிசையின் பின்புறமாக நின்றுகொண்டிருந்த பெரியவர்கள் சிலர் ஒன்றுசேர்த்து இதை ஒரு பிரச்சினையாக கிளப்பியபோது வேறுவழியில்லாத இந்த இராணுவ வீரன் தான் விளையாட்டிற்காக இப்படிச் செய்ததாகக் கூறியுள்ளான். இச்சம்பவத்தை கண்டதன் காரணமாகவும், அதையெதிர்த்து சிலர் செயற்பட்டதன் காரணமாகவும் அம்மாணவியின் உயிர் பாதுகாக்கப்பட்டதோடு படையினரால் பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கப்படுவதிலிருந்தும் தப்பிக்கொண்டாள். இவ்வகையில் இந்த இனவாதப்போருக்கு இன்னும் எத்தனைபேர் பலியாகப்போகின்றார்களோ தெரியவில்லை.

இவையெல்லாவற்றையும் நியாயப்படுத்தக்கூடிய வகையில் ஜனாதிபதி கூறியதாக ஒரு கூற்று பத்திரிகையில் வெளியாகியுள்ளது. கடந்த வாரம் தனது காரியாலயத்தில் நடைபெற்ற ஒரு கலந்துரையாடலின் போது ''புலிகள் சிறி மகாபோதி போன்ற சமய நிலையங்களைத்தாக்கினால், நான் தமிழர்களையும் மகாராஜா போன்ற தமிழர்களின் நிறுவனங்களையும் தாக்குவேன்'' என வெளிப்படையாக அறிவித்ததாக பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. பானையில் உள்ளதுதான் அகப்பையில் வரும் என்பார்கள். அதேபோல் தமிழர்களுக்கெதிரான கூட்டுப்பழிவாங்கலுக்கு இவர் எவ்வளவு தூரம் தயாராக இருக்கின்றார் என்பதையே இக்கூற்று நிரூபிக்கின்றது. நான் என்றபதம் இந்நாட்டின் முப்படைகளினதும் தளபதி என்பதையும் உட்கொண்டதே.

''யுத்தம் என்றால் யுத்தம் - சமாதானம் என்றால் சமாதானம்'' என தமிழர்களுக்கெதிராகப் போர்ப்பிரகடனம் செய்ததோடு தமது அரசுக்கு எதிராக கிளர்ச்சி செய்ய தென்னிலங்கை சிங்கள இளைஞர்கள் தயாராகின்றார்கள் என உணர்ந்த ஜே.ஆரின் ஐ.தே.க. அரசு 1983ம் ஆண்டு இனஜக்கலவரத்தை ஏற்படுத்தி அதன் மூலம் அவ்விளைஞர்களின் அவதானத்தை தமிழர்களுக்கெதிராக திசைதிருப்ப முயற்சித்த அனுபவத்தை மறந்து இதன்மூலம் எந்தளவுக்கு தமிழ் மக்கள் பாதிப்பிற்குள்ளானார்கள் என்பதை மறந்து இம்முயற்சி எந்தளவுக்கு இந்நாட்டை இனவாதமயப்படுத்த உதவியது என்பதை மறந்து, சந்திரிகாவின் இக்கூற்றின் உள்நோக்கத்தை இனம்காணமுடியாது. இதுதான் சமாதானப்போரின் உள்நோக்கம் என்பதுவும் பூரண ஜனநாயகத்தை ஏற்படுத்தப் போகும் வழி இதுதான் என்பதுவும் தெளிவாகின்றது.

விடுதலைப் புலிகள் தங்களுக்குச் சாதகமான சூழ்நிலையை ஏற்படுத்திக் கொள்வதில் வல்லவர்கள் என்பதோடு அதற்காக எதையும் செய்யக்கூடியவர்கள்தான் என்பதுவும் இரகசியமல்ல. பல மிலேச்சத்தனமான தாக்குதல்களையும் நடத்தியுமுள்ளார்கள். ஆனால், ஜனாதிபதியின் கூற்றானது தமிழர்களுக்கு எதிரான தாக்குதலை நடத்தவேண்டிய தேவையுள்ளவர்கள் சிறி மகா போதியைத்தாக்கினால் போதும் மற்றவைகளை அவரே கவனித்துக்கொள்வார் என்பதாகவே அமைந்துள்ளது.

இனஉறவு தொடர்பான சமகால நிகழ்வானது தமிழ் மக்களின் தலைவிதியானது போர்க்களத்தில்தான் தீர்மானிக்கப்படும் என்பதையும் அரசியல் தீர்வின் சாத்தியமின்மையையும் மிகத் தெளிவாகக் காட்டுகின்றது. அத்தோடு தமிழர்களின் எதிர்காலம் பற்றிய ஒரு பாரிய சவாலையும் முன்வைப்பதாக அமைகின்றது. இந்தச் சவாலை எவ்வாறு ஏற்றுக் கொள்வது, இந்தப் பேரினவாத ஆக்கிரமிப்பை எவ்வாறு முறியடிப்பது போன்ற பிரச்சினைகளை எதிர்கொள்ள தமிழ் சமூகம் தயாராக வேண்டிய உடனடித் தேவையையே இந்நிலைமைகள் வலியுறுத்துகின்றன.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# மலையக ஆசிரியர் நியமனம் !

# சப்தமான கோரிக்கையும் நிசப்தமான உண்மைகளும்

ஆயிரம்பெருந்தோட்ட ஆசிரியர் நியமனத்திற்கான போட்டிப்பரீட்சை முடிவுகள் தற்போது அனுப்பப்பட்டுக் கொண்டிருக்கின்றன. மௌன ஊர்வலங்கள், அறிக்கைகள், கூட்டங்கள் என்பவற்றினைத் தொடர்ந்தே மேற்படி பரீட்சை பெறுபேறுகள் அனுப்பப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

இந்த ஆயிரம் பெருந்தோட்ட ஆசிரியர் நியமனத்தில் மலையகத்தமிழ் இளைஞர்கள், யுவதிகள் தகைமையிருந்தும் தெரிவு செய்யப்படவில்லை என்று ஆட்சேபம் தெரிவித்தே மலையகத்தில் மௌன ஊர்வலங்கள் நடைபெற்றன. ஆயிரம் வெற்றிடங்களில் 184 வெற்றிடங்கள் மட்டுமே மலையகத் தமிழ் இளைஞர், யுவதிகளுக்கு வழங்கப்பட்டுள்ளதாகவும் ஏனையவை வடக்கு கிழக்கு தமிழ் இளைஞர் யுவதிகளாலும் முஸ்லிம் இளைஞர் யுவதிகளாலும் நிரப்பப்பட்டுள்ளன என்றும் கூறப்படுகிறது.

இந்த நியமனத்திற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டபோது கல்வித்தகைமையாக க.பொ.த. சாதாரண தரம் சித்தியடைந்திருக்க வேண்டும் என்று அரசாங்க வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டிருந்தது. ஆனால் க.பொ.த. உயர்தரம் சித்தியடைந்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும் என்றும் குறிப்பிடப்பட்டிருந்தது.

அதன்படி விண்ணப்பித்தவர்கள் ஆசிரியர் நியமனப் போட்டிப் பரீட்சைக்கு தோற்றினார்கள். தோற்றிய எல்லோருக்கும் பரீட்சை முடிவுகள் அனுப்பப்படாமலே பலருக்கு நேர்முகப்பரீட்சைக்கான கடிதங்கள் அனுப்பப்பட்டன. அவர்களில்பெருந்தொகையினர் மலையக தமிழ் இளைஞர்கள் அல்லாதோராவர்.

இந்நிலையில் அதற்கு எதிர்ப்பு தெரிவிக்குமுகமாக பெருந்தோட்ட ஆசிரியர் நியமனங்கள் மலையகத்தமிழ் இளைஞர்களுக்கே வழங்கப்பட வேண்டும்என்றே மலையகத்தில் மௌன ஊர்வலங்கள் நடைபெற்றன. இந்த ஊர்வலங்களுக்குப் பிறகுதான் அதன் எதிரொலியாக போட்டிப்பரீட்சை முடிவுகள் அனுப்பப்பட்டுக் கொண்டிருக்கின்றன என்று கூறுவதே சரியாகும்.

அனுப்பப்படும் போட்டிப்பரீட்சை பெறுபேறுகளின் முடிவுகளைப் பார்க்கின்ற போது அதிகமான மலையகத் தமிழ் இளைஞர்கள் போதியளவு புள்ளிகள் பெறவில்லை என்று தெரியவருகிறது.

போதிய கல்வித்தகைமை இல்லையென்றும் போட்டிப்பரீட்சையில் போதியளவு புள்ளிகளைப் பெறவில்லையென்றும் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படாமலேயே நியமனங்கள் மலையகத்தமிழ் இளைஞர்யுவதிகளுக்கு மறுக்கப்படலாம்.

நேர்முகப்பரீட்சைக்கு அழைத்தும் வதிவிட அத்தாட்சி இல்லையென்றும் மறுக்கப்படலாம். கல்வித்தகைமைகள் இல்லையென்றும், போட்டிப்பரீட்சையில் போதிய புள்ளிகள் இல்லையென்றுமே பெருந்தொகையான மலையகத்தமிழ் இளைஞர்களுக்கு நியமனம் மறுக்கப்பட்டுள்ளதாக அறியமுடிகிறது.

ஆயிரம் ஆசிரியர் நியமனத்திற்காக விண்ணப்பித்த பதின்மூவாயிரம் மலையகத் தமிழ் இளைஞர் யுவதிகளில் 184பேர் மட்டுமே தெரிவாகியுள்ளதாகத் தெரிய வருகிறது. இது உண்மையானால் ஆசிரியர் நியமனத்தைப் பெறவேண்டிய கல்வித் தகைமைகளையும், போட்டிப் பரீட்சை பெறுபேறுகளையும் கொண்ட ஆயிரம்பேர் மலையகத்தமிழரில்இல்லை என்று முடிவு செய்து விடுவதா?

உண்மையில் ஆயிரம் மலையக இளைஞர் யுவதிகளுக்கு உத்தேச ஆசிரியர் நியமனத்தை பெறவேண்டிய கல்வித்தகைமைகளும், போட்டிப்பரீட்சைப் புள்ளிகளும் இல்லையென்றால் தகைமை இல்லாதவர்களுக்கு ஆசிரியர் நியமனம் வழங்கப் படக்கூடாது என்ற அடிப்படையில் அவர்களுக்கு நியமனம் மறுக்கப்படுவது நியாயமானதாகிவிடும்.


ஏனெனில் கல்விகற்ற சமூகத்தை உருவாக்கும் பொறுப்பை கல்வித்தகைமை இல்லாதவர்களுக்கு சலுகை அடிப்படையில் வழங்கலாகாது.

கல்வியில் பின்தங்கிய சமூகம் என்ற அடிப்படையில் மலையகத் தமிழருக்கு கல்வித்தகைமையை குறைத்து ஆசிரியர் நியமனம் தவிர்ந்த ஏனைய வேலை வாய்ப்புகளில் சலுகை வழங்கப்படலாம். கல்வி அறிவில் குறைந்தவர்களை கற்பித்தல் செய்ய அனுமதிக்கக் கூடாது.

மேற்கூறப்பட்ட அடிப்படையில் அனுமதிக்காதபோது பெருந்தோட்ட ஆசிரியர் நியமனங்கள் வேறுசமூகத்தவரான முஸ்லிம்களுக்கும் வடகிழக்கு தமிழர்களுக்கும் கிடைக்கவாய்ப்புண்டு. இவர்கள் நியமனத்தை பெற்று சிறிது காலத்தில் சொந்த இடங்களுக்கு இடமாற்றம் பெற்று சென்று விடுகின்றனர். அதனால், மலையகப்பாடசாலைகளுக்கென ஒதுக்கப்பட்ட நியமனத்தால் மலையக பாடசாலைகளோ மாணவர்களோ நன்மையடைவதில்லை. மலையகத் தமிழர்களுக்கு நியமனத்தை கொடுத்தால் அவர்கள் தொடர்ந்து அப்பாடசாலைகளில் இருப்பார்கள். அதனால் மலையக மாணவர்களுக்கும் பாடசாலைகளுக்கும் நன்மை ஏற்படும். அதனால் தகைமைகளை குறைத்து சலுகைகளை கொடுத்தாவது மலையகத் தமிழர்களுக்கு அந்த ஆசிரியர் நியமனங்களை வழங்கவேண்டும் என்ற கருத்து தெரிவிக்கப்படுகிறது.

(ஆ) பொதுவாக கல்வியில் பின்தங்கிய மலையகமக்களிலிருந்து வடக்கு கிழக்கு அல்லது முஸ்லிம்களிடையே காணப்படும்தகைமைகளை ஒத்த தகைமைகளை எதிர்ப்பார்க்கக் கூடாது. விண்ணப்பதாரிகளில் போட்டிப்பரீட்சையில் தோற்றியவர்களில் அதிகமானோர் வெளியிடத்தவர்களாக ஏனைய சமூகத்தவர்களாக இருக்கலாம் என்பதால் நேர்முகப்பரீட்சைக்கு அழைப்பதற்கு கூடிய கல்வித் தகைமைகளையும், போட்டிப்பரீட்சையில் கூடிய புள்ளிகளையும் ஆதாரமாகக் கொள்ளக்கூடாது.

அதற்கு மாறாக ஆகக்குறைந்த தகைமையாக கேட்கப்பட்ட க.பொ.த. சாதாரண தரம் சித்தியடைந்த அனைவரையும் நேர்முகப் பரீட்சைக்கு அழைத்து ஏனைய வதிவிடம் போன்ற தகைமைகளைப் பார்க்க வேண்டும் என்று ஒரு அபிப்பிராயமும் முன்வைக்கப்படுகிறது.



(இ) ஆசிரியர் நியமனங்களை வழங்குவதில் வதிவிடத்தை நிரூபிக்க ஐந்து வருட காலம் குறிப்பிட்ட பிரதேச சபையில் வசித்திருக்க வேண்டும் என்பதை விட மலையகத்தில் பிறந்திருக்க வேண்டும் என்பதையும் இந்திய வம்சாவளியாக இருக்க வேண்டும் என்பதையும் முதன்மையாக நிரூபிக்கும்படி கேட்க வேண்டும். அதனை நிரூபிப்பவர்களை மலையகத்தவர் என்று முடிவு செய்து கொண்டு அவர்களை ஆகக்குறைந்த கல்வித்தகைமையை காட்டும்படி கேட்கலாம். இவற்றின் மூலம் பெருந்தோட்ட ஆசிரியர் நியமனத்தில் மலையகத்தமிழ் இளைஞர் யுவதிகளுக்கு உரிய இடங்களை உத்தரவாதம் செய்ய முடியும் என்று அபிப்பிராயம் தெரிவிக்கப்படுகின்றது.

(ஈ) ஏனைய வேலைவாய்ப்புகளை, குறிப்பாக அரசாங்க, மாகாண சபை வேலைகளைப் பெறுவதற்கு ஏனைய சமூகத்துடன்போட்டிபோடும் அளவிற்கு மலையக சமூகம் கல்வியில் வளர்ச்சியடைய வில்லை.

உதாரணமாக தேசிய இன விகிதாச்சாரப்படி இந்திய வம்சாவளித் தமிழர்களுக்கு 5.5 வீதம் வேலைவாய்ப்பு கிடைக்க வேண்டும். கல்வித்தகைமைகள் குறைவாக இருப்பதன் காரணமாக அரச சேவையில் 0.1 வீதத்தினரே இந்திய வம்சாவளித்தமிழர் கடமையாற்றுகின்றனர். மாகாண சபை வேலை வாய்ப்பில் 0.2வீதமும் அரசாங்க கூட்டுத்தாபனங்களில் 0.5சதவீதமும் கடமைபுரிகின்றனர்.

எனவே மலையகத் தமிழ் இளைஞர் யுவதிகளுக்கு ஓரளவு இலகுவாககிடைக்கக்கூடிய ஆசிரியர் நியமனத்திலும் ஆகக்கூடிய கல்வித்தகைமைகளை கோருவது என்பது மறைமுகமாக அவர்களுக்கு நியமனம் வழங்க மறுப்பதாகும் என்றும் கருத்தும் தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி கருத்துக்களை தொகுத்துப் பார்க்கின்ற போது தகைமையில்லாதவர்களை ஆசிரியர்களாக நியமிப்பதையன்றி ஆசிரியர் நியமனத்திற்காக கேட்கப்படும் ஆகக்குறைந்த தகைமைகளை கொண்ட மலையகத்தமிழ் இளைஞர்யுவதிகளுக்கு நியமனம்வழங்க வேண்டும்என்பதையே மலைய மக்கள் விரும்புகின்றனர். ஆகக்குறைந்த தகைமைகளை கொண்ட மலையகதமிழ் இளைஞர்களும், யுவதிகளும் இருக்கின்ற போது ஆகக் கூடிய தகைமைகளை கொண்ட பிற சமூகத்தவர்களை நியமிப்பது என்பது மலையக மக்களுக்கு இழைக்கப்படும் அநீதியாக கொள்ளப்படவேண்டும். உத்தேச ஆசிரியர் நியமனம் மலையகத்தவர்களுக்கானது என்ற அடிப்படையில் அந்நியமனத்திற்கு தேவையான ஆகக்குறைந்த தகைமைகள் கொண்ட மலையக இளைஞர்களுக்கும், யுவதிகளுக்குமே வழங்கப்படவேண்டும். அவ்வாறு ஆகக் குறைந்த தகைமைகளை கொண்டவர்கள் மலையகமக்களிடையே இல்லாதவிடத்து வேறு சமூகத்தவர் நியமிக்கப்படுவது தவிர்க்க முடியாததாகும்.

எனவே உத்தேச ஆயிரம் பெருந்தோட்ட ஆசிரியர் நியமனத்தில் எந்த அடிப்படையில் மலையக இளைஞர்களும் யுவதிகளும் புறக்கணிக்கப்பட்டுள்ளனர் என்பதனை மௌன ஊர்வலம் நடத்துபவர்கள் தெளிவுபடுத்த வேண்டும். கேட்கப்பட்ட ஆகக்குறைந்த கல்வித்தகைமைகள் இருந்தும் புறக்கணிக்கப்பட்டுள்ளனவா என்பதை அறிந்து உண்மையை வெளியுலகிற்கு கொண்டுவர வேண்டும்.

அத்துடன் அந்தப் புறக்கணிப்பை நீக்கி மலையக இளைஞர் யுவதிகளுக்கு ஆசிரிய நியமனம் கிடைக்க மேற்கொள்ளப்படவேண்டிய திட்டங்களையும் முன் வைக்கவேண்டும்.

போராட்ட விதிமுறைகள் மௌனமானதாக இருக்கலாம். போராட்டத்திற்கான சரியான காரணங்களும் கோரிக்கைகளும் மௌனமானதாக இருந்து விடக்கூடாது.

மௌன ஊர்வலம் நடத்துபவர்களும்சரி, ஆசிரியர் நியமனத்தை எதிர்பார்த்து இருப்பவர்களும் சரி, மேற்படி உண்மைகளை உணர்ந்து செயற்படாவிட்டால் 'பாஸ் பண்ணாதவங்க வாத்தியார் உத்தியோகம் கேக்கிறாஞ்க' என்று ஏளனமாகக்கதைப்பதையே மக்களிடமிருந்து எதிர்பார்க்க முடியும். அத்துடன் அவர்களின் போராட்டம் நியாயமற்றது என்ற முத்திரை குத்தப்படும்.

தெளிவில்லாமல், தெளிவுபடுத்தாமல், போராட்டம் நடத்தினால் அது முஸ்லிம் மக்களுக்கும் வடக்கு கிழக்கு தமிழ் மக்களுக்கும் எதிரான துவேஷமாக காட்டப்படும். அப்படி போராட்டம் நடத்துபவர்கள் மலையக மக்களுக்கும் முஸ்லிம் மக்களுக்குமிடையிலான விரிசலுக்கு காரணமானவர்களாக்கப் பட்டு விடுவார்கள்.

அத்துடன்மலையக வேலைவாய்ப்புக்கள் மலைய மக்களுக்கே வழங்கப்பட வேண்டும்என்ற நியாயமான கோரிக்கை ஏளனம் செய்யப்படும். அதற்கான உரிமைப்போராட்டம் எடுத்த எடுப்பில் மனோரீதியாகவே ஒடுக்கப்பட்டுவிடும்.

●

---

# யாழ்ப்பாணத்திலிருந்து

# ஜனாதிபதிக்கு ஒரு பகிரங்க மடல்

1996 செப்டம்பர் 7ம் திகதி கைது செய்யப்பட்ட ஒரே குடும்பத்தைச்சேர்ந்த தாய், மகன், மகள், உறவினர் தொடர்பான செய்திகள் யாவரும் அறிந்ததே. இது வரை எதுவித தகவலுமின்றி இருக்கும் அவர்கள் பற்றிய தகவல்களை வழங்குமாறும், உடனடி நடவடிக்கைகள் எடுக்குமாறும் கைதானவரின்இன்னொரு மகளான பிரஷாந்தி குமாரசாமி ஜனாதிபதிக்கு பகிரங்க மடல் ஒன்றை வரைந்துள்ளார்.

கைதான தாயான 59 வயதுடைய ராசம்மா குமாரசாமி கைதடி முத்துக்குமாரசுவாமி வித்தியாலயத்தில் துணை அதிபராகப் பணியாற்றியவர் என்பதால் அப்பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் சார்பாக கல்வியமைச்சுக்கும் ஒரு கோரிக்கை மடல் அனுப்பப்பட்டுள்ளது. இது தவிரவும் கைதடியிலுள்ள ஏனைய பாடசாலை அதிபர்கள் அனைவரும் ஒப்பமிட்டு ஜனாதிபதிக்கு கடிதம் எழுதியுள்ளனர். இக்கடிதத்தின் பிரதிகள் கல்வியமைச்சர், ICRC, UNHCR, பிரதிநிதிகள் அரச அதிபர் ஆகியோருக்கு அனுப்பப்பட்டுள்ளன. பிரஷாந்தி குமாரசாமியின் கடிதம் கீழே தரப்பட்டுள்ளது:

இந்தக் கடிதத்தை உங்களுக்கு எழுத வேண்டிய நிர்ப்பந்தம் எனக்கு. தாய் சகோதரி, சகோதரன், உதவ வந்த நபர் என நான்கு பேரை இழந்து நிற்கிறேன். இது தவிரவும் நானொரு நிரந்தர இருப்பிடமற்றவள். பன்னிரு வருடங்களுக்கு முதல் தந்தையை இழந்து நிற்கும் அநாதை.

1996 செப்டம்பர் 7ம்திகதி நண்பகல் வேளை கிரிஷாந்தி குமாரசாமி என்ற பெயருடைய எனது 18 வயது சகோதரியை சுண்டிக்குளி கைதடி வீதியில் வைத்து இராணுவத்தினர் கைது செய்தனர். அதேநாள், 59 வயதான ராசம்மா குமாரசாமி என்ற எனது தாயும், 16 வயதான என் ஒரே சகோதரன் பிரணாபனும் எங்களுக்கு உதவும் 35 வயதான கிருபாகரன் சிதம்பரமும் முகாமுக்குச் சென்று அங்கிருந்த இராணுவத்தினரிடம் கிரிஷாந்தியை பற்றிய விபரங்களைக் கேட்டறிய முயன்றனர். ஆனால் அங்கு சென்ற அவர்கள் மூவரையும் இராணுவத்தினர் கைது செய்து விட்டனர். இது அன்றைய தினம் (96 செப்டம்பர் 7) 2மணிக்கும்5 மணிக்கும் இடையில் இடம் பெற்றது. அதன் பிறகு இன்று வரை அவர்கள் பற்றிய எதுவித தகவல்களையும் நான் பெறவுமில்லை, கேட்கவுமில்லை. இவ்வுலகில் எனக்கென்றிருந்த சொந்தம் சுற்றமும் அவர்கள் தான். இதன் பிறகெல்லாம்பல முறை இராணுவத்திடம் அவர்கள் பற்றி விசாரித்தேன். ஆனால் அவர்கள் பற்றிய எதுவித தகவல்களையும் இராணுவத்தினர் தெரிவிக்கவில்லை. இந்தச் சம்பவம் பட்டப்பகலில் பலர் முன் நடந்தது. அவர்களை விசாரணைக்கென கைது செய்ததை அங்கிருந்த பலபேர் கண்ணுற்றிருக்கின்றனர். எனினும் அவர்களெல்லாம் வெளியில் வந்து (சாட்சி) சொல்வதற்கும் பயப்படுகிறார்கள். இராணுவம் அவர்களைப்பயமுறுத்தி வைத்திருக்கிறது. நாங்கள் இருந்த இடத்திற்குச் சென்று துப்பாக்கிப்பிரயோகம் செய்து அங்கிருந்தவர்களையெல்லாம் இராணுவத்தினர் பயமுறுத்தியிருப்பதாக நான் அறிந்தேன். சிலவேளை இதுதான் இராணுவத்தின் இவ்வாறான சம்பவங்களுக்கான விசாரணை முறையோ தெரியாது.

மேன்மைமிகு ஜனாதிபதி அவர்களே, நீங்களும் ஒரு தாய். உங்கள் கணவரையும் மிகவும் துன்பகரமான முறையில் இழந்தவர் நீங்கள். உங்கள் கணவரும் இவ்வாறான துன்பகர நிலைகளை, ஏனையவர்களின் வேதனைமிகு வாழ்க்கையை, எண்ணிறைந்ததும் சொல்ல முடியாததுமானகஷ்டங்களையெல்லாம் சகிப்பவரல்லவே.

மேதகு ஜனாதிபதியவர்களே.....

எனக்கிருந்த உறவுகளான அவர்களை இழந்து போய் அநாதையாய்வாடிநிற்கும் நான் உங்களை மன்றாட்டமாய்க் கேட்கிறேன்; இக்கைது பற்றிய உடனடி விசாரணைகளை, நடவடிக்கைகளை எடுக்குமாறு. இராணுவத்தின் ஒழுங்கு குலைந்து விடும், அவர்கள் அவநம்பிக்கைகொள்வர் என்பதற்காக வேண்டி இது பற்றிய எனது வேண்டுகோள்களை நீங்கள் கண்டு கொள்ளாமல் இருந்து விடாதீர்கள் ஜனாதிபதி அவர்களே...!

இராணுவத்தின் ஒழுங்கு குலைந்து விடும் என்றெல்லாம் சொல்லப்படும் காரணங்களை வைத்து, பெறுமதி மிகு உயிர்கள் சம்பந்தப்பட்ட இவ்வாறான நிகழ்வுகளையிட்டு நீங்கள் அசிரத்தையாக இருக்கக் கூடாது. நீங்கள் இவற்றுக்கெல்லாம் பதில் சொல்லவும், மக்களின் பாதுகாப்புக்கும் பொறுப்பானவராக இருக்கிறீர்கள்.

மேதகு ஜனாதிபதியவர்களே.. நான் ஏழ்மையான எதுவித உதவிகளுமற்ற ஒரு பெண்தான். எனினும், நம்பிக்கை இழக்கவில்லை. வேதனையோடு உங்கள் பக்கம் திரும்பியிருக்கிறேன். ஒரு நல்ல தீர்வு கிடைக்கும் என்ற எதிர்பார்ப்புடன்..! நீதியின் பெயரால் எனக்கொரு நீதியைப் பெற்றுத்தருமாறு நான் உங்களை மன்றாட்டமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

*இவ்வண்ணம்*

*பிரஷாந்தி குமாரசாமி*

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தமிழ்த் தேசியவாதம் ஓர் ஆய்வு-06

# முதலில் இந்தியர் பின்பே தமிழர்

## -இரட்டை வழித் தமிழகத் தேசியம்

டி. சிவராம்

தமிழ் இனம், அதன் சுயநிர்ணய உரிமை, தனித் தமிழ் அரசு என்பவற்றை வலியுறுத்தி வந்த ம.பொ.சி. 1956இல் சென்னை மாகாணம் தமிழ்நாடு எனும் மாநிலமாகப் பிரகடனமான பின்னர் தன் குறிக்கோள்களை மெதுவாகக் கைநழுவ விட்டு விட்டார். அவருடைய அரசியல் அக்காலகட்டத்திலிருந்து சந்தர்ப்பவாதச் சகதியினுள் வீழ்ந்தது.

தமிழ் இலக்கியத்திலும், வரலாற்றிலும் தமிழரின் தனித்துவமும் வடஇந்தியருக்கு எதிரான அவர்களது பகையுணர்வும் வெளிப்படுகின்றது என திராவிட இயக்கம் செய்து வந்த பலம் பொருந்திய பிரச்சாரத்தை அவர் பிற்காலத்தில் எதிர்க்கத்தலைப்பட்டார். தமது இலக்கிய அறிவை இதற்குத் துணையாகக் கொண்டார்.

திராவிட இயக்கம் 50களிலும் 60களிலும் வெகுஜன இயக்கமாக மாறி தமிழகம் எங்கும் பலம் பெற்று வந்த காலத்தில் அதன் பிரச்சாரகர்களும் எழுத்தாளர்களும், சினிமா, நாடகத் துறையினரும் சங்க இலக்கியங்களிலும் சிலப்பதிகாரத்திலும் காணப்படும் தமிழ் மன்னரின் வட நாட்டுப் படையெடுப்புகள் அவர்கள் வடஇந்திய ஆரியரை முறியடித்த செய்திகள் போன்றவற்றை காங்கிரசிற்கு எதிராகவும் (ஆரியர் அரசியல்) இந்தி மொழிக்கு எதிராகவும் (ஆரிய மொழி) மிகத்தாராளமாகவே பயன்படுத்தி வந்தனர்.

உதாரணமாக நேரு ஒரு முறை தி.மு.க.வின் திராவிட நாட்டுப் போராட்டத்தை 'நான்சென்ஸ்' (Nonsense) என்று சாடிவிட்டார். இதையறிந்து 'பொங்கியெழுந்தனர்' திராவிட முன்னேற்றக் கழகத்தினர். தமிழரை அன்று இப்படியாக இகழ்ந்த வடநாட்டு மன்னருக்கு என்ன நடந்தது தெரியுமா என்ற வகையில் 'அனல் பறக்கப்' பேசினர் கலைஞர் கருணாநிதியும் அவரது கூட்டத்தினரும்.

சேரன் செங்குட்டுவன் ''தென்தமிழ் ஆற்றலைப்'' பழித்த கனகன், விஜயன் என்னும் இரு வட ஆரிய மன்னர் மீது எங்ஙனம் படையெடுத்துச் சென்று அவர்களை முறியடித்து, இமயமலையில் தமிழர் சின்னம் பொறித்து கண்ணகிக்குச் சிலைசெய்ய அம்மன்னரின் தலையில் கல் வைத்து தமிழ் நாட்டிற்குக் கொண்டு வந்து சேர்த்தான் என்பதை சிலப்பதிகாரம் பாடுகிறது. இக்கதை கலைஞரின் கையில்

இந்தச் சூழ்நிலையில் ம.பொ.சி. தாம் நடத்தி வந்த 'செங்கோல்' என்னும் இதழில் 10-02-1975 முதல் 27-07-1976 வரை தொடராக 'இலக்கியங்களில் இனவுணர்ச்சி' என்னும் கட்டுரையை எழுதினார். (இது பின்னர் நூலாக வந்தது) இதில் தமிழ் இலக்கியங்கள் சங்ககாலத்திலிருந்து மொழி - இன உணர்ச்சியை வெளிப்படுத்திய அதே வேளை இந்திய ஒருமைப்பாட்டையும் வற்புறுத்துகின்றன என வாதிட்டார். இப்படிச் செய்கையில் அவர் தமிழர் ஆதிகாலந்தொட்டு ஒரு இரட்டைத் தேசிய (Dual Nationalism) மனப்பான்மையுடையவர்களாக இருந்து வந்துள்ளனர் என வலிந்து நிறுவ முற்படுகிறார். எப்படி பன்மொழிப் புலவர் கா. அப்பாத்துரையின் முயற்சி தமிழரை ஒரு கற்பிதம் செய்யப்பட்ட திராவிட தேசியம் என்னும பொதுமையினுள் அமுக்க முற்பட்டதோ அதுபோல ம.பொ.சி.யினுடைய இந்த வரலாற்றுப்பார்வை பல்லாயிரம் வருடமாக தமிழ் நாட்டில் இழையோடி வந்ததாக அவர் வலிந்து கற்பிதம் செய்த இந்திய தேசிய

புது வண்ணமும் வீச்சும் பெற்று காங்கிரஸ் எதிர்ப்பிற்கும், இந்தி மொழி எதிர்ப்பிற்கும் மக்களின் ஆதரவை வாரி எடுக்க வெகுவாக உதவிற்று. தி.மு.க. தனிநாட்டுக் கோரிக்கையை கைவிட்டு அரசாட்சிக்கு வந்த பின்னரும் தமிழ் இலக்கியம் வரலாறு என்பவற்றில் இந்த ஆரிய - திராவிட அரசியல் முரண் நிலையை முதன்மைப்படுத்துவதைக் கைவிடவில்லை.

பொதுமைக்குள் அமுக்க முற்படுகிறது. கா. அப்பாதுரை வரலாற்று இலக்கிய மொழியியல் ஆதாரங்களைத் தன் தேவைக்கேற்ப வளைத்து திராவிட தேசியத்தை இட்டுக் கட்டியதைப் போல ம.பொ.சி.யும் பண்டைத் தமிழ் இலக்கியங்களில் தமிழின இந்திய உபகண்ட இரட்டை வழித் தேசிய உணர்ச்சியை தேடி இட்டுக் கட்டலில் ஈடுபடுகிறார்.

உதாரணமாக சிலப்பதிகார ஆசிரியர் இளங்கோ அடிகளைப் பற்றிக் குறிப்பிடுகையில்,

''தமிழ் இன ஒருமைப்பாட்டின் அடிப்படையில் இந்தியத் தேசிய ஒருமைப்பாட்டுக்கும் இளங்கோ வழிவகுத்தார். ஆம், வஞ்சியில் நடைபெறும் கண்ணகித் தெய்வ வழிபாட்டிலே சிங்களவரான இலங்கை மன்னன் கயபாகு, தமிழரல்லாதாரான நூற்றுவர் கன்னர், தமிழர் பகைவரான வடஆரிய மன்னர் ஆகியோரும் கலந்து கொள்ளச் செய்தது.

இலங்கையுள்ளிட்டுள்ள இந்திய உபகண்டத்தில் ஒரு கலாசார சமஷ்டியை உருவாக்கவும் தமிழர் கடமைப்பட்டிருப்பதனை ஆசிரியர் இளங்கோ எடுத்துக் காட்டினார்.'' (இலக்கியங்களில் இனவுணர்ச்சி ப. 37) என்கிறார் ம.பொ.சி.

இதேபோல வள்ளுவரையும் இந்தியத் தேசிய ஒருமைப்பாட்டினை வெளிப்படுத்தும் ஒருவராக வலிந்து சித்திரிக்கிறார்.

''மதப்பற்றுடன் இவ்வளவையும் கூறும் வள்ளுவருக்கு இந்தியா முழுவதையும் நேசிக்கும் தேசப்பற்று இருந்திருக்கும் என்று நம்பலாந்தானே! ஆகவே வள்ளுவரை இந்தியத் தேசிய ஒருமைப்பாட்டுக்குப் புறம்பானவர் என்றோ எதிரானவர் என்றோ எண்ணுவதற்கில்லை'' (ப.20) எனவும்

''.... இந்திய கலாசாரத்தின் ஒருமைப்பாட்டையும் மனித சமுதாயத்தின் ஒற்றுமையையும் கட்டிவளர்க்கும் குறிக்கோளுடன் திருவள்ளுவர் முப்பால் நூலைத் தந்தார் என்று முடிவுக்கு வரலாம்'' (ப.21) எனவும்

சங்ககாலம் தொடக்கம் நவீன காலம் வரை 'இரட்டைவழித் தேசியத்தை' தமிழ் இலக்கியங்களிலிருந்து மேற்கண்ட வகையில் திரித்தெடுத்து இறுதியாக கவிஞர் நாமக்கல் இராமலிங்கம் பிள்ளை பற்றி ''தமிழர் தனித் தேசிய இனத்தார் என்று கூறிய கவிஞர் பிற இந்தியர்களிடமிருந்து தமிழர் பிரிந்து வாழ வேண்டுமென்ற கோரிக்கையை ஏற்கவில்லை.... நாமக்கல் கவிஞர் பிரிவினை வாதத்தை எதிர்த்து தேசிய ஒருமைப்பாட்டினை வலியுறுத்தினார்''. எனக்கூறி ''...சர்வதேச சகோதரத்துவத்திற்கும், இந்திய ஒருமைப்பாட்டிற்கும் கேடு நேராத வகையில் தமிழர் இனவுணர்ச்சி கொண்டு வாழக் கடமைப்பட்டிருக்கின்றனர்'' என்று தமது கட்டுரைத் தொடரை முடிக்கின்றார்.

இங்கு முக்கியமாக நாம் கவனிக்க வேண்டியது என்னவெனில், சமஸ்கிருத - இந்தி வழிக் கலாசாரம் வடஇந்திய நிர்வாக அரசியல் இராணுவ ஆதிக்கம் என்பவற்றைத் தமிழகத்தில் திணிக்க எடுக்கப்படும் தற்கால முயற்சியில் ம.பொ.சி.யின் இரட்டை வழி நாட்டுணர்வு போன்றதொரு கருத்தே பரப்பப்படுகிறது. ''நீ முதலில் இந்தியன். அதன் பின் தமிழன்'' புலிகள் ராஜீவைக் கொன்ற பின்னர் தமிழகத்தில் மீண்டும் பிரிவினைவாதம் தோன்றிவிடுமோ என்ற அச்சத்தில் பல பிரச்சாரப் படங்கள் எடுக்கப்பட்டன.

ரஜனியின் 'பாண்டியன்', மணிரத்தினத்தின் 'ரோஜா', கமலின் 'இந்தியன்' போன்ற படங்களில் தமிழர் பிரதானமாக இந்தியரே என்ற உணர்வு அதிலும் இந்தியர் என்பது முதன்மைப்படும் வகையில் திரைக்கதை வசனம் என்பவற்றின் ஊடாக திணிக்கப்படுகிறது. (பாண்டியனில் மிக அப்பட்டமாக) ரஜனிகாந்த் - மராட்டியர் என்பதையும் மணிரத்தினமும் கமலும் பிராமணர் என்பதையும் நாம் இங்கு கவனிக்க வேண்டும்.

ஆனந்த விகடன், குமுதம், இந்தியா டுடே, தினமணி போன்ற பிராமணப் பத்திரிகைகளும் நேரடியாக இந்து - இந்தி கலாசார அரசியல் விழுமியங்களைத் தமிழர் மீது முரட்டுத்திணிப்புத்திணிக்காமல் நாசூக்காக இந்தியன் - தமிழன் எனும் இரண்டகத் தேசியத்தை இந்தியப் பொதுமை வலுப்பெறும் வகையில் சாதுரியமாகப் பரப்புகின்றன.

வடஇந்திய ஆளும் வர்க்கங்களுடன் இணைந்து இந்தி - இந்து கலாசாரத்தை நேரடியாக முரட்டுத்தனமாகத் திணிக்க தாம் எடுத்த முயற்சிகள் தமிழகத்தில் தொடர்ந்து கடுந்தோல்வியைத் தழுவிக் கொண்டதையும், வடநாட்டவர் தம்மை அரசியல்ரீதியாகச் சிலவேளை கைகழுவி விட்டு விடக்கூடியவர்கள் என்பதையும் மனதில் கொண்டே இவை கவனமாகச் செயல்படுகின்றன. தமிழகத்தில் இந்த இரண்டகத் தேசியம் இயல்பாகத் தோற்றுவித்த கருத்துநிலை அரசியல் நெருக்கடியின் வெளிப்பாடே தமிழக மாநிலக் காங்கிரஸ் என நான் கருதுகிறேன். திராவிட தேசியமும் ம.பொ.சி.யின் இரட்டைவழித் தமிழகத் தேசியமும் கற்பிதங்கள். சந்தர்ப்பவாத அரசியலாளரால் கட்டியெழுப்பப்பட்ட காகிதக் கோட்டைகள்.

இவற்றின் மீள்பரிசீலனை வெறும் அறிவியல்விடயமல்ல. சமகால அரசியல் அத்தியாவசியமும் ஆகும்.

(வரும்)

---

# பாவியா(கா)திருப்பாயாக..!

## -11 வது கட்டளை

1996 ஒக்ரோபர் 11ம் திகதி, 1994, 1995 ஆம் ஆண்டுகளுக்கான சுதந்திர இலக்கிய விழாக்கள் ஒருங்கே நிகழ்ந்தன. இவ்விரண்டு வருடங்களினதும் பரிசளிப்பு, விருது வழங்கல்கள் ஒருங்கே நடைபெற இருந்தமையால், நூல்களின் தேர்வு பற்றிய அறிக்கைகளும், கலந்துரையாடல்களும் முன்கூட்டியே தமிழிலும், சிங்களத்திலும் வேறுவேறாக நடத்தப்பட்டன.

விருது வழங்கும் வைபவத்தின் போது, 1995ல் வெளியான தமிழ் சிறுகதைத் தொகுதிகள் பற்றிய மதிப்பீடுகளில் தடங்கல்கள் ஏற்பட்ட காரணத்தினால், அது பற்றி பின்னர் அறிவிக்கப்படும் என்றும், விருதுவழங்கல் 1996ஆம் ஆண்டிற்கான விருது வழங்கல் வைபவத்தில் சேர்த்துக்கொள்ளப்படுமென்றும் விழாக்குழுவினர் சார்பில் தெரிவிக்கப்பட்டது.

1994ஆம் ஆண்டிற்கான கலந்துரையாடல்களில் நானும் கலந்துகொண்டேன் எனினும், 1995ஆம் ஆண்டிற்கான கலந்துரையாடல்களின் போது சொந்த விவகாரச் சிக்கல்களின் காரணமாக கலந்து கொள்ள முடியவில்லை. ஆனால் அங்கு சில கசப்பான சம்பவங்கள் நிகழ்ந்து முடிந்ததாக கேள்விப்பட்டேன். நூல்களைத் தெரிவுசெய்வதில் நடுவர்கள் சிரமங்களை எதிர்கொள்வது இயல்பே. சில வேளைகளில் தெரிவுகளில் சில தவறுகளும் இடம் பெறுவதுண்டு.

உதாரணமாக, 1992இல் தமிழில் வெளியான சிறுகதைத் தொகுதிகளை மதிப்பிடுவதில், நடுவர்களாக நானும் நண்பர் யோ. பெனடிக்ற் பாலன் அவர்களும் பணியாற்றினோம். 'உலா' எனும் நூல் அவ்வருடம் விருதுக்காக தேர்ந்தெடுக்கப்பட்டது. எனினும் 'மக்கத்துச் சால்வை' எனும் நூலும் விருது பெறுவதற்கான தகுதிகளைப் பெற்றிருந்தது என்பதும் உண்மை. எமது இரசனை, கருத்தியல் என்பவற்றின் அடிப்படையில் 'மக்கத்துச் சால்வை'யிலும் பார்க்க 'உலா' சற்று அதிக புள்ளிகளைப் பெறுவதாகக் கருதினோம். அச்சமயம் நண்பர் பெனடிக்ற் பாலன் மிகவும் நோய்வாய்ப்பட்டிருந்தார். இறுதி நேரத்தில் அவருடன் கலந்தாலோசிப்பது அவரது உடல் நலம் காரணமாக இயலாதிருந்தது. தவிர, பிறதுறைகளில் வெளியான நூல்களை மதிப்பீடு செய்த நடுவர்களுடன் கலந்தாலோசிப்பதற்கும் சந்தர்ப்பம் இருக்கவில்லை.

விருது வழங்கும் வைபவத்தில் பெறுபேறுகள் அடங்கிய அறிக்கையை நான் வாசித்தபோது மக்கத்துச்சால்வை ஹனீபா அவர்கள் மிகுந்த ஏமாற்றமடைந்ததை அவதானித்தேன். விருது வழங்கல் முடிவடைந்த பின்னர், என்னுடன் உரையாடிய கலாநிதி எம்.ஏ. நுஃமான் அவர்கள் ''மக்கத்துச் சால்வைக்கும், உலாவுக்கும் சேர்த்தே விருதை அறிவித்திருக்கலாமே'' என அபிப்பிராயப்பட்டார். அன்று ஏற்பட்ட குற்றமனப்பான்மை இன்று வரை என்னைவிட்டு நீங்கவில்லை. நண்பர் பெனடிக்ற் பாலன் அவர்களது பிந்திய நிலைப்பாடுகளை நான் அறியேன்.

ஆனால் முக்கியமானது என்னவெனில், இன்று வரை நண்பர் ஹனீபாவோ, அல்லது வேறு எவருமோ இந்த விவகாரம் பற்றி மூச்சுக்கூட விடவில்லை. அநாகரிகமாக நடந்துகொள்ள வில்லை. நண்பர் பெனடிக்ற் பாலனுடையதும், என்னுடையதுமான அந்த மதிப்பீட்டில் அவர் பாதிக்கப்பட்டிருப்பினும், எங்கள் முடிவுகளை அவர் கௌரவப்படுத்தினார். அவரது பெருந்தன்மைக்கு நான் தலை வணங்குகிறேன். நண்பர் பெனடிக்ற் பாலன் அவர்களது நிலைப்பாட்டினை நான் அறியேன்.

சுதந்திர இலக்கிய விழா ஏன் ஏற்படுத்தப்பட்டது?

அரச ஆதரவுடன் நடைபெறும் சாகித்திய விழா நடைமுறைகளிலும், நூல்தேர்வுகளிலும் ஏற்பட்ட நம்பிக்கையீனங்களால்,

சுதந்திர இலக்கிய விழா ஆரம்பிக்கப்பட்டது. நூல் தேர்வுகளில் முறைகேடுகளும், பக்கச்சார்புகளும், செல்வாக்குகளை 'பாவிப்பவர்களின் இடையூறுகளும் அரசியல் நோக்கங்களும் உள்ளதாக அதிருப்தியாளர்கள் கருதினார்கள். இன்றும் கருதுகிறார்கள். அதுவே உண்மையும் கூட.

இனி, 1995 ஆம் ஆண்டிற்கான கலந்துரையாடலின் போது நிகழ்ந்தவற்றுக்கு வருவோம்:

சிறுகதைத்தொகுதிகள் பற்றிய மதிப்பீட்டு அறிக்கையை வாசிப்பதற்கு நடுவர் குழுவின் உறுப்பினருக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது!

அதற்குரிய காரணமாக 'மூத்த எழுத்தாளர்களைப் புறக்கணித்து இளம் எழுத்தாளர்களின் நூல்களுக்கு பரிசு வழங்குவது தகாது' என விழா ஏற்பாட்டாளர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால் குறிப்பிட்ட ஒரு படைப்பாளி நடுவர்களின் தகுதியைப் பற்றி கேள்வி எழுப்புவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது!

அந்தப் படைப்பாளி ஆட்சேபத்துக்குரிய வார்த்தைகளையும், நகைப்புக்கிடமான கருத்துக்களையும், கண்ணியக் குறைவான நடத்தைகளையும் கலந்துரையாடலின் போது 'பாவித்து'ள்ளார்!

தர்க்க ரீதியான பல கேள்விகளை நாம் கேட்கலாம். உதாரணத்துக்கு சில:

நடுவர்களைத் தேர்ந்தெடுத்தவர்கள் யார்? அவர்கள் நடுவர்களின் தகுதி பற்றி அறிந்திருக்கவில்லையா?

1994ம் ஆண்டிற்கான சிறுகதைத் தொகுதிகளை மதிப்பிடுவதிலும் இதே நடுவர்களே பணியாற்றியுள்ளனர். அப்படியானால், அந்தத் தெரிவுகள் மட்டும் எவ்வாறு செல்லுபடியாகும்?

'மூத்த எழுத்தாளர்' எனப்படுவர் யார்? அவரது மூப்பு எந்த அடிப்படையில் தீர்மானிக்கப்படுகிறது? அவரது வயதினாலா? அவர் பெற்ற கல்வித் தகைமைகள், பட்டங்களினாலா? அவர் வகிக்கின்ற உயர்பதவியினாலா? அவர் கொண்டுள்ள ஜனரஞ்சகத்தினாலா?....!

இவை எல்லாவற்றையும் சேர்த்துப் பார்த்தாலும், மூத்த எழுத்தாளர் ஒருவர் புறக்கணிக்கப்பட்டதாகக் கூற முடியாது! 'எக்கச்சக்கமான மூத்த எழுத்தாளர்' ஒருவருக்குத் தான் விருது சிபாரிசு செய்யப்படவிருந்தது.

இவ்வாறு பலர் கேட்கலாம், எனினும் எனது நோக்கம் என்னவெனில் இவ்விவகாரம் நன்கு பகிரங்கப்படுத்தப்பட வேண்டும் என்பதும், எதிர்காலத்தில் இவ்வாறான கேலிக்கூத்துக்கள் இடம் பெறாமல் தடுப்பதற்கு ஆவன செய்யப்படவேண்டும் என்பதுமே.

இல்லாவிடில் சுதந்திர இலக்கிய விழாவும் பத்தோடு பதினொன்றாகப் போய்விடும். பிழைக்கத் தெரிந்தவர்கள் மட்டுமே அதில் அக்கறை காட்டுவார்கள். அதை இதைப் 'பாவித்து' விருதுகள் பெற முயற்சிப்பார்கள். நூல்களைத் தெரிவு செய்வதற்கு சர்வ எழுத்தாள வாக்கெடுப்பு நடத்தவேண்டிய கட்டத்துக்கு நாம் வந்து சேருவோம். தகுந்த நூல்களை விடுத்து 'உகந்த எழுத்தர்'களை போற்றி செய்குவோம்.

வாழ்க ஜனநாயகம்!!!

*எஸ். ரஞ்சகுமார்.*
*கொழும்பு -15*

www.tamilarangam.net



# திருமலை: ஈ.பி.டி.பி மீது பாய்ச்சல்



மு.சந்திர குமார் (பா.உ)

காணி உத்தியோகத்தர் பீரிஸ் என்பவர் நகரமத்தியில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து திருகோணமலையில் ஒரு மறைமுக முறுகல் நிலை உருவாகி இருந்தது எனினும் 8ந்திகதி மாணிக்கவாசகர் வீதியில் உதவிப்பொலிஸ்இன்ஸ்பெக்டர் நவரட்ண துப்பாக்கி வாலிபரொருவரால் பட்டப்பகலில் சுட்டுவீழ்த்தப்பட்ட சம்பவமே சிங்கள மக்கள் மத்தியில் ஒரு வித அச்சத்தையும் பாதுகாப்புத் துறை மத்தியில் நகரிலுள்ள ஆயுதக்குழுக்கள் மீது சந்தேக நிலையையும் தோற்றுவித்துள்ளது.

காணி அதிகாரி பீரிஸ் காணி விடயங்களில்தமிழர்களுக்கு எதிராகச்செயல்பட்டு வந்தவர்; அரசாங்க அதிபரின் செல்லப் பிள்ளையாக இருந்தவர் என்ற பரவலான அபிப்பிராயம் தமிழர்கள் மத்தியில் வேரூன்றி இருந்தது. எனவே தமிழ் அமைப்புக்கள் எவராலேயோ அவர் சுட்டுக்கொல்லப்பட்டிருக்கலாம் என்றே நம்பப்படுகிறது. ஆனால் உதவிபொலிஸ் இன்ஸ்பெக்டர் நவரட்ண சுட்டுக் கொல்லப்பட்டதற்கு பரவலாக அறியப் படக்கூடிய காரணம் எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை. ஒரு வேளை பொலிஸ்காரர் என்ற ரீதியில் இவர் மீது குறிவைக்கப்பட்டிருக்கலாம்.

இவ்விரு படுகொலைகளின் எதிரொலியாக சந்தைப்பகுதியில் சிங்கள மக்கள் சிலரால் ஒக்.10ந்திகதி ஒரு ஆர்ப்பாட்டம் நிகழ்த்த ஒழுங்கு செய்யப்பட்டது. ''பயங்கரவாத இயக்கங்களை - கொலைகார இயக்கங்களை- திருமலையிலிருந்து வெளியேற்று'' என்பதே இதன் சாரமாக இருந்தது. வானொலியில் கூறப்பட்டது போல் இது மாபெரும் நிகழ்ச்சியல்ல. நூற்றுக்குக் குறைவானவர்களே கூடியிருந்தனர். சந்தைப் பகுதிச் சிங்கள மக்கள் மத்தியில்இருந்தும்கூட இதற்குப்போதிய ஆதரவு கிடைக்கவில்லை.

ஊர்வலம்போக வேண்டும் என இவர்கள் அடம் பிடித்த போதும் பொலிஸார் அனுமதி அளிக்கவில்லை. அதேவேளை மடத்தடிப் பகுதியில் கிரனைட் வெடித்த சத்தம் ஒன்று கேட்டவுடன் ஊர்வல வீரர்கள் ஒவ்வொருவராக கழன்று விட்டனர். அவர்கள் தூக்கிவைத்திருந்த சுலோக அட்டைகள் மணிக்கூட்டுக் கோபுரத்தைச் சுற்றி போடப்பட்டிருந்த கம்பிவேலியில் செருகப்பட்டிருந்தன.

சிங்கள மக்கள் மத்தியில் இவ்விரண்டு கொலைகளுக்கும் புலிகள் பொறுப்பல்ல; இங்குள்ள இயக்கங்களே செய்திருக்கலாம் என்ற எண்ணமே மேலோங்கியிருந்தது. பொலிஸார் தரப்பிலும் அத்தகைய ஒரு சந்தேகம் இல்லாமல் இல்லை. மடித்தடியில் வீசப்பட்ட கிரனைட்டும் தீர்க்கப்பட்ட வேட்டுக்களும் பொலிஸார் திட்டமிட்டுத் தங்களுக்கெதிராக நிகழ்த்தியமையே என்பது ஈ.பி.டி.பி.யினரின் வாதம்.

சம்பவம் நடந்த இடத்தை பார்வையிடும் எவரும் ஈ.பி.டி.பியினரின் கூற்று நியாமானது என்பதை ஏற்றுக்கொண்டேயாக வேண்டும். பின்புற வழியாக அவர்கள் அலுவலகத்துக்கு கிரனைட் எறியப்பட்டிருக்கிறது. நிலத்தில் குழி காணப்படுகிறது. அதனுடைய தாக்கம் அலுவலகச் சுவர். தண்ணீர்த் தொட்டி ஓடுகள் என்பவற்றில் தாராளமாகத் தென்படுகிறது.

முன்புறமாக வேட்டுக்கள் தீர்க்கப்பட்டுள்ளன. சுவர்களிலும் ஜன்னல்களிலும் நிறைய அடையாளங்கள். கண்ணாடிகள் நொருங்கியுள்ளன. எட்டடி உயரமான மதிலையும் தாண்டி வேட்டுக்கள் துளைத்துள்ளன. பிரதான கதவு சன்னங்களால் துளைக்கப்பட்ட ஓட்டைகளுடன் காணப்படுகின்றது.

இத்தனைக்கும் இரண்டு பாராளுமன்ற உறுப்பினர்கள் அலுவலகத்தில் இருந்திருக்கிறார்கள். மு. சந்திரகுமார் பா.உ, சி. தங்கவேல் பா.உ. உட்பட அனைவருமே சத்தம் கேட்டதும் சுவர் மறைவுகளில் விழுந்து படுத்ததால் தான் உயிழப்புக்களோ, காயமோ ஏற்படவில்லை. சாதாரண நபர்களாக இருந்தால் அத்தனை பேரும் கொல்லப்பட்டிருப்பார்கள் என்பதுதான் பொது மக்கள் அபிப்பிராயம்.

காலை பதினொரு மணியளவில் ஆரம்பித்த இந்நாடகம் மாலை மூன்று மணி வரை தொடர்ந்தது. கிரனைட் வெடித்ததைத் தொடர்ந்து அலுவலகத்தைச்சுற்றி வளைத்த பொலிஸார் உள்ளே நுழைய முற்பட அலுவலகத்தில் உள்ளோர் கதவைத் திறக்க மறுத்து விட்டார்கள். இதனால் வெகுண்ட பொலிஸார் துப்பாக்கி வேட்டுக்களைச் சரமாரியாகத் தீர்த்திருக்கிறார்கள். அருகிலுள்ள புனித பிரான்சிஸ் சவேரியார் மகா வித்தியாலயக் கட்டிடத்திலும் ஏறிநின்று கைவரிசையைக் காட்டியுள்ளார்கள்.

பா.உறுப்பினர்கள் பொலிஸ் இராணுவ மேலிடத்துடன் தொலைபேசியில் தொடர்பு கொண்ட போது ஈ.பி.டி.பியினர் வேட்டுக்கள் தீர்ப்பதாகவே தங்களுக்குச் செய்தி கிடைத்ததாகக் கூறப்பட்டிருக்கிறது. பொலிஸ் அதிகாரிகள் ஸ்தலத்துக்கு வந்து சகல ஈ.பி.டி.பியினரையும் கைகளை உயர்த்திக்கொண்டு வெளியே வருமாறு கேட்டிருக்கிறார்கள். ஆனால் அவ்வாறு செய்யப்படவில்லை.

எனினும், இராணுவத்திலிருந்து மேஜர், கப்டன் தர அதிகாரிகள் இருவர் வந்து தங்களை உள்ளே வர அனுமதிக்குமாறு கேட்டுக்கொண்டதையடுத்து கதவுகள் திறக்கப்பட்டன. இராணுவ பொலிஸ் உயரதிகாரிகள் உள்ளே நுழைந்து விசாரணையில் ஈடுபட்டார்கள். பொலிஸ் அதிகாரி கான்ஸ்டபிள் ஒருவரை அழைத்து வந்து நீங்கள் சுட்டதால் ஏற்பட்ட காயத்தைப் பாருங்கள் என்று ஈ.பி.டி.பியினரிடம் காட்டியிருக்கிறார்கள்.

உண்மையில் பின்னர் அது கம்பிவேலி கிழிந்த காயமே என்று அந்தக் கான்ஸ்டபிளே ஒத்துக் கொண்டு விட்டார். விசாரணைகளின் பின்பு ஈ.பி.டி.பியினர் வேட்டுக்கள் எதையும் தீர்க்கவில்லையென்பதை பாதுகாப்புத் தரப்பு ஏற்றுக் கொண்டனது. தற்போது சம்பிரதாயப் பாதுகாப்பு பொலிஸாரால் வழங்கப்பட்டிருக்கிறது.

ஏன் கிரனைட் வீசப்பட்டது என்பதற்கு இரண்டு வாலிபர்களை 'செக் பொயின்டில்' தாம் மறித்த போது நிற்காமல் ஓடிவந்து ஈ.பி.டி.பி. அலுவலகத்துள் புகுந்து கொண்டனர் என்கின்றனர் பொலிஸார். அதனால்தான் தாம் துரத்தி வரநேரிட்டதுஎன்றும், தங்களை உட்புக விடாமல் ஈ.பி.டி.பியினர் கிரனைட் எறிந்து சுட்டதால் தான் தாம் திருப்பிச் சுட்டதாகக் கூறுகின்றனர் பொலிஸார். அப்படி எதுவுமில்லை எங்கள் மீதுள்ள குரோத உணர்வின் வெளிப்பாடே இந்த நாடகம் என்கிறார் சம்பவம் நடந்த வேளையில் அங்கிருந்த ஈ.பி.டி.பி.பா. உறுப்பினரான சந்திரகுமார். ஈ.பி.டி.பி பா.உ. தங்கவேல் பயணம் செய்த ஜீப்பை சம்பவம் நடந்த அன்று காலை நகரிலுள்ள பொலிஸ் காவலரண் ஒன்றில் மறித்து அவரை ஜீப்பைவிட்டு இறங்குமாறு கட்டடையிட்டுள்ளனர் பொலிஸார். அவர் தான், ஈ.பி.டி.பி பா.உ. என அடையாளப்படுத்தியும் அதனைச் செவிமடுக்காது இறங்காவிட்டால் மேலே செல்ல அனுமதிக்கமாட்டோம் என்று கூறியிருக்கின்றனர். பொலிஸாரின் இந்தக்கெடுபிடியால் அவர் ஜீப்பைவிட்டு இறங்காமலே ஜீப்பை திருப்பிக்கொண்டு அலுவலகத்துக்குச் சென்று விட்டார்.

இதன்பின்னர் ஈ.பி.டி.பி உறுப்பினர் ஒருவர் அதேகாவலரணில் பொலிஸாரால் மறிக்கப்பட்டார் அவரது தேசிய அடையாள அட்டையையும் ஈ.பி,.டி.பி. அடையாள அட்டையையும் பார்வையிட்ட பொலிஸார் அவரைச் செல்ல அனுமதித்து விட்டு திடீரென பின்னால் இருந்து சுட்டிருக்கிறார்கள். அவர் சைக்கிளையும் போட்டு விட்டு அலுவலகத்தையும் நோக்கி ஓடிவர பொலிஸார் பின்னால் துரத்தி வந்து துப்பாக்கிப் பிரயோகம் செய்தார்கள் என்கிறார் அவர். குரோத உணர்வு எழுந்ததற்கான காரணத்தை சந்திரகுமார் இப்படி விவரிக்கிறார்; ''மற்ற இடங்களைப் போலல்லாது தமிழ்க் கட்சிகள் (குறிப்பாக ஈ.பி.டி.பி.) திருகோணமலையில் செயலூக்கத்தோடு இருக்கின்றன. இதனால் படையினரால் தாம் விரும்பியபடி தம்மிச்சையாகச் செயற்பட முடிவதில்லை. திருகோணமலையைப் பொறுத்தவரை காலத்துக்குக் காலம் இடம் பெறும் இனவன்செயல்களால் தமிழ் மக்கள் தமது வாழ்விடங்களை விட்டு வெளியேற நேர்வது மிகச் சாதாரணமானது. இவ்வாறு வெளியேறியவர்களை மீளக்குடியமர்த்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதில்லை. அவர்கள் அகதிகளாக முகாம்களிலிருக்க, வெளியேறிய தமிழ் மக்களின் நிலங்களிலும், வேறு தமிழர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் சொந்தமான நிலங்களிலும் அரச ஆதரவுடன் சிங்கள மக்கள் குடியேற்றப்பட்டு வருகின்றனர். இந்நிலையில் அகதிகளாகவுள்ள மக்களை அவர்களது நிலங்களில் குடியேற்றும் முயற்சிகளை நாம் மேற்கொண்டோம். இதனை அங்கிருந்த பேரினவாதிகளாலும், படையினராலும் பொறுத்துக் கொள்ள முடியாமற் போய்விட்டது. இதனைத் தடுப்பதற்கு அவர்கள் பலவழிகளிலும் மேற்கொண்ட முயற்சிகள் பயனளிக்காததாலேயே எம்மீது தவறான குற்றச் சாட்டுக்களைச் சுமத்தி எமக்கெதிரான இந்த நடவடிக்கையிலீடுபட்டனர் என்கிறார் சந்திரகுமார். இவரோடு இன்னொரு பா.உறுப்பினரான தங்கவேலும் அங்கிருந்திருக்கிறார். இரண்டு பா.உறுப்பினர்கள் இருந்த இடத்தில் பொலிஸார் இவ்வாறு நடந்து கொண்டமை காடைத்தனமானது என்பது ஊர் மக்களுடைய அபிப்பிராயம்.

இந்த நாடகத்தின்போது நகரம் பதட்டமடைந்தது. கடைகள் இழுத்து மூடப்பட்டன. பாடசாலைகளைப் பெற்றோர்கள் சூழ்ந்து கொண்டனர். பஸ்பாதைகள் கூட மாற்றப்பட்டன. சற்று நேரத்துள் நகரமே ஊரடங்கு பிரகடனப் படுத்தியதைப் போல வெறிச்சோடி விட்டிருந்தது. இந்தச் சம்பவத்தினால் பொதுமக்கள் அபிப்பிராயம் ஈ.பி.டி.பியினருக்கு சார்பாகத் திரும்பியுள்ளது. இயக்கங்கள் மத்தியில் உறவுகள் மேலும் நெருக்கமடைந்துள்ளன. இது தமிழர்களுக்கெதிரான பொலிஸாரின் அடாவடித்தனமே என்ற கருத்துத்தான் மக்களிடையே பரவியுள்ளது.

## நல்ல 'பெடியன்களும்' உதைப்பார்கள்!

கடந்த 8ந்திகதி மாணிக்கவாசர் வீதியில் நவரத்ன என்ற உதவிப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் சுட்டுக்கொல்லப்படும் வரை பொலிஸ் பொதுமக்கள் உறவு திருகோணமலையில் நன்றாகவேயிருந்தது. அதுவும் கனகம் மில் பொலிஸ் போஸ்ட் ஐச் சேர்ந்த பொலிஸ்காரர்கள் ''நல்ல பெடியன்கள்'' என்று ஊருக்குள் பெயரெடுத்திருந்தார்கள்.

அந்த ''நல்ல பெடியன்கள்'' நவரத்ன சுடப்பட்ட சற்று நேரத்துக்கெல்லாம் வெறியாட்டம் நிகழ்த்தி இருக்கின்றார்கள். நவரத்ன மாலை வேளையில் சுடப்பட்டுள்ளார். இந்தப்பெடியன்கள் அக்கம் பக்கத்து வீடுகளுக்குள் புகுந்து கைவரிசையைக் காட்டியிருக்கிறார்கள். தங்களோடு சிரித்துப் பழகியவர்களைக் கை கூசாமல் தாக்கியிருக்கிறார்கள். அங்கிள், அன்ரி என்று அழைக்கப்பட்டவர்கள் எல்லோரிரும் நல்லபெடியன்களிடம் அடி வாங்கிக் கொள்ள வேண்டியதாயிற்று.

திருஞான சம்பந்தர் வீதி ஒரு பிரதான பாதை. அந்த வீதியில் தான் கனகம் மில் பொலிஸ் போஸ்ட். மாலை வேளை வேலைவிட்டு வந்த சகலரும் வயது, பால் வேறுபாடுகளின்றி நல்ல பெடியன்களின் கைவரிசைக்கு இலக்காகியுள்ளனர்.

தெருவிளக்குகளை அணைத்து விட்டு பொல்லுகளாலும், மட்டைகளாலும் வருவோர் போவோரையெல்லாம் ஈவிரக்கமின்றி பதம்பார்த்திருக்கிறார்கள். எஸ்.ஐ.யை எவர் சுட்டார்களோ அவர்களது நோக்கம் நிறைவேறிவிட்டது. அயலவருடன் சகோதரர்கள் போல் வழகி வந்த கனகம் மில் பொலிஸ் ஒன்றிரண்டு மணி நேரத்துக்குள்ளாகவே அந்நியர் ஆக்கப்பட்டு விட்டனர்.

பயிற்சி அறிவுரைகள், பண்பு, பழக்க வழக்கங்கள் எல்லாவற்றையும் தூக்கியெறிந்த பெடியன்களின் நடவடிக்கை பற்றிய மக்களின் இப்போதைய அபிப்பிராயம் 'அது அவர்கள் அதிகாரக் குணம். மாற்ற ஏலாது'

*விவேகி*


**சட்ட உதவி மற்றும் ஆலோசனைச் சேவை**

* உங்கள் உறவினர்கள் பயங்கரவாதச் சட்டம், அவசரகாலச் சட்டம் என்பவற்றின் கீழ் குற்றம் சுமத்தப்பட்டோ/ தடுத்து வைக்கப்பட்டோ உள்ளனரா?
* அத்தகையவர்கள் காணாமல் போயுள்ளனரா/ கடத்தப்பட்டுள்ளனரா?
* உங்களுக்கோ நீங்கள் அறிந்த பிறருக்கோ அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுள்ளதா?

அத்தகைய சந்தர்ப்பங்களில் சட்ட நடவடிக்கைகள் எடுப்பதில் சிரமங்களை எதிர் நோக்குகின்றீர்களா?

*அப்படியாயின் தொடர்பு கொள்ளுங்கள்:-*

**சட்டக்கல்விக்கும் உதவிக்குமான செயற்திட்டம்**

**"மோர்ஜ்,"**

**4, ஜயரத்ன மாவத்தை, திம்பிரிகஸ்யாய,**
**கொழும்பு - 05**
**தொலைபேசி : 584380, 594229**

கடந்த 12 வருடங்களாக மோர்ஜ வடக்குத் தெற்குப் பிரதேசங்களில் பயங்கரவாதத் தடைச்சட்டம் அவசரகாலச்சட்டம் என்பவற்றின் கீழே கைது செய்து குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு சட்ட உதவி ஆலோசனை என்பவற்றை வழங்கி வருகிறது.

சட்ட ஆலோசனைச் சேவையை மோர்ஜ காரியாலயத்தில் திங்கள், புதன், வெள்ளி தினங்களில் பி.ப.2 மணி முதல் 5மணி வரை பெற்றுக்கொள்ளலாம்

*சட்டத்தின் முன் சமத்துவம் - அனைவருக்கும் - ஒரே நேரத்தில்*



**கருத்தரங்கு**

*★அடிப்படை உரிமைகள்,*
*★பயங்கரவாத தடைச் சட்டம்,*
*★அவசரகாலச் சட்டம்,*
*★ஏனைய சட்டப்பிரச்சினைகள்*

பற்றி அறிய விரும்புகிறீர்களா?

இச்சட்டத்தின் கீழான கைதுகள்/ நடவடிக்கைகள் குறித்து எதுவுமே செய்ய முடிவதில்லை என்று திணறுகிறீர்களா?

''மோர்ஜ்' நிறுவனத்தின் சட்டக்கல்விக்கும் உதவிக்குமான செயற்திட்டத்தின் கீழ் இவை பற்றிய கல்வியூட்டலை மேற்கொள்ள நாம் எண்ணியுள்ளோம்.

அதன்படி இவை தொடர்பான முழுநாள் கருத்தரங்கு ஒன்றினை தமிழ் மொழி மூலம் நவம்பர் மாத இறுதியில் முதல்கட்டமாக கொழும்பில் நடாத்த உத்தேசித்துள்ளோம்.

இதில் கலந்து கொள்ள விரும்புபவர்கள் நவம்பர் 15ந் திகதிக்கு முன்பாக சுயவிபரங்களடங்கிய விண்ணப்பம் ஒன்றினை கீழுள்ள முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**சட்டக் கல்விக்கும் உதவிக்குமான செயற்திட்டம்**

**"மோர்ஜ்,"**

**4, ஜயரத்ன மாவத்தை, திம்பிரிகஸ்யாய,**
**கொழும்பு - 05**
**தொலைபேசி : 584380, 594229**


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# விவியன்: ஒரு புரட்சிக்காரியின் மறைவு

என். சரவணன்



கடந்த ஒக்ரோபர் 3ம் திகதியன்று விவியன் குணவர்தன எம்மை விட்டு மறைந்து விட்டார். சகல பத்திரிகைகளும் "புரட்சிக்காரி" விவியனின் இழப்புக் குறித்துச் செய்திகள் வெளியிட்டிருந்தன. கடந்த செப்டெம்பர் மாதம் 18ம் திகதி தான் விவியன் தனது 80வது பிறந்த நாளைக் கொண்டாடியிருந்தார். அவரது சேவையை வாழ்த்தி பல அமைப்புக்கள் பாராட்டுக் கூட்டங்களை நடாத்தியிருந்தன. எண்ணி 15வது நாளில் திடீரென சுகவீனமுற்று அவர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கபட்ட ஒரு நாளிலேயே எல்லோரையும் விட்டுப் பிரிந்துவிட்டார்.

கடந்த வாரம் சரிநிகர் ஆசிரியர் பீட கூட்டத்தின் போது விவியனின் 80வது வயது பிறந்த நாளையொட்டி அவரிடம் ஒரு நேர்காணல் செய்வது தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டது. இறுதியில் அப்பொறுப்பு என்னிடம் விடப்பட்டது. அதற்கான ஒழுங்குகளை மேற்கொண்டிருந்த போதே அவரது பிரிவு பற்றிய செய்தி என்னை எட்டியது. அதிர்ச்சியும், வேதனையும் அடைந்த நிலையில் குற்றவுணர்வும் சூழ்ந்துகொண்டது என்னை.

நேர்காணலைச் செய்ய முடியவில்லை என்பதற்காக மட்டுமல்ல. சென்ற வருடம் யூன் மாதம் எனது தொடர் கட்டுரைக்காக விவியனின் வீட்டுக்குச் சென்று உரையாடியிருந்தேன். அப்போதும் அவரது உடல்நிலை சிறப்பாக இருக்காவிட்டாலும் உற்சாகத்துடன் உரையாடினார். கடந்த காலங்களில் அவரது சேவை பற்றி நான் தெரிந்து வைத்திருந்ததை விட அவருடன் உரையாடியபோது கிடைத்த தகவல்கள் என்னையும் உற்சாகப்படுத்தியிருந்தன. நான் அவரிடம் "உங்களைப் பற்றி நூல் ஒன்றை எழுத அனுமதிப்பீர்களா, நீங்கள் அதற்கு ஒத்துழைப்பீர்களா?" எனக் கேட்டபோது அவர் "நிச்சயமாக நான் ஒத்துழைக்கிறேன். குமாரி ஜெயவர்தனவும் என்னைப் பற்றிய ஒரு நூலை எழுதுவதற்கான முயற்சிகளை செய்து வருகிறார். ஏன் நீங்கள் கொல்வின் பற்றி தமிழில் சரியான நூலை எழுத முயலக் கூடாது?" என என்னிடம் கேட்டார். அவர் பற்றிய நூலை அவர் இருக்கும் போதே செய்ய முடியாமல் போனது ஒரு வகையில் குற்றவுணர்வை ஏற்படுத்துகிறது. ஆனாலும் விவியன் பற்றி விவியனின் ஒத்துழைப்புடன் 'மலல்கொட நந்துதிலக்க' என்பவர் ஒரு நூலை வெளியிட்டிருக்கிறார் என்ற இரு நாட்களுக்கு முன் அறியக்கிடைத்தது. எனினும் இந்நூல் அவர் இறந்த பின் தான் அச்சு செய்து பூர்த்தியாக்கப்பட்டது. விவியனுக்கு அந்நூலைப் பார்ப்பதற்கான வாய்ப்பு இல்லாமல் போய்விட்டது.

விவியனின் மரண ஊர்வலத்தில் கலந்து கொண்ட பெருந்தொகையான செஞ்சட்டையணிந்த கட்சித் தொண்டர்களும், பொது மக்களும் தொகையே விவியனின் சேவைக்கு சாட்சி சொல்லும். முக்கியமாக விவியனிடம் இருந்த ஒரு போராளிக்குரிய நேர்மையும் துணிச்சலும் அவரது புகழுக்குக் காரணமாயிற்று.

விவியன் 1918.09.16ம் திகதியன்று பிறந்தார். ஆங்கிலேய விசுவாசமிக்க உயர் கொவிகம சாதியில் செல்வாக்கு படைத்த பொரளுகொட பரம்பரையில் பிறந்தபோதும் உயர் மத்திய தர வர்க்கத்தவர் பயிலக் கூடிய கொழும்பு மியூசியஸ் கல்லூரியில் பயின்ற காலத்திலேயே பிரித்தானிய ஏகாதிபத்தியத்தை எதிர்த்து "சூரியமல்" இயக்கத்துடன் சேர்ந்து தீவிரமாகப் பணியாற்றினார். ஆங்கிலேயர்களால் வருடாவருடம் மேற்கொள்ளப்பட்டு வந்த (நவம்பர் 5ம் திகதி) "பொப்பிமல்" தினத்தின் போதான 5 நிமிட மௌனத்தினைப் பாடசாலைக்குள்ளேயே ஆர்ப்பாட்டம் செய்து குழப்புவார்.

லங்கா சம சமாஜக் கட்சியில் அன்றைய நாட்களின் தலைவர்களான பிலிப் குணவர்தன, ரொபட் குணவர்தன ஆகியோர் விவியனின் மாமனார்கள் (தாயின் சகோதரர்கள்) இவர்கள் இருவரும் விவியனுக்கு மாக்சீய அரசியல் உணர்வை ஊட்டுவதில் முக்கிய பங்காற்றியிருந்தனர்.

வீட்டுக்குத் தெரியாமல் சூரியமல் இயக்கத்தில் தீவிரமாக பங்கெடுத்து வந்தார். பின்னர் இது தந்தைக்குத் தெரியவந்தபோது விவியன் வீட்டில் அடைக்கப்பட்டார். அதையும் மீறி களவாக அரசியல் கூட்டங்களில் அவர் கலந்து கொள்வார்.

ல.ச.ச.கட்சியோடு சேர்ந்து வேலை செய்ய தந்தையிடம் அனுமதி கிடைக்காத நிலையில், இரகசியமாக ஆரம்பத்தில் வேலை செய்யத் தொடங்கி, பின்னர் கட்சியில் முழுநேர ஊழியராகப் பணிபுரிந்தார். ல.ச.ச.கவின் செயலாளராக அன்று தீவிரமாக பணிபுரிந்து வந்த லெஸ்லி குணவர்தனவுடன் காதல் கொண்டு குடும்பத்தைத் துறக்க வேண்டிய நிலைக்கும் உள்ளானார்.

லெஸ்லி-விவியன் தொடர்பை இல்லாமல் செய்வதற்காக விவியனை வீட்டில் அடைத்து வைத்ததால் லெஸ்லி, விவியனின் தந்தை குணத்திலக்கவுக்கு எதிராக ஆட்கொணர்வு மனு வழக்கொன்றை தொடர்ந்திருந்தார். அன்று லெஸ்லிக்கு ஆதரவாக வழக்காடியவர், பின்னாளில் ஜனாதிபதியான ஜே.ஆர்.ஜெயவர்தனாவே. இவ்வழக்கின் போது நீதிமன்றத்தில் வைத்து விவியனின் தந்தை "எனது மகள் காதலிக்கும் நபர் தேச விரோதக் கட்சியின் உறுப்பினர். ல.ச.ச.க. ஒரு தேச விரோதக் கட்சி எனப் பேசப்படும் கட்சியாகும். அப்படிப்பட்ட ஒருவரைத் திருமணம் செய்தால் எனது மகளும் தேச விரோத குற்றத்துக்காக தண்டனை அனுபவிக்க வேண்டி வரும்" என்றார்.

அதற்கு விவியன் அளித்த பதிலோ "அவர் கூறும் தேச விரோதக் கட்சியில் இரகசியமாக நானும் அங்கம் வகித்து வருகிறேன். எனவே ஒரு தேச விரோதக் கட்சியொன்றின் உறுப்பினருக்குக் கிடைக்கக் கூடிய அதே தண்டனையை நானும் அனுபவிக்க வேண்டிய ஒன்றே!" என்றார்.

இவ்வழக்கின் இறுதியில் விவியனின் தந்தையை நீதிமன்றம் கண்டித்ததுடன், லெஸ்லி-விவியனின் இணைவை அங்கீகரித்தது.

விவியன்-தந்தை உறவு அத்துடன் முறிவடைந்தது. விவியனின் தனிப்பட்ட வாழ்க்கையும், தனிப்பட்ட இயல்பும் புரட்சிகரமானவை. 1950இல் கொழும்பு மாநகரசபையின் உறுப்பினராகவும், 1956 தேர்தலில் பாராளுமன்ற உறுப்பினராகவும் ஆனார். 1964ம் ஆண்டு தேர்தலிலும் வெற்றி பெற்றார். 1965ம் ஆண்டு வரையான காலத்துக்குள் உள்ளூராட்சி மற்றும் வீடமைப்பு பிரதியமைச்சராகப் பதவி வகித்தார். இலங்கையின் அரசியலில் முதற் பெண் பிரதியமைச்சராக நியமிக்கப்பட்டவர் விவியனே. 1970ம் ஆண்டு தேர்தலிலும் வென்றார். 1977ம் ஆண்டு தேர்தலில் இரத்மலான தொகுதியில் போட்டியிட்ட போதும் லலித் அத்துலத் முதலியினால் தோற்கடிக்கப்பட்டார். அதன் பின்னர் அவர் எந்தத் தேர்தலிலும் போட்டியிடவில்லை.

1956ம் ஆண்டு மொழிப்பிரச்சினையின் போது தமிழ் மொழிக்கும், சிங்களத்துக்கும் சமமான அந்தஸ்து வழங்கப்பட வேண்டுமெனப் போராடிய போது சிங்கள இனவாதிகளால் 'யாழ்தேவி', எனப் பட்டப்பெயர் சூட்டப்பட்டார். அதுபோல '1953ம் ஆண்டு ஹர்த்தால்' போராட்டத்தின் போது தீவிரமாக மக்களை அணிதிரட்டிப் போராடினார். அமெரிக்க தூதராலயத்தின்முன் ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடத்திய போது விவியன் கொள்ளுப்பிட்டி பொலிஸாரால் கடுமையாகத் தாக்கப்பட்டார். இறுதி வரையும் ஒடுக்கப்படும் மக்களுக்காகப் போராடி வந்தவர் விவியன். தன் மீதும், கட்சித் தொண்டர்கள் மீதும் ஐ.தே.க.வினரால் மேற்கொள்ளப்பட்ட சண்டித்தனங்களை விவியன் தலைமை கொடுத்து முறியடித்த சம்பவங்கள் ஏராளம். அன்று ல.ச.ச.கவின் அனுசரணையுடன் வெளியிடப்பட்ட 'ஜனதின' பத்திரிகையிலும் தொடர்ந்து சில வருடங்கள் பணியாற்றியிருந்தார்.

அன்றைய காலனித்துவத்துக்கு எதிராகவும், பிற்காலத்தில் அமெரிக்க ஏகாதிபத்திய நவகாலனித்துவத்திற்கெதிராகவும் போராடி வந்த விவியன், நிறைவேற்று ஜனாதிபதி முறை, திறந்த பொருளாதாரக் கொள்கை என்பவற்றிற்கெதிராகவும் பிற்காலங்களில் குரலெழுப்பினார். பெண்களுக்கு எதிராக நடந்த பல வன்முறைகளைக் கண்டித்து நடத்தப்படும் ஊர்வலங்கள் ஆர்ப்பாட்டங்களில் விவியனைக் காணலாம்.

பிரேமதாச ஆட்சிக் காலத்தில் அநுரதபுரத்துக்கும் மேற்பட்ட அப்பாவி இளைஞர்கள் படுகொலை செய்யப்பட்ட போது "அன்னையர் முன்னணி"யுடன் இணைந்து பல கூட்டங்கள் நடத்தியிருக்கிறார். அப்போதெல்லாம் விவியனின் காரசாரமான உரையைக் கேட்பதற்காகவே பலர் கூடுவர். வயதானாலும் குரலும், அதன் பின்னால் இருக்கும் கருத்தும் உறுதி குலையாது இருக்கும். ஒடுக்கப்பட்ட மக்களனைவரும் விவியன் ஆற்றிய சேவையை இலகுவில் மறக்க மாட்டார்கள். இலங்கையில் இடதுசாரிக் கட்சிகள் எவையுமே பெண்களின் உரிமைக்காக காத்திரமான பங்களிப்பை இதுவரை செய்யாததானது, பெண்களின் பங்களிப்பிலும் வளர்ச்சியை ஏற்படுத்தவில்லை. மரபு இடதுசாரி அமைப்புகளின் கடைசிக்காலமான இந்தக் கட்டத்தில் இறுதியான புரட்சிக்காரியை இழந்துவிட்டோம்.

ஹிட்லரின் சிறையில் தூக்குக்கு அனுப்பப்பட்ட ஜேர்மன் கம்யூனிஸ்ட் கட்சி மத்திய குழு உறுப்பினர் ஜூலியஸ் பூஷிக் சொன்னதைப் போல *"எமது போராட்டத்தின் சகல நிகழ்வுகளும் பதிவு பெறுவது அவசியம். போராட்டத்தை முன்னெடுக்கும் அடுத்த சந்ததிக்கு அது அவசியமானது."* என்பது போல விவியனின் வாழ்க்கையும் பதிவு பெறல் அவசியமானது.

# ஆலையடி வேம்பு: கைதான இளைஞர்கள் எங்கே?

1.5.96 புதன்கிழமையன்று திருக்கோவில் பிரதேச செயலாளர் பிரிவின் பள்ளிக்குடாவில், திருக்கோவில், கஞ்சிரன்குடா, சாகமம், அக்கரைப்பற்று, ஆகிய முகாம்களைச் சேர்ந்த விசேட அதிரடிப்படையினர் (STF) விநாயகபுரத்திலிருந்து 150 ஆண்களைக் கைது செய்து, தீவிரவாதிகளினால் பயன்படுத்தப்பட்டு வருவதாகக் கூறப்படும் காட்டை நோக்கி முன்னோ மனிதக் கேடயங்களாகப் பயன்படுத்தியுள்ளனர். அதிர்ஷ்டவசமாக காட்டில் எவரும் இருக்கவில்லை. எனவே கிராமவாசிகள் பாதிக்கப்படவில்லை.

02.05.1996 காலை சியம்பலாண்டுவ ஊடாக மொனராகலைக்கு பஸ்ஸில் பயணஞ் செய்து கொண்டிருந்த மூன்று பொலிஸ் கான்ஸ்டபிள்கள் தீவிரவாதிகளால் கடத்திச் செல்லப்பட்டனர். அதே தினம் 2.00 மணியளவில் கடத்திச் செல்லப்பட்ட இடத்திற்கு பல மைல்கள் தொலைவிலுள்ள இன்ஸ்பெக்டர் ஏற்றம் தமிழ்கிராமம்மீது ஹெலிகொப்ரரிலிருந்து துப்பாக்கிவேட்டுக்கள் தீர்க்கப்பட்டன. தமது உயிர்களுக்குப் பயந்து அப்பாவிக் கிராமத்தவர்கள் படிப்படியாகக் கிராமத்தை விட்டுச் சென்றனர்.

02.05.1996 அன்று இரவு பொத்துவில் பொலிஸ் நிலையத்திலிருந்து இன்ஸ்பெக்ரர் ஏற்றம் கிராமம் மீது மோட்டார் ஷெல் தாக்குதல் நடத்தப்பட்டது. கிராமத்தவர்கள் இரவு நேரங்களில் தமது கிராமத்தில் தங்க அஞ்சுகின்றனர்.

03.05.1996 காலை பொத்துவில் பொலிசார் குண்டுமடுவிலும், இன்ஸ்பெக்ரர் ஏற்றம் பகுதியிலும் சுற்றி வளைத்து தேடுதல் நடவடிக்கை மேற்கொண்டு 12 வயதுக்குமேற்பட்ட 50 வயதுக்குட்பட்ட எல்லா ஆண்களையும் காட்டிற்குச் சென்று கடத்தப்பட்ட மூன்று பொலிசாரையும் உயிருடன் கொண்டு வருமாறு உத்தரவிட்டுள்ளனர். கான்ஸ்டபிள்கள் கடத்திச் செல்லப்பட்டது ஏன் எனவோ? அன்றி யாரால் எனவோ அப்பாவிப் பொதுமக்கள் எதுவுமே அறியமாட்டார்கள். எவ்வாறெனினும் 03.05.1996 அன்று எதுவுமே நடைமுறைச்சாத்தியமாகாததால் இவ்விடயம் தொடர்பாக அதே நடைமுறை மறுநாளும் பொலிசாரினால் மேற்கொள்ளப்பட்டது. பொலிசாரும், விஷேட அதிரடிப்படையினரும் விரும்பியபடியே அம்மக்கள் செயற்பட நிர்ப்பந்திக்கப்பட்டார்கள். இந்த அப்பாவிக் குடியேற்ற வாசிகள் பொத்துவில் பொலிசாரினால் வன்முறைக்குள்ளாக்கப்பட்டதுடன் அவர்களை மனிதக் கேடயங்களாகவும் பயன்படுத்துகின்றனர்.

03.05.1996 அன்று ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் பிரிவின் கோலாவிலைச் சேர்ந்த மூன்று இளைஞர்களான குழந்தைவேல் மகேசன் (19), முருகுப்பிள்ளை கிருபாகரன் (25), மார்க்கண்டு ஜீவராசா (20) ஆகியோர் திருக்கோவிலில் வைத்து விஷேட அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டனர். அம்மூன்று இளைஞர்களது மூன்று தேசிய அடையாள அட்டைகளும் எடுத்து வைக்கப்பட்டு பின் மறுநாட்காலை திருக்கோவில் விஷேட அதிரடிப்படை முகாமிற்கு வருமாறு அறிவுறுத்தப்பட்டனர். அவ்இளைஞர்கள் மூவரும் முகாமுக்கு சென்றபோது அவர்கள் கைது செய்யப்பட்டனர். பின்பு அவர்களது சைக்கிள்கள் அவர்களது உறவினர்களிடம் கையளிக்கப்பட்டன. அதன்பின்பு அவர்களின் பெற்றோர் திருக்கோவில் முகாமுக்குச் சென்று விசாரித்த போது, அவர்களிடம் அக்கரைப்பற்று முகாமுடன் தொடர்பு கொள்ளுமாறு கூறப்பட்டுள்ளது. அக்கரைப்பற்று முகாமில் விசாரித்தபோது திருக்கோவில் விஷேட அதிரடிப்படையினரால் அவ்வாறு எவரும் கையளிக்கப்படவில்லையெனப் பெற்றோரிடம் கூறப்பட்டுள்ளதுடன் மேற்கூறப்பட்ட இளைஞர்கள் மூவரையும் இதுவரை காணவில்லை.

03.05.1996 அன்று விநாயகபுரம் பாடசாலை வீதியைச் சேர்ந்த தனிகாசலமும், தம்புலுவில் சிவன் கோவில் வீதியைச் சேர்ந்த பீ. கனேசமூர்த்தியும் கொரைக்களப்பில் தமது வயல் வேலைகளுக்கு இரவுக் காவலுக்குச் சென்றனர். இரவு 11.00மணியளவில் காட்டு எருமைகள் வயல் வெளிகளுக்கு வந்துள்ளன. மேற்கூறப்பட்ட இரு காவலாளிகளும் எருமைகளைத் துரத்தியடித்து விட்டு கஞ்சிரங்குடா வீதியினூடாக வருகையில் விஷேட அதிரடிப்படையினர் அவ்விருவரையும் கைது செய்து ஈவிரக்கமின்றித் தாக்கிவிட்டு மறுநாட் காலை அவர்களை விடுவித்துள்ளனர். அவ்விரு காவலாளிகளும் திருக்கோவில் வைத்தியசாலைக்குச் சென்று தமது சிராய்வுகளுக்கும், காயங்களுக்கும் வைத்திய சிகிச்சை பெற்றுள்ளனர். டிராக்டர் சாரதிக்கென ஒதுக்கப்படும் எந்தவித வேலையும் அவர் கவனிக்க வேண்டுமெனவும் எல்லா டிரக்ரர் உரிமையாளர்களுக்கும் திருக்கோவில் விஷேட அதிரடிப்படையினர் கூறியுள்ளனர். பழிவாங்கும் நடவடிக்கைக்குப் பயந்து டிரக்ரர் உரிமையாளர்கள் இவ் ஏற்பாட்டை ஏற்றுக்கொள்ள நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர். கடந்த ஆறு மாதங்களுக்கு மேலாக இவ்ஏற்பாடு நடைமுறையிலுள்ளது. இவர்களில் எவராவது இவ் அறிவுறுத்தல்களைக் கடைப்பிடிக்காவிட்டால் அவர் கைது செய்யப்பட்டுத் தண்டிக்கப்படுவார்.

05.05.1996 அன்று கிராமத்தில் உள்ள எல்லா சில்லறைக் கடைகளையும், பிரதான வீதிக்கு இடமாற்றுமாறு அல்லது மூடிவிடுமாறு கோரப்பட்டது. பிரதான வீதியினூடாகக் கடைகளைக் கட்டத் தேவையான போதியளவு பணமெதனையும் கொண்டிராத காரணத்தால் பல கிடுகுகளாலான குடிசைச் சிறு வர்த்தகர்கள் தமது கடைகளை மூடியுள்ளனர். மாதமொருமுறை வழக்கமாக அவர்கள் செய்வதைப்போலவே 05.05.1996 ஞாயிறன்றும் அதிரடிப்படை முகாம் பதிவுப் புத்தகத்தில் கையொப்பமிடத் தமது பாஸ் புத்தகங்களுடன் அன்னாமலை இளைஞர்கள் விஷேட அதிரடிப்படை முகாமுக்குச் சென்றனர். இக்கூட்டத்திலிருந்து சவளக்கடையைச் சேர்ந்த 20 இளைஞர்களது பாஸ் புத்தகங்கள் மீள வழங்கப்படாது, 07.05.1996 அன்று திரும்ப வருமாறு கட்டளையிடப்பட்டனர். அந்நபர்கள் விஷேட அதிரடிப்படை முகாமுக்குச் சமூகமளித்தபோது, வீதியால் சென்று கொண்டிருந்த வேறு அன்னளவாக 50 தமிழ்ச் சிவிலியன்களைப் பாதுகாப்புப்படையினர் தடுத்து வைத்ததுடன் இவ் அப்பாவிப் பொதுமக்கள் கூட்டத்தைக் கேடயமாக வைத்து பூளிற் 7 இனதும் 15 இனதும் பகுதியான காரைக்குடாவின் குடியிருப்பு முனைப் புதிய வீடமைப்புத் திட்டத்தில் தேடுதல் நடவடிக்கையொன்றை நடத்தினர். அப்போது மக்கள் வேப்பியடி விஷேட அதிரடிப்படை முகாமுக்குக் கொண்டு செல்லப்பட்டு மாலையில் விடுவிக்கப்பட்டனர். இந் நடவடிக்கையின் போது அன்னாமலை விஷேட அதிரடிப்படை நிலையப் பொறுப்பதிகாரி கலசிறியும் அங்கு இருந்தார்.

12.05.1996 அன்று இளைஞர்கள் பதிவுப்புத்தகத்தில் கையொப்பமிடுவதற்கு அன்னாமலை விஷேட அதிரடிப்படை முகாமுக்குச் சென்ற போது நிந்தவெளியைச் சேர்ந்த எல்லா இளைஞர்களும் ஒரு நாளைக்கு ஒருவர் வீதம் முகாமுக்கு காலை 6.00 மணிக்கு வந்து முகாம் பகுதியில் கூலிவேலை செய்ய வேண்டுமெனப் பணிக்கப்பட்டனர்.

13.05.1996 அன்று பி.ப.3மணியளவில் குடாத்தீவு எனும் தமிழ்க்கிராமம் மீது குறிவைக்கப்பட்டு மோட்டார்க் குண்டுத் தாக்குதல் (Shell) நடத்தப்பட்டது. 06 குண்டுகள் வயல் வெளிகளில் விழுந்தன. எவரும் பாதிப்புக்குள்ளாகவில்லை.

11.05.1996 அன்று பி.ப.2 மணியளவில் அக்கரைப்பற்றின் ஏழாம் பிரிவில் பொலிசாரினால் தேடுதல் நடவடிக்கையொன்று மேற்கொள்ளப்பட்டது. இளைஞர்கள் கைது செய்யப்பட்டு ஈவிரக்கமின்றித் தாக்கப்பட்டனர். பொத்துவிலைச் சேர்ந்த ஒரு அகதியான மகேந்திரன் (22) அக்கரைப்பற்றைச் சேர்ந்த விஸ்வநாதன் (21) ஆகிய இருவருமே மிகுந்த பாதிப்புக்குள்ளானவர்களாவர். விஸ்வநாதனின் தேசிய அடையாள அட்டை சிறிது உருக்குலைந்து போயிருந்ததை அவதானித்த படையினர் அவர் ஒரு தீவிரவாதி என முடிவெடுத்தனர். அவர் கடுமையாகத் தாக்கப்பட்டதுடன் அவரது தலை சுவரில் பலமாக அடிக்கப்பட்டது. பின்பு அவர்கள் இருவரும் விடுவிக்கப்பட்டனர்.

சுயாதீனப் பிராந்திய இணை வலையமைவு (Independent Regional Associated Network - I.R.A.N.) அறிக்கையிலிருந்து

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# குழந்தைகளுக்கும் உங்களுக்குமிடையே /16



குழந்தையின் கஸ்டங்கள் ஆதரவுடனும், புரிந்துணர்வுடனும் அணுகப்பட வேண்டியவை

மூலம்:டொக்டர் ஜெயிம் ஜி ஜினோல்ட்

தமிழில்: அருண்

### இசை அல்லது சங்கீத வகுப்புக்கள்:

ஒரு குழந்தை இசைக்கருவி ஒன்றைப் பழகிக்கொண்டிருக்கும் காலங்களில் வழமையாகப் பெற்றோர்கள் கேட்கக் கூடிய ஒரு சங்கீதம்தான் 'எனக்குப் பழக விருப்பமில்லை.. இனி நான் வகுப்புக்குப் போகமாட்டேன்.' இந்த முணுமுணுப்புச் சங்கீதத்தை ஒரு சரியான குறிக்கோளுடன் அணுகுவது என்பது ஒன்றும் இலேசான காரியம் அல்ல.

சில பெற்றோர் தமது சிறுபராயத்தில் தம்மீது திணிக்கப்பட்ட இசை வகுப்புக்களை ஞாபகப்படுத்திக் கொள்வதனால் தமது குழந்தைகளுக்கு ஏற்படும் நெருக்கடிகளைப் பகிர்ந்து கொள்கிறார்கள். இசைக்கருவி வாசித்துப்பழகுவதோ பழகாமல் விடுவதோ அவர்களது பிரச்சினை அல்ல; அது குழந்தையின் பிரச்சினை ஆகும். இவ்விடயத்தில் வீட்டில் வாசித்துப்பழகுவதா அல்லவா என்பதை குழந்தையேதீர்மானிக்க அனுமதிக்கப்பட வேண்டும். அது தனக்கு விருப்பமான போது பழகுகிறது; விருப்பமில்லாதபோது தனது வகுப்புக்களை தானே ரத்துச்செய்தும் கொள்கிறது. பணம் கொடுத்துப் படிக்கச் செல்லும் ரியூசன் வகுப்புக்களைத்தவிர (அது பெற்றோரின்கவனிப்பில் தங்கியுள்ளது) இசைக் கருவிகளை வாசித்துப்பயிற்சி செய்வது குழந்தையின் பொறுப்புணர்வுடன் சம்பந்தப்பட்டதாகும்.

மற்றைய பெற்றோர்கள் தமது சிறுபராயம் அளவுக்கு மீறிய விட்டுக்கொடுப்பு வாய்ந்ததாக இருந்ததால் பாழாகிப்போன தமது இசைக்கல்வி அனுபவத்தையிட்டு கழிவிரக்கம் கொள்பவர்களாக இருப்பதால், என்ன நடந்தாலும் சரி, பிள்ளைகள் பயிற்சி செய்துதான் ஆக வேண்டும் என்று கருதுகிறார்கள். குழந்தை பிறப்பதற்கு முன்பே அது எந்த இசைக்கருவியை பழகவேண்டும் என்பதை அவர்கள் தீர்மானித்து விடுகிறார்கள். குழந்தை ஒரு புல்லாங்குழலை ஒழுங்காகப் பிடிக்கத் தெரிந்துகொண்டாலோ, ஒரு குழலை ஊத புரிந்து கொண்டாலோ அல்லது ஒரு பியானோவின் கட்டைகளை அழுத்தும் சக்தி பெற்றுவிட்டாலோ போதும் அவர்களுக்கு, உடனே தாம் முன் கூட்டியே தீர்மானித்த கருவியில் பயிற்சி செய்வதற்கான வேலையை தொடக்கி விடுகிறார்கள். குழந்தையின் கண்ணீரோ, அடம்பிடித்தலோ கணக்கெடுக்கப்பட மாட்டா; அதன் எதிர்ப்புணர்வு அடக்கப்பட்டு விடும். பெற்றோரின் செய்தி பலமாகவும் உறுதியாகவும் இருக்கும்: ''நாங்கள் காசு கொடுக்கிறோம்; நீ பழக வேண்டும்''. இத்தகைய நிலைமைகளின் கீழ் ஒரு குழந்தை இசைக்கல்வியில் ஆற்றல் பெறவும் கூடும். பெறாமல் விடவும் கூடும். ஆனால் இதனால் ஏற்படும் மொத்த விளைவுகள் மோசமானவை. இதன் முடிவு குழந்தைகட்கும் பெற்றோர்க்குமிடையில் தொடர்ச்சியான அன்னியோன்னியமற்ற உறவை ஏற்படுத்துமானால் அது குழந்தை பெற்றுள்ள இசை ஆற்றலை விட அதிகளவுக்கு பெறுமதி வாய்ந்த ஒரு இழப்பாகும்.

இளமைக்கால இசைக்கல்வியின் பிரதான நோக்கம், குழந்தைகள் தமது உணர்வுகளை வெளிப்படுத்துவதற்கான ஒரு வினைத்திறன் மிக்க வழிமுறையை அவர்களுக்கு வழங்குவதாகும். குழந்தையின் வாழ்க்கையானது பெருமளவுக்கு கட்டுப்பாடுகளும், ஒழுங்குவிதிகளும் கொண்டதாகவும் விரக்தியூட்டுவதாகவும் இருப்பதால் இத்தகைய ஒரு ஊடகம் அவர்களது மன உணர்வை வெளிப்படுத்த அவசியமானதாகும். இசை, மனஉணர்வுகளை இலகுவாக வெளியிட சிறந்த ஒரு சாதனமாகும். அது கோபத்தின் ஒலியை, சந்தோஷத்திற்கு ஒரு வடிவை, மன அழுத்தங்களுக்கு விடுதலையை வழங்குகிறது. பெற்றோர்களோ, ஆசிரியர்களோ இசைக்கல்வியை பெரும்பாலும் இந்தக்கண்ணோட்டத்தில் பார்ப்பதில்லை. பெரும்பாலும் அவர்கள் இசைச்சுரங்களை மீள ஒப்பிக்கும் திறமையைப் பற்றியே அதிக கவனம் செலுத்துகிறார்கள். இந்த அணுகுமுறை குழந்தையின் செயற்திறன், மற்றும் அதன் ஆளுமை என்பவை பற்றிய மதிப்பீட்டையும், விமர்சனத்தையும் உள்ளடக்குவதாயுள்ளது. இதன் விளைவு மிகவும் துயரம்தரும் விதத்தில் வெளிப்படுகிறது. குழந்தை வகுப்புக்களை கைவிட எத்தனிக்கிறது. ஆசிரியரைச் சந்திப்பதைத் தவிர்க்க முயல்கிறது. தனது இசை தொடர்பான ஈடுபாட்டையே விட்டுவிட முயல்கிறது. பெரும்பாலான வீடுகளில் மூலையில் வீசப்பட்டிருக்கும் ஒரு புல்லாங்குழலோ, தூசிபிடித்திருக்கும் ஒரு ஃபிடிலோ, அல்லது பூட்டிவைக்கப்பட்டிருக்கும் ஒரு பியானோவோ, இத்தகைய விரக்தி வாய்ந்த முயற்சிகளினதும், நிறைவேறாத நம்பிக்கைகளதும் கவலைதரும் சாட்சிகளாக இருப்பதைக் காணலாம்.

பெற்றோர்கள் என்ன செய்யலாம்? பெற்றோர்களின் வேலை என்னவென்றால், அக்கறையும் அன்பும் வாய்ந்த ஒரு ஆசிரியரை, இசையை மட்டுமல்ல தனது மாணவர்களையும் தெரிந்து கொண்டுள்ள ஒரு ஆசிரியரைக் கண்டு பிடிப்பதேயாகும். ஆசிரியர்தான் குழந்தையிடம் இசை தொடர்பான தொடர்ச்சியான ஆர்வம் ஏற்படுவதற்கான திறவுகோலாக இருக்கிறார்; அவருக்குத்தான் அதன் எதிர்கால வாய்ப்புக்களை திறக்கவோ மூடிவிடவோ முடியும்.

ஆசிரியரின் முக்கியமான கடமை என்னவென்றால், குழந்தையின் மதிப்பையும், நம்பிக்கையையும் பெற்றுக்கொள்வதாகும். அவர் அதில் தவறுவாராயின், அவர் தனது விளக்கங்களில் வெற்றி பெற முடியாது. தான் வெறுக்கும் ஒரு ஆசிரியரிடமிருந்து இசையை விரும்புவதற்கு கற்றுக்கொள்ள ஒரு குழந்தையால் முடியாது. ஆசிரியரின் உணர்வு பூர்வமான குரல், அவரது எல்லா இசைக்கருவிகளையும் விட பலமான எதிரொலியை எழுப்ப வல்லது.

தவிர்க்கப்படக்கூடிய பிரச்சினைகளைத் தடுப்பதற்கு ஆசிரியர், பெற்றோர், பிள்ளை ஆகிய மூவரும் சேர்ந்து கலந்தாலோசித்து சில அடிப்படை விதிகளுக்கு உடன்பட்டு வரவேண்டும்.

1. முன்கூட்டிய, ஆகக் குறைந்தது ஒரு நாளாவது முன்கூட்டிய அறிவிப்பு இல்லாமல் வகுப்புக்களை ரத்துச்செய்யக் கூடாது.

2. ஒரு ஆசிரியருடனான சந்திப்பு ரத்து செய்யப்பட வேண்டுமானால் அதைச் செய்வதற்கு ஆசிரியருடன் தொடர்பு கொள்ள வேண்டியது பெற்றோர் அல்ல. பிள்ளையே தான்.

3. இசைப்பயிற்சி செய்வதற்கான நேரத்தையும் இடத்தையும் தெரிவு செய்வதற்கு [illegible]முறை சார்ந்த வாய்ப்புக்கள் வழங்கபபட வேண்டும்.

இத்தகைய விதிமுறைகள் கடைசி நேரத்து மனஉந்துதலின் காரணமாக வகுப்பை ரத்துச்செய்யும் போக்கை குறைப்பதுடன் குழந்தையின் சுதந்திரம் மற்றும் பொறுப்புணர்வுபற்றிய உணர்வுகளை ஊக்குவிக்கிறது. அதேவேளை இந்த விதிமுறைகள், நாம் இசையை குழந்தைகள் கற்பதில் ஆர்வமாயுள்ளவர்கள் என்ற போதும் அதை விட அதிகளவு ஆர்வத்தை அதன் சொந்த உணர்வுகள் மற்றும் கருத்துக்கள் தொடர்பாகக் கொண்டிருக்கின்றோம் என்ற செய்தியையும் குழந்தைக்கு வழங்குகின்றன.

பயிற்சி செய்வது தொடர்பாக ஒரு குழந்தை நச்சரிக்கப்படக்கூடாது. இசைக்கருவி எவ்வளவு விலை உயர்ந்தது என்பது பற்றியோ, அதனை வாங்குவதற்காக தகப்பனார் கஷ்டப்பட்டு உழைக்கிறார் எனபதையோ ஒரு போதும் குழந்தைக்கு ஞாபகப்படுத்தக் கூடாது. இத்தகைய பேச்சுக்கள் குற்ற உணர்ச்சியையும், எதிர்ப்புணர்வையும் தோற்றுவிக்கின்றன. இத்தகைய பேச்சுக்கள் இசை உணர்வையோ ஆர்வத்தையோ உருவாக்கக் கூடியவை அல்ல.

குழந்தையின் இசை 'ஆற்றல்களை' குறித்து எதிர்வு கூறுதலை பெற்றோர்கள் தவிர்க்க வேண்டும். உதா ரணமாக, இப்படியான எதிர்வு கூறல்கள் குழந்தையைச் சோர்வடையச் செய்யக் கூடியவையாகும்.

''நீ அவற்றைப் பயன்படுத்துவாயானால், உன்னுடைய திறமை மிகவும் அற்புதமாக இருக்கும்''

''நீ கொஞ்சம் கவனமெடுத்தால், இன்னொரு லோனார்ட் பேர்ன்ஸரின் (Leonard Beinstein) ஆகவரமுடியும்.

இவ்வாறான சந்தர்ப்பங்களில், இப்படியான அபிப்பிராயங்களை அப்படியே பேணுவதற்குரிய இலகுவான வழி அவற்றைப் பரீட்சித்துப் பார்க்காமல் இருப்பதுதான் என்று முடிவுகட்டக்கூடும். குழந்தை இவ்வாறு நினைக்கக்கூடும்.

''நான் முயற்சி செய்யாவிட்டால் ஒரு போதும் தோற்றுப் போகமாட்டேன்''

தனது கஷ்டங்கள் புரிந்து கொள்ளப் படுகின்றன, தான் பாராட்டப்படுகிறேன் என்று ஒரு குழந்தை கருதும் பட்சத்தில் அது நன்றாக ஊக்கமூட்டப்பட்ட உணர்வைப் பெறுகிறது.

றோசலின் தனது மூன்றாவது பியானோ வகுப்பின் போது ஒரு புது விடயத்தை கற்கவேண்டியிருந்தது. தனது இருகரங்களாலும் எட்டாவது சுரத்தைப் போடவேண்டியிருந்தது. ஆசிரியர் மிகவும் அக்கறையுடனும், தெளிவுடனும் அவளுக்கு செய்துகாட்டினார். ''பார் இது மிகவும் இலேசானது... இப்போது செய் பார்ப்போம்....'' தயக்கத்துடனும், ஒழுங்கற்றவிதத்திலும் றோசலின் தனது ஆசிரியரைப் பின்பற்ற முயற்சி செய்தாள். அது சரியாக வரவேயில்லை. வீட்டிற்கு வரும்போது அவள் மிகவும் சோர்ந்து போயிருந்தாள்.

வீட்டில் பயிற்சி செய்கையில் ''ஒரு கையால் எட்டுச்சுரங்களையும் போடுவது சரியான கஷ்டம். இரண்டு கைகளால் செய்வது அதையும் விடக் கஷ்டமானதுதான்' என்று அவளது தாய் கூறினாள். றோசலின் அதை உடனே ஏற்றுக்கொண்டாள். மிகவும் ஆறுதலாக றோசலின் சரியான சுரங்களையும், அதற்குரிய விரல்களையும் கண்டுபிடிக்க முயற்சித்தாள். தாய் சொன்னாள் 'சரியான சுரம் எனக்கு கேட்கிறது... நீ சரியான விரலை வைக்கிறாய்.... அப்படித்தான்' என்றாள். உற்சாகமூட்டப்பட்டவளாய் திருப்தியுடன் றோசலின் பதிலளித்தாள். ''இது சரியான கஷ்டம்தான்'' என்று. அவள் வழமையைவிட அதிகமான அளவு நேரம் பயிற்சி செய்தாள். அந்த வாரம் முழுக்க அவள் தனக்குள் திடசங்கற்பம் பூண்டவளாய் முழுமையாக கண்களை மூடியபடி எட்டுச்சுரங்களையும் வாசிக்கப் பழகும்வரை திருப்தி அடையவேயில்லை.

குழந்தை தன்னுடைய கஷ்டங்கள் மிகவும் ஆதரவுடனும் புரிந்துணர்வுடனும் அணுகப்படும்போது மிகவும் உற்சாகமூட்டப்பட்டதான உணர்வை பெற்றுகக் கொள்கிறது. ஆலோசனை வழங்கல், புகழ்ச்சி, உடனடித்தீர்வு வழிமுறைகள் போன்றவற்றை விட அதிக உற்சாகத்தை இது கொடுக்கிறது.

(வரும்)

## பாடு ஓலம்

தாயகம் விட்டு தாயகத்திற் கொஞ்சத்தை
தேசத்தவரே பிடுங்கி
புத்தளம் வீதிகளில் எறியும் வரை
சகோதரமாய் இருந்த நாம்
நாளொன்று மறைவதற்குள்
அந்நியராகிப் பின் அகதியான
அதிசயத் துயரமிது
வேடிக்கை விநோதமிது-

எதற்காக எம்மை கலைத்தீரோ
விடுதலை வரும் என்று நினைத்தீரோ

தோன்றிய சூரியன்
மறைவதற்குள் எம்மைப் போல்
தேசத்தை இழந்து அந்நியரானவர்
சரித்திரத்தில் நெஞ்சிற் தைத்த இத்துயர் போல்
யாழ் நகர் வெயிலும் சுட்டதில்லை.

எதற்காக எம்மைக் கலைத்தீரோ
விடுதலை வரும் என்று நினைத்தீரோ

வரலாற்றில் ஒரு ஏடுண்டு - அதில்
மானிடர் படிக்க நிறையவுண்டு
தம்மின விடுதலைக் கொடியாலே - பிற
இனங்களை அடித்த இனங்கள் உண்டு
வேறின மனிதரின் நெஞ்சிலேறி
தன்னினம் கொல்லும் எதிரியைச் சுட்டும்
கரங்கள் கண்டு வெளி உலகம்
கண்கள் காதுகள் பொத்திச் சிரித்ததுண்டு

நியாயத்தின் குரலை
பகிடியாக்கும் விளையாட்டில்
எதிரிகள் மாத்திரம்
மகிழ்வதுண்டு

எதற்காக எம்மைக் கலைத்தீரோ
விடுதலை வரும் என்று நினைத்தீரோ

வீரமாகாளி அம்மன் கோவிலடியில்
ஆமியைக் கண்ட ஓர் நாளில்
கோவிலுக்குள் சில மணி நேரம் ஒளிந்திருந்தேன்
என் உயிரை மீண்டும் எடுத்து வந்தேன்
எம் மண்ணின் ஒவ்வோர் அங்குலமும்
எதிரி நீக்கமற நிறைந்திருந்திடினும்
போர்க்கவும் காக்கவும் என்றுமெனக்கு
என் தாயகம் இருக்கென்ற ஒரு நினைப்பு
ஆனிமாதக் காற்றுப் போல்
நெஞ்சில் வீசியது அப்போது

எதற்காக எம்மைக் கலைத்தாயோ - உந்தன்
விடுதலை வரும் என்று நினைத்தாயோ?

கோட்டை முகாம் துப்பும் ஷெல் குண்டு
சோனகர் தெருவில் வீழ்ந்தால் வெடிக்காதோ?
கனகம்மாவின் துயில் கலைக்கும் வெடிச்சத்தம்
ரிஸ்வியா பேகத்திற்குத் தாலாட்டோ
செல்வரான் துடித்திறக்கும் துவக்குக் குண்டு
காதர் மாஸ்டர் எதிர்ப்பட்டால் துளைக்காதோ?
பாலினியின் கனவில் வரும் பொம்பர் விமானத்தை
பாப்பா முனீர் நேரில் கண்டால் மகிழ்வானோ?

எதற்காக எம்மைக் கலைத்தீரோ
விடுதலை வரும் என்று நினைத்தீரோ

மனிதர்கள் இல்லா மண்ணை யாரும்
தேசம் என்று சொல்வாரோ
தேசத்தை விட்டு நேசத்தை விரட்டி
விடுதலைப் போர் என்று சிலிர்ப்பீரோ

எதற்காக எம்மைக் கலைத்தீரோ
விடுதலை வரும் என்று நினைத்தீரோ

மதுபாய்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# ஏமாற்றம் தரும் கவிதைகள்

## சு.வில்வரத்தினம்

சுதந்திர இலக்கிய விழாவில் ,1994 ம் ஆண்டு வெளியான கவிதைத் தொகுப்புகளை மதிப்பீடு செய்து சு.வில்வரத்தினம் அவர்கள் ஆற்றிய உரையின் தொகுப்பு இது.

1994ம் ஆண்டு காலப்பகுதிக்குள் வெளிவந்த ஒன்பது கவிதைத்தொகுப்புகள் எனது பார்வைக்குக் கிடைத்தன. இவற்றில் நான்கு ஈழம்வாழ் கவிஞர்களாலும், மிகுதி புலம்பெயர்ந்து வாழும் கவிஞர்களாலும் ஆக்கப்பெற்றவை. அவை வருமாறு:

**1. சுழற்சிகள் - தாஸீம் அஹ்மது**
**2. பொன்விளை பூமி - எஸ்.எச்.நிஃமத்**
**3. இருபக்கங்கள் - அன்னலட்சுமி ராஜதுரை**
**4. வசந்தம் 91 - நட்சத்திரன் செவ்விந்தியன்**
**5. சிலோன் விஜயேந்திரன் கவிதைகள் - சிலோன் விஜயேந்திரன்**
**6. கானல் நீர்கனவுகள் - அ. கந்தசாமி.**
**7. மண்ணின் நினைவுகள் - சபா. வசந்தன்.**
**8.யுத்த சந்யாசம் - சக்கரவர்த்தி**
**9. அம்பி கவிதைகள் - கவிஞர் அம்பி**

### *அம்பி கவிதைகள்*
***அம்பி***

மேலே கூறிய தொகுதிகளின் ஆக்க கர்த்தாக்களில் கவிஞர் அம்பி பலருக்கும் தெரியவந்த மூத்த பரம்பரையைச் சேர்ந்தவர்; மரபுக் கவிதையாளர். குழந்தைகளுக்கான கவிதைத் தொகுப்புகள் இரண்டையும், வேதாளம் சொன்ன கதை எனும் பா நாடகத்தையும், கிறீனின் அடிச்சுவட்டில்' எனும் விஞ்ஞானத் துறை சார்ந்த நூலையும் ஏற்கெனவே வெளியிட்டுள்ளவர். 'அம்பி' கவிதைகள் அவரது வெளிவந்த கவிதைகள் பலவற்றையும் உள்ளடக்கியது. நூலின் பதிப்புரையின்படி ''அவருடைய நாற்பதாண்டு கவிதை ஊழியத்தினை முழுமையாக பிரதிநிதித்துவப்படுத்துவதாக இந்நூல் அமைந்துள்ளது.'' எனும் குறிப்பு இதை உணர்த்துகிறது.

மேற்குறித்த கூற்றை பின்னணியாகக் கொண்டு ''அம்பி கவிதைகளை'' அலசினால், அவரது நாற்பதாண்டு காலத்துள் ஈழத்துக்கவிதை வளர்ச்சியின் போக்கும், அதன் தாக்கமும், இவரது கவிதைகளில் பிரதிநிதித்துவப்பட்டிருக்கவேண்டும். அல்லது நாற்பதாண்டு கால கவிதைப் போக்கில் இவரது கவிதைகளின் தாக்கம் தெரியவந்திருக்க வேண்டும். ஆனால் மகாகவி, நீலாவணன், முருகையன் ஆகிய மூத்தபரம்பரையினரதும் அவர்களைத் தொடர்ந்து வந்த மு.பொ, நுஃமான், சண்முகம்சிவலிங்கம் என்போரதும் மரபு கவிதையில் எய்தப்பட்ட வளர்ச்சியின் பரிமாணங்களை இவரிடம் காணமுடியவில்லை. மேற்குறித்த கவிஞர்களின் கவிதைகளுடன் ஒப்பிட்டால் உள்ளடக்கம்- உருவம் இரண்டிலும் அம்பியின் கவிதைகள் பின்தங்கியே உள்ளன.

இவரது கவிதைகளின் தொகுப்பு இடையில், அலைகளில், மனதில், அரங்குகளில், வழியில், குறுங்காவியம் எனப்பட்ட பகுப்பு முறைகளில் அமைந்துள்ளன. இடையில் என்ற பகுப்புமுறையில் அடங்கும் இசைக்கவிதைகள் எவற்றிலுமே புதுமையில்லை. பாரதியின் இசைவார்ப்புகளான கவிதைகள் பலவும், கவிதைக்குக்கவிதையாகவும், இசைக்கு இசையாகவும் இன்றைக்கும் புதுமை குன்றாதவை என்பதை நாம் நினைவு கொண்டு பார்ப்போமாயின் ''வருக புதுயுகமே'' என்ற கவிதையில் அம்பியின் தோல்வியையே காணலாம். சிலவரிகளைப் பதம் பார்ப்போமாயின் இது விளங்கும்.

*''புத்தம் புது யுகத்தில் கத்தும் மனித மனம் பூங்காவைப் போல் எழில் பெறவேண்டும்''*
*தித்திக்குஞ் சிந்தனைகள் செயலாக மாறி மணித்தேரேறி இன்பவுலா வரல் வேண்டும்''*
*''தேனூறும் சிந்தனைகள் தேரேறி வந்துலாவி''*

புதுயுகத்தின் எழுச்சியை அல்லது அதற்கான தேவைகளை வீச்சுடைய அறிவின் வீறான சொற்களில் பாய்ச்சாமல் தித்திப்பு, தேன், தேரேறல் இவ்வாறான கற்பனார்த்த அலங்காரத் தேரிழுப்பு முயற்சிகளிலேயே அம்பி மினக்கெடுகிறார். வேறு பல இசைப்பாடல்களிலோ சினிமா இசைப்பாடல்களின் செல்வாக்கும் தொற்றிக்கொண்டுள்ளது. 'நீ தெய்வம்' எனும் தலைப்பில் வரும் கவிதையில் முதல் அடிகளான *''அம்மா நீ தெய்வம் அணையாத தீபம்''* என்பதும் 'உறவு' என்ற கவிதையின் கீழ் வரும் அடிகளான *''அனைத்தாலும் அடித்தாலும் கரம் ஒன்றுதான் அம்மா, இணைத்தாலும் பிரித்தாலும் இழப்பொன்றுதான்''* என்பதும் (இப்படிப் பல உதாரணங்கள் காட்டலாம்) சில சினிமா வரிகளை அப்படியே அடியொற்றினவையாய் உள்ளன.

இருநூற்றி முப்பத்தி ஆறு பக்கங்களைக் கொண்ட இந்நூலில் பெரும்பாலான உப்புச்சப்பற்ற கவியரங்கக் கவிதைகள் நிரப்புகின்றன. ஒரு காலத்தில் 'கவியரங்கில் கந்தவனம்' எனக்கோலோச்சியவர்கள் எல்லாம் இன்று காணாமல் போய்விட்டமையை நாம் துயரத்துடன் நினைவு கூர வேண்டியுள்ளது. கந்தவனத்தின் அரங்கக் கவிதைகளின் கதியே இவருக்கும் நேரும் ஆபத்தைக் கொண்டிருக்கின்றது. இவரது குறுங் காவியமும் எவ்வகையிலும் தேறவில்லை என்பதும் வருத்தம் தருகின்றது.

ஏராளமான பக்கங்களைக் கொண்ட இத்தொகுப்பு நூலிலே என்னைப் பொறுத்தவரையில் மிகச் சொற்ப கவிதைகளே தேறுவன. பிடியரிசி, வா, கற்பகமே என்பன அச்சில. ஏனைய பலவும் சொற்கூட்டங்களுக்குள் வாழ்வனுபவத்தையும் கவிதையையும் தொலைத்து நிற்பவை. கவிஞர் முருகையனைப். போல் விஞ்ஞானக் கல்வி வாய்க்கப்பெற்ற அம்பியின் கவிதைகளில் கூர்ந்த சொற்பிரயோகங்களும் உள்ளனவெனினும் கலைப் பிரக்ஞையோடு அதைக் கையாளும் திறன் அற்று கற்பனைத் தேரில் சவாரிவிட விளைவதால் சறுக்கி விடுகின்றன.

### *இரு பக்கங்கள்*
***அன்னலட்சுமி ராஜதுரை***

அடுத்து அன்னலட்சுமி இராஜதுரையின் 'இருபக்கங்கள்' எனும் தொகுப்பிற்கு வருவோம். இதனைக் கவிதைத்தொகுப்பு என்றே பதிப்பாளர் குறிப்பிட்டிருந்தாலும், இவை கவிதைகள் தானோ என்ற சந்தேகம் எனக்கு வலுவாக எழுந்

### *பொன்விளை பூமி*
***எஸ்.எச்.நி:மத்***

எஸ்.எச்.நிஃமத்தின் 'பொன் விளைபூமி என்னும் கவிதைத் தொகுதியோ முகப்பிலேயே 'தேசிய ஒற்றுமைக்கான கவிதைகள்'' எனும் வட்டத்துள் தன்னை எல்லையறைந்து கொள்கின்றது. வாழ்வனுபவத்தையோ அல்லது பரந்து பட்ட கருத்தியல் தளத்தையோ அடித்தளமாகக் கொள்ளாமல் குறிப்பிட்ட ஒரு தேவைக்குள் மட்டுப்படுத்தியதாய் ஒரு கவிஞன் கவிதைகள் தயாரிக்க வெளிப்பட்டு விடும் போதே கவிதை செத்துப் பிறக்கும் சிசுவாகி விடுகின்றது. தேசிய ஒற்றுமைக் கவிதைகள், தமிழ் உணர்ச்சிக் கவிதைகள் என்ற வரையறைகளைத் தாண்டி வாழ்வனுபவச் செறிவை உள்வாங்கியதது. கவிதை நடைச்சித்திரம் எனபதே பொருத்தம். என்னுரையில் ஆசிரியர் 'வணக்கம் வாசகரே' என விழித்து எழுதும் குறிப்பில் 'இருபக்கங்கள் என்ற சொல்லோவியம்' எனக் குறிப்பிட்டிருப்பதையும் வீரகேசரி ஆசிரியர் ஆ.சிவநேசச்செல்வன் தமது முன்னுரையில் 'இருபக்கங்கள் என்ற இந்த நடைச்சித்திரத் தொடரிலே' என்றும் 'வாழ்க்கை'யின் கோலங்களை சிறுகதை எழுத்தாளரின் பக்குவத்துடன் அணுகி 'நறுக்குத்தெறிக்கும்' வார்த்தைகளினால் வெளிப்படுத்தும் ஆசிரியை கவிதைப் பாங்கான நடையைப் பயன்படுத்தியுள்ளார்' என்றும் குறிப்பிடுவதில் இவை கவிதைகள் அல்ல என்பது தெளிவு படுத்தப்பட்டுள்ளது. ஆனால் இதற்கு மதிப்புரை வழங்கிய கவிஞர் வைரமுத்து 'இவை கவிதைகள் தான்' என்று எப்படி நற்சாட்சிப் பத்திரம் வழங்கினார் என்பதுதான் புரியாத புதிராய் உள்ளது.

கவிதைகளே உயிர்ப்புடையவையாய் இருக்கும். அன்பு, அஹிம்சை, சாந்தி, சமாதானம் எனப்பல்வேறு தலைப்பின் கீழ் நிஃமத் மரபுக்கவிதை உருவத்திலும் 'விடுகதைகள்' புனைந்துள்ளார்.

உதாரணம்:

*மங்களத்தைச் சுமந்து வரும் மரகதப் பேழையிஃது*
*திங்களினைப் போலொளிர்ந்து*
*துன்ப இருள் அகற்றும் இது*
*எங்களது நாட்டினுக்கு இது மிகவும் அவசரமே''*

இது என்ன ? எனக்கேட்டால் 'சமாதானம்' என்பது விடையாக வரும். மரபுக் கவிதைகளிலும் - புதுக்கவிதைகளில் பலர் நொடியெழுதி களைத்துப் போயினர்- நொடி போடலாம் எனக்காட்டியிருக்கிறார். நிஃமத்.

### *சிலோன் விஜயேந்திரன் கவிதை*
***சிலோன் விஜயேந்திரன்***

'ஈழத்தில் இருந்து இந்தியாவிற்கு புலம் பெயர்ந்த படைப்பாளிகளில் கவிஞர் விஜயேந்திரனும் ஒருவர். ஈழத்து கவிஞர்களது அறிமுக நூல்கள் சிலவற்றையும்; கம்பதாசன் போன்ற கவிஞர்களது தொகுப்பையும், மறக்கப்பட்ட சினிமாக் கவிஞர்களது தொகுப்பையும் வெளிக்கொணர்ந்தவர் இவர். இவரது மூன்றாவது கவிதைத்தொகுப்பு இக்கவிதைகள் என அறிகின்றோம். இத்தொகுப்பில் அவரது கவிதைகள். சில கம்பதாசனை பிரதி பண்ணுவதாக உள்ளன. ஏனைய சில சினிமாவுக்கென்றெழுதிய மூன்றாம்தர நாலாம் தரமான 'கவிதைகள்'. இவரது மரபுக்கவிதைகளும் சரி புதுக்கவிதைகளும்சரி, கவிதைகள் அல்லாதவை எவை என்பதற்கு உதாரணமாகி விடுவன. உதாரணமாக, ஒன்றைப் பதம் பார்ப்போம்.

*''இஸ்லாம் வழி செல்லும் இனியவளே என்னுயிரே*
*இஷ்டன் என் நெஞ்சில் இன்பமது ஊற்றாயோ''*

என இவர் எழுதும் போது மனசு மிகவும் கஷ்டப்படுகின்றது; கவிதையும் தான். சிறந்த ஈழத்து கவிஞர்களின் இவர் கொண்டிருக்கும் பரிச்சயத்தை ஈழத்துக் கவிஞர்களது அறிமுக நூல்மூலம் அறிந்து கொண்ட நான் அவற்றின் தாக்கத்தால் இவரிடத்தும் கவித்துவ வீச்சு தென்படுகின்றதா என்ற ஆவலுடன் நூலினுள் நுழைந்தால் எஞ்சியது ஏமாற்றமே.

அடுத்த இதழில் முடியும்...

# தமிழின் கூட்டுக்குப் போன காலை தினம்

*தமிழின் கூட்டுக்குப்போன காலை தினம்*

*இரவின் அறையில் திறக்கப்படவில்லையா?*
*குளத்தில் வீழ்ந்ததோ இருளில் தடுக்கி?*
*இர்வின் 4 மணியிலிருந்து*
*பகலின் 8 மணிக்கு ஓர் எட்டு எட்டி வைத்ததா?*
*துள்ளிக்குதித்துக் கடந்ததா கால்களால்?*
*ஒரு பக்கம் காகங்களும்*
*மறு பக்கம் மைனாக்களும் நகங்களில் கொழுகி தூக்கிப்போய்*
*கரைந்து விட்டு வந்ததா வேறோரு பகுதியில்?*
*காலைப் பொழுதைக் காணவேயில்லை இன்று!*
*அதன் முற்றுப்பெறாத பாடல்களினால் முகம் கழுவவில்லை.*
*சிணுங்கியதென் நெஞ்சு.*

*வந்து போயிருக்கிறது காலைப்பொழுது.*
*நான் போயிருந்த நேரம்*
*தமிழ் மொழியின் கூட்டுக்கு!*
*நான் கூந்தல்வாரி ரெட்டைப் பின்னல் பின்னிவிடும்*
*என் முற்றத்துத் தென்னை*
*பாளையுடைத்து பூக்களில் எழுதியிருந்தது.*
*''போய் விட்டது'' என்று.*

*காலை வரும் நாளை.*
*எனினும்;*
*சுடு மண்ணள்ளிக் குளித்து வருத்தும் என் நெஞ்சு.*
*என்னுள்ளிருந்து வெளியில் சென்று!*
*நான் தயாரிக்க வேண்டும் ஒரு காலைப் பொழுது*
*இன்று. இப்போது.*
*அதுக்கு!*

*இருளும் ஒளியும் ஒளியும் இருளும் அப்பி*
*பின்னிக்கிடந்து பிரிவதே காலைப் பொழுது.*
*செடியில்*
*கொடியில்; மரத்தில்*
*ரெக்கை விரித்துப் பறந்து இத்துயர் கூவ*
*பறவையல்ல நெஞ்சே நான்.*

*முகப்பருவெல்லாம் பூவாய் மலர*
*கக்கத்தில் கனி சுமந்து*
*முள்ளந்தண்டையும் நீட்டி ஆணிவேறிறக்கி*
*எனக்குள் கிளைகள் துளிர்க்க*
*பழுத்த இலையும்; பூவும் கழற்றிவிட ஒரு குலுக்குக்குலுக்கி.*
*உனக்குத் தெரியும் நெஞ்சே*
*நான் மரமுமல்ல.*

*காலைப் பொழுதொன்றை கணக்க முடியாதென் நெஞ்சே*
*என்னுள்ளினுள்ளே வா நீ!*
*சருகுகளை, மிதித்து வந்து நிழலில் ஆறியமர்ந்து*
*எந்தப் பூ முதலில் விழுமென்று காத்திருக்கும்*
*தனிமையான மனிதன்.*
*இரக்கப்பட அதுக்கு!*
*நீயும் அறிவாய் என் பலம் பலவீனமும் தான்.*
*பொழுதொன்றை சிருஷ்டிப்பது எனது வேலையல்ல.*
*தமிழ் மொழியின் கூட்டுனுள்ளிருந்து*
*எந்த எழுத்தெடுத்து கவியெழுத உனக்கு?*

*உறங்குகிறது கொஞ்சம்*
*என் பையில் விழுந்தது சில எழுத்துக்கள். துள்ளிக் குதித்து.*
*செத்த எழுத்துக்களுக்குப் பக்கத்தில் மௌனமாய் சில!*
*கோலூண்றிக் கொஞ்சம்*
*அநாதையாயும் வாசற்படியில் பல.*

*∴ இந்த எழுத்தில் குந்தி அடுக்கினேன்.*
*ஒவ்வொன்றாய் பலதாய்.*
*கட்டுரையாய்*
*கதையாய்*
*கவிதையாய்*
*முக்கோணம்; வட்டம்; சதுரம்*
*ரேகைகளை ஒழுங்கற்றுக் குழப்பி ஓவியமாய்.*
*எல்லாம் அடுக்குப்பட்டன.*
*பருவமடைந்த குமரென அழகாய்!*

*அடுக்க அடுக்க வழுக்கி வழுக்கி விழுந்தது*
*அவள் பெயர் எழுத்துக்களும்;*
*இன்றைய ''காலைப் பொழுதும்''*

சுதந்திர இலக்கிய விழா 1996 ல் இரண்டாவது பரிசு பெற்ற கவிதை.

மொஹம்மது அபூபக்கர் அலாவுதீன்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



"தற்கால இந்திய சிறுகதைகள், (ஆங்கிலம்)" தொகுப்பில் விவரிக்கப்பட்டுள்ள நேர்த்திக்காக முக்கியத்துவம் கொண்ட கதை இது. ஒரு சிறிய திரைப்படம் போல காட்சிப் பதிவுகளால் சித்திரிக்கிறது. வார்த்தையின் பலத்தில் இல்லை இச்சிறுகதை. சிறுகதைக்கு - இலக்கியத்துக்கு ஒரு புதிய பரிமாணம் சேர்ப்பது. இதற்கு முன் நனவோடை உத்தியில் விவரிக்கப்படும்போதும் கூட வார்த்தையின்பலத்தில் தான் அது சாத்தியமாயிற்று. இங்கோ, அக்காட்சி விவரிப்பு கூட சிறிய தொடர்களால் முழுமையில்லா வாசகங்களால், சின்னச் சொற்களால் ஆகி விடுகிறது.

கெடுக்கப்பட்ட பெண் மருத்துவ மனையில் இருந்த நிலையில், அந்தக் கோர அனுபவம் பிரக்ஞையின் பகுதியாக் விட்டதை தன்னிலிருந்து விலகித் தொலையாமல் தன்னை வதைப்பதை, எப்போதும் பூதாகரமாக நின்று அச்சுறுத்துவதைச் சொல்வதாக உள்ளது. அதற்கேற்ப குறியீடுகளால் 'குந்தியிடம் சூரிய தேவன் தன் பரிசை திரும்பக் கோருதல்' என்பது மிக ஆற்றல் வாய்ந்த குறியீடாக நம் மரபினைத் தொட்டு காலங்காலமாக பெண்ணுக்கு இழைக்கப்பட்டு வரும் அநீதியைச் சுட்டிக் காட்டுகிறது.

ஆசிரியர் இராதாகிருஷ்ணனே இதனை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்திருக்கிறார். இதனால் ஆங்கிலம் வழி தமிழாக்கத்தில் அதிகம் இழக்கப்பட்டுவிடும் அபாயம் நேர்ந்திருக்காது என நம்புகின்றேன். மேலும் இக்கதை வார்த்தைகளை மீறி, காட்சிப் படிமத்தில் இயங்குவதால் மொழி ஒரு தடையாக இல்லை என்பதையும் உணரலாம்.

— மொழிபெயர்ப்பாளர் —




கரடியின் நாக்கு சிவந்திருந்தது. பழுக்கக் காய்ந்த இரும்பின் நிறம். ஆனால் பனிக்கட்டியை விட குளிர்ந்திருந்தது.

படுக்கையின்மீது தன் முன்னங்கால்களை உயர்த்தி வெற்றுப்பாதத்தின் மிருதுவான சருமத்தை நக்கத் தொடங்கியது. அவசரப்படவில்லை. விசுவாசத்துடன் மெதுவாக நக்கியது. அப்புறம் உடலை மூடியிருந்த வெள்ளை மஸ்லின் துணியின் நுனியைப் பற்றிக்கொண்டு, பின்னோக்கி நகரத்தொடங்கியது, மெதுவாக. மஸ்லின் துணி, உறையினைப் போன்று வெளிவந்ததும் உடல் நிர்வாணமாகக் கிடந்தது.

சன்னலின் கண்ணாடிச் சட்டங்களுக்கு வெளியே நிலவொளியில் பனிப்படலம் நிலவியது. தன்னைப் போர்த்துக் கொண்டு தனியே நிற்கும் ஆவி, மரத்தினைப்போல் அசையாதிருந்தது.

அப்பிரும்மாண்டமான கரடி எப்படி அறைக்குள் நுழைந்தது என ஆச்சரியப்பட்டேன். இரு கதவுகளும் சாத்தப்பட்டு, பூட்டியிருந்தன. எந்த மரத்திலும் அதனால் ஏற இயலும், ஆனால் செங்குத்தான சுவரில் ஏற இயலாது. அதனால் ஏறியிருக்க இயன்றாலும், சன்னல் திறந்திருக்கவில்லை.

இருண்டிருக்கும் சமுத்திரக் குகைகள் போல, அறையில் இருளின் திரட்சியாகத் தோற்றமளித்தது முதலில். ஒரு வடிவமற்ற நிழல். ஆனால் அதன் விழிகளை மட்டும் ஒரு போதும் அடையாளம் காணாதிருக்க முடியாது.

எழ முடியவில்லை. படுக்கையிலிருந்து உடலை உயர்த்த முடியவில்லை. ஒட்டிக்கொண்டிருந்தது போல இருந்தது. கைகளுக்கு இனி வலுவில்லை.

கரடி உறுமியது. சவத்தைப்போல சலனமின்றி கிடக்க வேண்டியிருந்தது. வஞ்சனையுடன் முன்னேறிக்கொண்டிருந்தது. அடிமேல் அடியாக.

இரவு விளக்கின் ஸ்விட்ச்சை நெருங்குவதற்கான எந்த முயற்சியும், சபிக்கப்பெற்ற கண்ணாடி வளையல்களை, இடிபோல முழங்கச் செய்துவிடும். உடலெங்கும் குளிர்ந்த வியர்வை முத்துக்கள்.

இப்போது தரையில் கிடக்கும் மஸ்லினில் கரடி தன் மூக்கை வைத்துப் பார்த்தது. முகர்ந்து பார்த்து விட்டு, மெஸ்லினை விட்டு, அளவெடுத்த அடிகளுடன் மீண்டும் முன்னேறியது. ஒவ்வொரு அடிக்கும் நின்று நிதானித்தது அடுத்த அடி எடுக்க யுகங்கள் ஆனதுபோல் தோன்றியது.

000

குன்றுப்பக்கமாக உள்ள அடர்ந்த காட்டில் முன்னரும் அதனைப்பார்த்திருக்கிறேன். காட்டுக்கொடிகளிலுள்ள மிருதுவான சிவந்த தளிர்கள் பசுமையாகவும் பெரிதாகவும் மாறிக் கொண்டிருந்தன பார்த்துக்கொண்டிருக்கும் போதே. மாதங்களும், வருடங்களும் விநாடிகளாக, நிமிடங்களாக செறிவு கொண்டன. சிலவான இதயத்துடிப்புக்களுக்குள்ளாக மரங்கள்திரட்சியம் உயரமும் கொண்டன. நிகழ்வதைப் பார்க்க முடிந்தது. உதிர்ந்த இலைகள் அடித்துச் செல்லப்பட்டன.

சிறிய ஓடையொன்றில் கால்களை சலப்பிக்கொண்டு ஒரு பாறையில் அமர்ந்தேன். நித்ய ஓடை. நித்ய ஓட்டம் மற்றும் நித்ய சலசலப்பு. அதன் நித்ய ஓட்டத்தினால் நித்ய நுரைப் பெருக்கம்.

வட்டப்பாறையொன்றில் தனியாக. இருள் மாலையொன்றில் பூமியைச் சுற்றி வரும் கண்ணாடித் துண்டாகச் சூரியன் மிகுந்த வேகத்தில் சுற்றி வந்தது. பாதி இதயத் துடிப்புக்குள்ளாக சூரியன் மீண்டும் உதித்திடவும் மற்றும் மறைந்திடவுமாக இரவும் பகலும் மாறி மாறி வந்தன விரைவாக.

தந்தை வினவினான்: "அரண்மனைக்குச் செல்வோமா?"

பதிலிறுக்கவில்லை. சூரியன் அஸ்தமிப்பதற்கும் கேட்பதற்கும் சரியாக இருந்தது.

சூரியன்இல்லாத போதும்தாராளமான ஒளி இருக்கவே செய்தது. சூரியனின்இருப்பு ஒன்றினால் மட்டுமே பகல் இரவிடமிருந்து வேறுபட்டிருந்தது. நித்ய ஓடையைப் போல ஒளி எப்போது மிருந்தது.

தனது இளம் பச்சை சட்டையின் பித்தான் துவாரத்தில் ஒரு சிவப்பு ரோஜாவை வைத்திருந்தார். பார்த்துக்கொண்டிருக்கையிலேயே ரோஜா இதழ்கள் வாடி ஒவ்வொன்றாக உதிர்ந்து கொண்டிருந்தன. நெருங்கிக் கன்னத்தில் வாஞ்சையுடன் முத்தமிட்டார். பின் பெருமூச்சுடன் காட்டுக்குள் சென்று விட்டார், பார்வையிலிருந்து மறைந்து.

கைகளாகிய கிண்ணத்தில் நீரை ஏந்தி துளித்துளியாக விழச் செய்து விளையாடிக் கொண்டிருந்தேன். வனத்துக்குப் பொருந்தாத சப்தம் பின்னால் கேட்டது.

சுமார் அய்ம்பது கெஜ தொலைவில், கம்பளிப் போர்வையால் முற்றிலும் போர்த்துக்கொண்டிருப்பதுபோல் அது தோன்றியது. அழைத்தது. பெரிய விறகுக் குவியலைக் காண்பித்தபடி. உலர்ந்த சுள்ளிகளும் மற்றும் போரில் கொல்லப்பட்ட வீரர்களின் உயர்ந்த கைகளும் கால்களும் கொண்ட குவியல்.

சென்று உதவ விரும்பவில்லை. ஆனால், விடாப்பிடியாக மீண்டும் மீண்டும் அழைத்துக்கொண்டிருந்தது. ஓடையின் போக்கில் தெரியும் நிர்வாண உடலின், உடைவதும் கூடுவதுமான படிவத்தைக் கண்டுகளித்துகொண்டிருந்ததற்கு முற்றுப்புள்ளிவைத்து விட்டு பாறையிலிருந்து எழுந்தேன். அவன் காத்துக்கொண்டிருந்தான்.

அது மனிதனல்ல. பின்கால்களில் நின்று கொண்டிருந்த கரடிதான். தொடு தூரத்தில் உறைந்து நின்றேன். ஒன்றும் கூற முடியவில்லை. உதவிக்கு அழைக்க முடியவில்லை. என்ன உதவி?

நெருங்கி, நெருங்கி இன்னும் நெருங்கி வந்து கொண்டிருந்தது கரடி. தன் கைகளை உயர்த்தி தோள்களில் வைத்தது. முகத்தை வருடியது. அதன் கூரிய நகங்கள் அநேகமாக தோளின் சதையில் கீறிவிட்டது.

வேதனையில் முணுமுணுத்தேன்.: "அப்பா, அய்யோ அப்பா".

"பீதியடையாதே" என்றார் தந்தை. இருந்தும் நம்ப இயலவில்லை. வலிய, உரோமம் அடர்ந்த அவரது மார்புதான் அழுதபடி, நெருங்கித் தழுவிக் கொண்டேன்.

மிகவும் நேரம் கழித்து, விடுவித்துக் கொண்டு விறகுக் குவியலைச் சுட்டிக்காட்டியபடி "இதனை எடுத்துக்கொள். என்னிடம் உள்ளவையெல்லாம் இதுதான்" என்றார்.

குறுகிய ஒற்றையடித்தடத்தில் பின்னால் வருவது தந்தையா/கரடியா என்று உறுதிப்படுத்த விரும்பினேன். துணியவில்லை. பின்னால் கேட்டுக்கொண்டிருந்த உறுமல்கள் நிச்சயமாக கரடியிடமிருந்து இல்லை. காட்டில், இயற்கையாகவே, மற்ற மிருகங்கள் ஏராளம்.

000

படுக்கையைச் சுற்றிவந்தபடி மோந்து பார்த்தது. அவ்வப்போது தன் மூக்கை உயர்த்தி உடலையும் மோந்து பார்த்தது.

முலைக்காம்பை நக்கிடதன் கழுத்தை நீட்டி பின், விருப்புடன் நக்கியது.

உடலின், வலது தோளிற்கு வந்தது. தன் கரங்களை படுக்கையில் பதித்தது. துப்ப இயலாது. சர்வ வல்லமை கொண்ட அரசனைப்போல நடந்து கொண்டது. திடீரெனத் தீவிரத்துடன் முலைக்காம்பைச் சப்பிக் குடிக்கத் தொடங்கியது. ஏராளமானபால். நிலநடுக்கத்திற்குப்பின் உடனடியாக குன்றுக்குள்ளாக புதைந்துள்ள ஊற்றிலிருந்து பொங்கிவரும் தூய நீரின் பெருக்காக. இடது முலைக்காம்பில் பீச்சிக் குடித்து விட்டு நீள்வளைவாக விழுந்து படுக்கையில் வெதுவெதுப்பான. நனைந்த, தடங்களை உண்டாக்கியது.

000

ஆற்றங்கரையோரமாக மருத்துவமனை சன்னலுக்கு கீழே, அதே கரடி நின்றது. அக்கொடிய பொழுதில் அதன் உறுமல் சப்தம் மட்டுமே. கரங்களை நீட்டியபடி புதையலை வேண்டியது, விறைத்த முட்டாள் தனமான பார்வை அதன் விழிகளில் . அது சொன்னது. "என்னைத் தெரியாதா உனக்கு? நான் தான் சூரியன், சூரியதேவன். என் பரிசை திரும்ப வேண்டுகிறேன், குந்திதேவி"

அவை இயல்பாகவே அனுதாப வார்த்தைகளல்ல. மறுப்பதில் பயனேதுமில்லை. பெட்டியை எடுத்து மணலில் புதைத்தது கரடி. தன் கரங்களாலேயே.

பெட்டிக்குள்ளிலிருந்து புதிதாகப் பிறந்ததின் எதிர்ப்புக்குரல் வெளிவந்தது. யாரையும் தாய் என அழைக்க இயலாத அளவு மிகவும் இளமையாக இருந்தது. அது செய்ய முடிந்ததெல்லாம் வேறுவழியின்றி அழுததுதான்; வறண்ட மணல்திட்டின் கீழிலிருந்து உள்ளடக்கிய அழுகையைத் தெளிவாகக் கேட்க முடிந்தது.

"இப்போது கவலைப்பட ஒன்றுமில்லை" என்றது கரடி.

சட்டென சன்னலைச் சாத்தினேன். இருகாதிலும் விரலால் அடைத்தபடி, தலையணையில் முகத்தைப் புதைத்தேன். தலையணைக்குள்ளாகவும் ஒரு பெட்டி இருந்ததா, உண்மையான பெட்டியிலிருந்து அவ்வழுகை வந்து கொண்டிருந்ததா?

000

அதிருஷ்டவசமாக சன்னலுக்கு மரச்சட்டங்கள் இருந்தன. கண்ணாடியில்லை, கடவுளுக்கு நன்றி.

கரடி கடைசியாகத் தோற்றமளித்த இடம் ஏதோவொரு கிரகத்தின் ஓர் ஆழ்ந்த, தழும்பு போன்ற எரிமலை வாயாகும். எரிமலைவாயின் இருபுறமிருந்தும் கிளம்பிய லட்சோபலட்சம்துகள்கள் சூரியனின்சாய்ந்த கிரணங்களைப் பற்றி, வைரத்துகள்களாக சிதறடித்து. ஜீவனுடன்துள்ளின.

ஸ்டெதாஸ்கோப்பும் கையுமாக கரடி ஏற்கெனவே இறங்கியிருந்தது. இறக்குமதி செய்யப்பட்ட விசாலமான விண்வெளி வாகனமொன்று வெளியே நிறுத்தப்பட்டிருந்தது.

வானம் இருண்டிருந்தது.

ஸ்டெதாஸ்கோப் உடலில் வளைந்து சென்று பின் வாங்கி விஷ ஸர்ப்பமாகியது. "சூரிய தேவனாகிய சூரியன் வர வேண்டும் என்று நீ எதிர்பார்த்தால் யாருடைய தவறு அது?"

000

கரடி இப்போது இடப்புற முலைக்காம்பை அழுத்தி மூடியது தன் உள்ளங்கையால், வலப்புறத்தில் உறிஞ்சித் தீர்த்ததும், இடப்புறத்திற்கு மாறியது. அதன் வாயோரங்களில் உள்ள கருமுடிகள் பாலினால் வெண்ணிறமாயின. அதன் விழிகள் பாதிதான் திறந்திருந்தன. அமைதியாகவும் தூங்குவது போலவும் தோன்றியது. தனக்குச் சொல்லிக் கொள்ள முடிந்ததெல்லாம் "ஒ, என் தெய்வமே" என்பதுதான்.

ஒழுகும் முலைக்காம்பை நீங்கிய கரடி "என்னை அழைத்தாயா?" என்றது.

'ஆம், அழைத்தேன்"

நீண்ட கூரிய பற்களைக் காட்டியாறு வினவியது.

"நீ விரும்புவது என்ன?"

என்ன கேள்வி!

படுக்கையின் கால் பகுதிக்கு சென்று எழும்பியது. உடலுக்கு மேலாக விறைப்பாக, கண்களை நோக்கியபடி நின்றது. கைகளில் தன்னைத் தாங்கிக்கொண்டு மெதுவாகத் தாழ்ந்து, உடலெங்கும் தன் எடையை விடுவித்தவாறு அழுத்தியது. கரடுமுரடான முடியுடன் அருவருப்பான ஸ்பரிசம் ஊழிக்கால வியர்வையும் தூசும் அதன் மீது.

தோள்களுக்கு கீழாக வலிய கரங்களை நுழைத்து, சற்றே உயர்த்தியது.

அஞ்சத்தக்க காரியம் நடக்கப் போகிறது. இல்லை, முடியாது. தள்ளி விலக்க வேண்டும். ஆனால், கரடி விரும்பினால், எலும்புகளை இலேசாக நொறுக்கி விடக்கூடும். விட்டுப் போகும் மனநிலையில் அது இல்லை. நசுக்கிடும் பாரம்.

மீண்டும், "ஒ, என் தெய்வமே"

தான் கேட்டது போல பதிலுக்குக் கரடி உறுமியது.

தனது பெரும்வாயை அது திறந்தது - சிறுசிறு வெண்மை நிற ஒளிக்கற்றைகளைக் கொண்ட அக்கூரிய பற்கள் - தன் தாடைகளை கழுத்தில் முற்றிலுமாக பதிப்பதற்காக தலையைச் சிறிது நகர்த்தியது. தாடைகளை மெதுவாக இறுக்கியது. ஈவிரக்கமின்றி சதைக்குள் பற்களைப் பதித்து மேலும் துளைத்தது.

கைகள் கரடியைச் சுற்றி நெருங்கியிருக்க, கொடூர வேதனையில் வேண்டியது; "கொன்றுவிடு சீக்கிரமாக"

நன்றி:
"புன்னகை புரியும் இளவரசி"

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# தாய்மை

— ஜனனி



'தாய்" எனும் நிலையானது சமூகத்தில் மிகவும் உன்னத நிலையில் வைத்துப் பூஜிக்கப்படுகிறது. தெய்வமாக, அன்பின் இலக்கணமாக, தியாகத்தின் சின்னமாக, பொறுமைக்கு உதாரணமாக, பிறருக்காக வாழ்வதில் இன்பம் காணும் தன்னலமற்ற வாழ்வுக்கு எடுத்துக்காட்டாக தாய் உருவகிக்கப்படுகிறாள். ஆனால் தாயைப் பற்றிய சமூக கருத்தாக்கத்திற்கும் சமூகத்தில் தாயின் - பெண்ணின் யதார்த்த வாழ்விற்குமிடையில் பாரிய முரண்பாடே காணப்படுகிறது. பெண்ணோ ஓயாத உழைப்பு, கணவனுக்கும் குழந்தைகளுக்கும் ஆண் உறவினர்களுக்கும் சேவை செய்தல், சமூகத்தில் பல விதமான இழிவுகளுக்கும் உள்ளாதல், ஆணின் ஒடுக்குமுறைக்கும் பாலியல் துன்புறுத்தல்களுக்கும், வன்முறைகளுக்கும் உள்ளாதல் போன்ற மிக மோசமான துன்பங்களை அனுபவிக்கிறாள். தாயைப் புகழும் சமூகம் ஏன் பெண்ணை இத்தகைய கொடுமையான சமூக நிலைக்குத் தள்ள வேண்டும்? இவ்வளவு கொடுமைகளையும் அனுபவித்துக் கொண்டு பெண்கள் தொடர்ந்தும் ஏன் தாயாக வேண்டும்? அவ்வளவுக்கு தாய்மை மகிழ்ச்சிகரமானதா? தாயாவதால் பெண்களுக்குக் கிடைக்கும் நன்மைகள் தான் என்ன?

## தாய்மைச் சித்தாந்தம்

குழந்தைகளுக்கான உடலியல் ஆற்றலைக் கொண்டிருப்பதனாலேயே பெண்களினால் தாயாக முடிகிறது. இது பசி, தாகம், காமம், உறக்கம் போன்ற உணர்வுகளைப் போல் இயற்கையான-பூர்த்தி செய்து கொள்ளவேண்டிய உணர்வுத் தூண்டலல்ல. பசிக்கும் போது உண்ணவும், உறக்கம் வரும்போது உறங்கவுமான உணர்வுச் செயற்பாடுகளின் சட்டகத்துக்குள் வைத்து, கருத்தரிக்கும் உணர்வு வரும் போது பெண்கள் கருத்தரிக்கிறார்கள் என்று பார்ப்பது அசட்டுத்தனமானது. ஆனால் சமூகமோ, தாயாகும் உணர்வுத்தூண்டல் பெண்களுக்கு இயற்கையாகவே காணப்படுகிறது, பெண்களால் கட்டுப்படுத்த முடியாத உணர்வுத் தூண்டலாக தாய்மை இருப்பதாலேயே பெண்கள் குழந்தை பெறவும் பராமரிக்கவும் செய்கின்றனர் எனக் கூறுகிறது. பெண்களின் குழந்தை பெறும் உடலியல் ஆற்றலை பெண்களின் இயற்கையான உணர்வுகளுடன் தொடர்புபடுத்தியதன் மூலம் கருத்தரிப்பை பெண் தன்மையின் தவிர்க்க முடியாத வெளிப்பாடாகக் காட்டுகிறது. இது பெண் என்றால் தாய், தாய்மையைத் தவிர்த்துப் பெண்களைப் பார்க்க முடியாது எனுமளவிற்கு சமூகத்தில் தாய்மை பற்றிய கருத்தை ஆழப்படுத்தியுள்ளது.

சமூகம் ஏன் பெண்களின் தாய்மைக்கு இவ்வளவு அழுத்தம் கொடுக்க வேண்டும்? சமூகம் என்பது ஆணாதிக்க சமூகமே. தாய்மைக் கருத்தாக்கத்தை ஆணாதிக்கச் சித்தாந்தத்தை-பெண்ணின் மீது அழுத்தி பெண்ணை தாயாக்குவதன் மூலம் ஆணாதிக்கம் பயனடைந்து வருகிறது, பலமடைந்து வருகிறது. தாய்மை என்பது எதிர்ப்பால் திருமணம், ஆணாதிக்கக் குடும்பம், பெண்ணின் பாலியல் விவகாரங்களை நசுக்குதல், ஆணின் வாரிசு உரிமை ஆகியவற்றோடு பெண்ணின் சமூக நடவடிக்கைகளை நசுக்கி குழந்தைப் பேறு எனும் எல்லைக்குள் பெண்களைக் கட்டிப்போடும் நடவடிக்கையாகும். பெண்ணடிமைத்தனத்தைத் தொடந்தும் நிலைநாட்ட ஆணாதிக்க சித்தாந்தத்தினால் மிக சாதுரியமாகவும் கேள்விக்கிடமற்ற வகையில் நம்பும் விதமாகவும் பெண்ணின் கருத்தரிக்கும் செயற்பாட்டைச் சுற்றிப் பின்னப்பட்டதாய் தாய்மைச் சித்தாந்தமுள்ளது.

வெறும் கற்பனை வடிவமாக இல்லாமல் வாழ்வியல் முறைகளை ஒழுங்கு செய்வதாயும் அவற்றை மீண்டும் மீண்டும் நெறிப்படுத்தி வருவதாயும் தாய்மைச் சித்தாந்தம் உள்ளது. தாய்மை பற்றிய சமூகச் சித்தாந்தத்தின் அழுத்தம் தாய்மையை சமூகத்தில் நிறுவனமயப்படுத்தியுள்ளதால் தாய்மையானது தனக்கான இயங்கு விதிகளுக்குள் பெண்களைக் கட்டிப் போட்டுள்ளது. பெண்கள் தொடர்ந்தும் தலைமுறை தலைமுறையாக தாயாவதற்கும் தாய்மைக்கான கடமைகளை நிறைவேற்றுவதற்குமான மறுஉற்பத்திச் சித்தாந்தமாக தாய்மைச் சித்தாந்தம் நிலவுகிறது.இந்தச் சித்தாந்தத்தின் பாத்திரம் பெண்கள் தம்மைத் தாமே தாயாக நிர்ப்பந்தித்துக் கொள்ளும் "சுய கட்டாயப்படுத்தல்" உணர்வைப் பெண்களுக்கு ஏற்படுத்தியிருக்கிறது. சுய கட்டாயப்படுத்தல் உணர்வையே தாயாவதற்கான தமது இயற்கையான- கட்டுப்படுத்த முடியாத பெண்தன்மையின் இயல்பூக்கமாக பெண்கள் உணர்கின்றனர். தாய்மை பற்றிய சித்தாந்தம் ஒவ்வாரு பெண்ணினதும் சிந்தனையை ஆக்கிரமித்துள்ளது. இந்தச் சிந்தனைகளால் பயிற்றுவிக்கப்பட்டு வளர்த்தெடுக்கப்பட்ட பெண்கள் தமது சிந்தனையை ஆக்கிரமித்திருக்கும் சமூகக் கட்டளைகளிலிருந்து எந்நிலையிலும் வழுகிப் போகாமல் அவற்றை அப்படியே கடைபிடித்து நல்ல தாயாக-நல்ல பெண்ணாக வாழ தம்மைத் தாமே சுய கண்காணிப்புக்குள்ளாக்கி வழிநடத்திக் கொள்கிறார்கள்.

## தாய்மையின் சமூகத் தன்மை

தாயாவது (குழந்தையொன்றைப் பிரசவிப்பது) பெண்ணின் உயிரியல் செயற்பாடாகும். தனது கருத்தரிக்கும் உயிரியல் ஆற்றல் மீது பெண் எவ்விதம் ஆளுமை செலுத்துகிறாள்? குழந்தையொன்றைப் பெறுவது தொடர்பாக பெண்ணின் தெரிவு என்ன? தான் விரும்பிய போது கருத்தரிக்கவும்-இல்லாது விடவும், தனக்குக் குழந்தையே வேண்டாம் எனும் நிலைப்பாட்டை எடுக்கவுமான சுதந்திரமான தெரிவுகள் பெண்முன் உள்ளதா? எந்தவிதமான வெளியார், சமூக, உளவியல் நிர்ப்பந்தமுமின்றி தான் தாயாவதை அல்லது தாயாகாமலிருப்பதைத் தேர்ந்தெடுக்கும் உரிமையைப் பெண் பெற்றிருக்கிறாளா? பெண்ணின் சுதந்திரமான தெரிவுகளுடன் கூடிய உயிரியல் செயற்பாடாக இல்லாமல் சமூக நிர்ப்பந்தத்தின் விளைவாக நடைபெறும் நடவடிக்கையாகவே தாய்மையுள்ளது.

பெண்களின் தாயாகும் உயிரியல் செயற்பாட்டின் மீது சமூகமே முற்றுமுழுதான கட்டுப்பாட்டைக் கொண்டுள்ளது. கருத்தரிப்பு செயற்பாட்டில் பெண்ணின் தெரிவு, சுயவிருப்பம் முற்றுமுழுதாக மறுக்கப்பட்டுள்ளது. அது மாத்திரமல்ல அது பற்றிய கேள்விகளும் பெண்ணால் எழுப்பப்படக்கூடாது. தான் பெண்ணாய்ப் பிறந்ததன் மூலம் சமூகத்திற்கு ஆற்றக்கூடிய உயர்ந்த பட்சக் கடமை குழந்தைகளைப் பிரசவிப்பதும் வளர்ப்பதுமே. இதைத் தவறாது நிறைவேற்றும், அதில் எதுவித முரண்பாடும் காட்டாத பெண்ணே சமூகத்தால் சிறப்புச் சான்றிதழ் வழங்கப்படும் நல்ல பெண்.

மாதவிடாய் வெளியேற்றம் ஆரம்பித்த பெண்களுக்கு ஒவ்வொரு 28 நாட்களுக்குப் பின்னும் சூல் உடைந்து மாதவிடாய் வெளியேறுவது கூட சமூக ஆட்சேபனைக்குள்ளாகிறது. பெண்ணிடம் சமூகம் உயர்ந்த பட்ச கருவளத்தை எதிர்பார்ப்பது மாத்திரமல்ல அதை முற்றுமுழுதாகப் பயன்படுத்திக்கொள்ளவும் விரும்புகிறது. முன்னர் மாதவிடாய் வெளியேற்றம் ஏற்பட்ட ஓரிரு மாதங்களிலேயே சிறுமிகள் திருமணம் செய்து கொடுக்கப்பட்டு தாயாக்கப்பட்டனர். இன்று அத்தகைய நிலைமை இல்லாவிடினும் மாதவிடாயாக வெளியேறும் ஒவ்வொரு சூலும் ஒரு குழந்தையைக் கொண்டிருப்பதாக நம்பப்படுகிறது. இந்த மூட நம்பிக்கையின் விளைவு பெண்ணை இளவயதிலேயே எதிர்ப்பால் திருமணத்தில் ஈடுபட வலியுறுத்துகிறது. "எதிர்ப்பால் திருமணம் தாய்மைக்கு பெண்ணை நிர்ப்பந்தமாக கொண்டு செல்கிறது" (Paula Nicolson)

குறிப்பிட்ட வயதில் எதிர்ப்பால் திருமணத்தில் ஈடுபட்டு தாயாகாத பெண்ணை சமூகம் மிகவும் அவதூறுபடுத்தும். அவளது 'பெண் தன்மை"யைக் கேள்விக்குள்ளாக்கி அதில் குறைபாடிருப்பதாகக் -குற்றம் சாட்டும். கருவளம் என்பது பெண்ணின் உடல் சம்பந்தப்பட்ட விடயமாயினும் கருத்தரிப்பது சமூக நடவடிக்கையாகவே அடையாளப்படுத்தப்பட்டிருப்பதால் தாயாகாத பெண்கள் அனைவரையுமே குறைபாடுடையவர்களாக சமூகம் முத்திரை குத்திவிடுகிறது. இது மிக இழிவான நிலைக்குப் பெண்களைத் தள்ளிவிடுவதால் இளம் பெண்கள் தமது கருவளம்-கருத்தரிப்பு பற்றி அச்சமுடையவர்களாகவும் திருமணத்தின் பின் கருத்தரிப்பை எதிர்பார்த்து நிம்மதியற்றவர்களாகவும் இருக்கிறார்கள். பெண் பிள்ளைகள் சிறு வயது முதலிருந்தே தாய்மைக்காகத் தயார்படுத்தப்படுகின்றனர். தவழத் தொடங்கும் போதே அவர்கள் கையில் பொம்மைக் குழந்தையொன்று கொடுக்கப்படும். வளர, வளர பொம்மைக் குழந்தைகளுடன் அவர்களது ஆர்வம் அதிகரிக்கும் வகையில் வழிநடத்தப்படுகிறாள். பொம்மையைக் குளிப்பாட்டி, உணவூட்டி, அதற்குச் சட்டை தைத்து.... இப்படியாக வளரும் குழந்தையே பெண் தன்மையுடைய குழந்தையாக பாராட்டைப் பெறுகிறது. தம்பி தங்கைகளை பராமரிக்கும் பணியும் சிறுமிகளைச் சார்கிறது. இதன் மூலம் சிறுவயதிலேயே தாய்மைக் கடமைகளுக்குப் பரிச்சயப்படுத்தப்படுகின்றனர். தாய்மை பெண்மைத்துவத்தைப் பூரணப்படுத்துகிறது எனும் நம்பிக்கை ஊட்டப்பட்டிருப்பதால் குழந்தைகள் பால் ஆர்வம் கொள்ள இளம் பெண்கள் தூண்டப்படுகின்றனர். குழந்தைகள் மீது ஆர்வமற்ற, சகோதரர்களின், உறவினர்களின், நண்பர்களின், பிள்ளைகளை ஆர்வமுடன் அணுகாத இளம் பெண்கள், தமது கல்வி, தொழில், பொழுதுபோக்கு, விளையாட்டு போன்றவற்றில் சிந்தனையைக் குவித்திருக்கும் இளம் பெண்கள் என்போர் பெண் தன்மையுடையவர்களாய் ஏற்றுகொள்ளப்படுவதில்லை. இவர்கள் ஆண் சுபாவமுடைய அடங்காப்பிடாரிகளாக ஏளனமாய்ப் பார்க்கப்படுகின்றனர்.

பெண் பிள்ளைகளிடம் தாய்மை உணர்வை வளர்த்து அவர்களை எதிர்காலத்தில் நல்ல தாய்மாராக்குவது தாய்மாரின் கடமை. இளம் பெண்ணொருத்தி தாய்மையில் ஆர்வமற்று இருப்பாளானால் அது அவளது தாயை கலக்கத்துக்குள்ளாக்கும். இது தாயின் குழந்தை வளர்ப்பை-பெண் பிள்ளைகளை வளர்த்திருக்கும் விதத்தைக் கேள்விக்குள்ளாக்குகிறது. அத்தாயின் தாய்மைத்துவம் சந்திக்குக் கொண்டுவரப்படுகிறது. குழந்தை பெறுவது, வளர்ப்பது மாத்திரமல்ல பெண் குழந்தைகளை தாய்மைக்காகத் தயார்ப்படுத்துவதும் நல்ல தாய்மைத்துவத்தின் பண்பாயிருப்பதால் தாய்மார் தமது பெண் பிள்ளைகளின் தாய்மை உணர்வில்-பெண் தன்மையில் கூடிய அக்கறை செலுத்துகின்றனர்.

தாய்மையானது தன்னைச் சுற்றிப் பிணைந்துள்ள சமூக மரபுகள், ஐதீகங்கள், பண்பாடு, போன்றவற்றினால் செழுமைப்படுத்தப்பட்டு பெண்மைக் கலாசாரமாக உருப்பெற்றுள்ளது. கலாசாரத்தையும் சித்தாந்தத்தையும் கடந்து தாய்மையின் பாத்திரம் இயற்கையானதாயில்லை என்கிறார் போலா நிக்கல்சன் (Paula Nicolson) ஒவ்வொரு பிற்போக்கு சமூகமும் தனது கலாசாரப் பெருமைகளைப் பற்றி முழங்கும் போது தமது சமூகத்தில் நிலவும் தாய்மையின் ஆழத்தையும் பெண்களின் கற்பொழுக்கத்தையும் பறைசாற்றத் தவறுவதில்லை. சமய இலக்கியங்கள், வரலாற்றுக் காவியங்கள், சமூக இலக்கியங்கள் தாய்மைக்கு முக்கியத்துவம் கொடுத்தே வந்துள்ளன.

"தந்தை வளர்க்கும் குழந்தைக்கும் தாய் வளர்க்கும் குழந்தைக்கும் வித்தியாசமுண்டு" என்பது நமது சமூக ஐதீகம். தாயாலேயே பண்பாடும் நற்குணமுமுள்ள பிள்ளைகளை உருவாக்க முடியும் எனும் நம்பிக்கையின் விளைவே இது. ஆண், குழந்தைப் பராமரிப்பில் ஈடுபடும் போது தன்னால் முடியாத, தனக்கு சம்பந்தமில்லாத காரியத்தில் ஈடுபட்டிருப்பவனாக அவன் அனுதாபத்துடன் பார்க்கப்படுகிறான். மனைவி இறந்ததும் கணவன் மறுமணம் செய்ய வேண்டப்படுவது அவனையும் அவனது குழந்தைகளையும் பராமரிக்க ஆள் தேவை என்பதாலேயே. தாய்மைப் பராமரிப்பை முன்னவளின் பிள்ளைகளுக்கு வழங்குவதால் மாற்றாந்தாயும் தாயாக ஏற்றுக்கொள்ளப்படுகிறாள். பெற்ற பிள்ளைகளுக்கு மாத்திரமல்ல பொதுவில் பிள்ளைகளுக்கு அன்பையும் பராமரிப்பையும் வழங்க வேண்டியது பெண்ணின் கடமை. அதற்கான உள்ளாற்றல் பெண்ணுக்கே உண்டு எனும் ஐதீகத்தின் விளைவு, தனக்குச் சம்பந்தமில்லாதபிள்ளைகளுக்கு அன்பையும் பராமரிப்பையும் வழங்க மாற்றாந்தாய் நிர்ப்பந்திக்கப்படுகிறாள்.

"பராமரிப்பு", "தாயன்பு" என்பவை குழந்தைப்பருவத்தில் மாத்திரமல்ல வளர்ந்து பெரியவர்களாகும் வரையும் பிள்ளைகளுக்கு வழங்க வேண்டுமென தாய் எதிர்ப்பார்க்கப்படுகிறாள். மனிதர்களுக்கு தாயின் அன்பு, பராமரிப்பு எப்போதும் தேவைப்படுகிறது. பிள்ளைகளுக்கு மாத்திரமல்ல வளர்ந்து பெரியவர்களுக்கும் தாயன்பிற்கான ஏக்கம் உள்ளதாகக் கருதப்படுகிறது. பெற்ற தாயின் பாசம் கிடைக்காதவர்கள் யாரோ ஒரு பெண்ணிடம் அதை எதிர்பார்க்கவும் பூர்த்தி செய்து கொள்ளவும் விளைகின்றனர். தாய் ஒருத்தியாலேயே தன்னலமற்ற அன்பையும் பராமரிப்பையும் வழங்க முடியும். அதனால் பெற்றதாய் இல்லாவிடில் மற்றத் தாயிடம் அல்லது யாரும் ஒரு பெண்ணிடம் தாய்மை எதிர்பார்க்கப்படுகிறது. பராமரிப்பு, அன்பு, உளவியல் ரீதியான புகலிடமும் பாதுகாப்புணர்வும் மனிதர்களுக்குத் தேவையானதே. அதைத் தாய் தான் வழங்க முடியும், பெண்ணால் மாத்திரமே இந்த உணர்வுத் தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியும் என்பதே சமூகத்தின் ஐதீகம்.

சேவைகளை, பராமரிப்பை குடும்பத்துக்கு பிரதிபலனற்று வழங்க வேண்டிய பெண்மீதான கட்டாயத்தின் உச்சம் தாயன்பின் வெளிப்பாடாக உருவகிக்கப்படுகிறது. சிறுமிகள் கூட இதற்கு விதிவிலக்கல்ல. பிள்ளைகளால் கைவிடப்பட்டு அன்பும் பராமரிப்பும் கிடைக்காத நிலையில் அனாதரவாயிருக்கும் முதியவருக்கு தம்மை அன்பு செய்யும் பராமரிப்பு உதவிகளை வழங்கும் பேத்தி தாயாகத் தோன்றுகிறாள். இப்படியாக வயது வேறுபாடுகளைக் கடந்து தாய்மையுணர்வு பெண்களிடம் பொதிந்துள்ளதாக நம்பப்படுகிறது.

## தாய்மைக் கடமைகள்

தாய்மை பெண்ணுக்கு இயற்கையானது, தாய்மைக் கடமைகள் யாவையும் நிறைவேற்றும் ஆற்றல்-அறிவு பெண்ணிடம் இயற்கையாகவே பொதிந்துள்ளது என்பது சமூக ஐதீகம். எனினும் தாயாகும் ஒவ்வொரு முறையும் பெண்கள் புதுவித அதிர்ச்சியை அனுபவிக்கின்றனர். ஒவ்வொரு பிரசவத்தின் போதும், குழந்தை பராமரிப்பின் போதும் புதிது புதிதான அனுபவங்களைத் தெரிந்து கொள்கின்றனர். தமது குழந்தையை பராமரிக்கத் தொடங்கும் ஒவ்வொரு முறையும் தமது பராமரிப்பு சரியானதா, இதைவிட அதிக பராமரிப்பு குழந்தைகளுக்குத் தேவைப்படுகிறதா எனும் சந்தேகமும் குறைபாட்டுணர்வும் பெண்களுக்குக் கூடவே ஏற்படுகிறது. தம்மிலும் கூடிய அனுபவமுடைய பெண்களதும் வைத்தியர்களதும் அறிவுரையை நாடுகின்றனர். தாய்மை பெண்களுக்கு இயற்கையானதாயின் கருத்தரிக்கும் காலத்திலும் பிரசவத்தின் போதும் குழந்தைப் பராமரிப்பின் போதும் பெண்கள் பிறரின் அறிவுரையை நாடுவது ஏன்?

ஆணுக்குக் குழந்தைகளைப் பெறுவதும்-வளர்ப்பதும் பால் ஒடுக்குமுறையின் ஒரு வடிவமாகும். தாயாவதும் குழந்தை பராமரிப்பதும் பெண்ணுக்கு இயற்கையானது எனும் ஐதீகத்தை ஏற்படுத்தியதன் மூலம் ஆணுக்கான வாரிசு உற்பத்திக்கு சித்தாந்த பலம் கொடுத்ததோடு, ஆணை குழந்தை பராமரிப்பு கடமையிலிருந்து விடுவிக்கவும் செய்கிறது. பெண்கள் தான் தாய்மைக் கடமைகளை செய்ய வேண்டும் எனும் இந்த ஐதீகமானது ஆண், தாய்மைக் கடமைகளில் ஈடுபடக் கூடாது எனும் எதிர்நிலையில் ஆணை வைக்கிறது. பெண்களுக்கு தாய்மையை வலியுறுத்தும் அதே நேரம் ஆண்களின் குழந்தைகள் பாலான ஆர்வம், குழந்தை பராமரிப்பு யாவும் திட்டமிட்ட முறையில் எதிர்வினையில் கொடுக்கப்பட்டு நல்ல ஆண் உருவாக்கப்படுகிறான்.

தமிழ் இலக்கியங்களில் தாய்மைக்கு ஆழமான உணர்வுகளுடன் கூடிய அழுத்தம் கொடுக்கப்படுகிறது. எம்.ஜி.ஆர் படங்களில் வரும் தாய் மிக இரக்கதிற்குரியவளாகவும், தியாகத்தின் வடிவமாகவும், தாய்மைக்கு இலக்கணமாகக் காட்டப்படுவாள். கடவுளை வணங்காத கதாநாயகன் தாயையே வணங்குவார். தெய்வங்களைக் கூட அம்மா என்று அழைப்பதன் மூலம், தாய்மைக்குரிய குணங்களுடன் தெய்வம் தமக்கு இரங்குமென மனிதர்கள் நம்புகின்றனர். திருஞான சம்பந்தக் குழந்தை பசித்து அழுத போது தெய்வத்தாயே நேரில் வந்து பாலூட்டினாள் என்கிறது சைவ இலக்கியம். இது தாயிடம் இருக்க வேண்டிய இரக்க மனப்பான்மை, குழந்தைகளுக்குத் தேவைப்படும் நேரத்தில் அதற்கான பராமரிப்பை-தாயன்பை வழங்குதல் போன்றவற்றை பெண்களுக்குக் கற்பிக்கிறது.

வரும்...

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# அரேபிய அடிமைகளாக ஆசியப் பெண்கள்

— லிங்கன் —

சாரா என்ற இந்த 15வயதுச் சிறுமியின் வாழ்வுக்கு பதில்சொல்வது யார்?



சாரா - பாலபகன் 15 வயதேயான இளம்பெண் - இல்லை வயது வந்தசிறுமி. வெகுளித்தனமும் சூதுவாதும் அறியாத அவளது முகத்தைக்காணும் மனித இதயம் கொண்ட எவரும் ''இவளா? இவளுக்கா இந்தக் கொடூரமான நிலையை ஏற்பட வேண்டும்'' என்றே எண்ணுவர்.

ஆம். இன்றைய உலகின் போக்கைப் புரிந்து கொள்ளவும் திறனற்ற அந்தப் பேதைப் பெண்தான் மரணதண்டனை வழங்கப்பட்டு துப்பாக்கிப் படையின் எதிரே நிறுத்தப்படும் நிலைக்குத் தள்ளப்பட்டாள். காரணம் தெற்கு பிலிப்பைன்சில் உள்ள மிண்டனோவா தீவில் பிறந்த அவள் ஒரு சின்ன ஆசைப் பட்டாள்; பட்டினியிலும் வறுமையிலும் வாடிய தன் குடும்பத்தை அவற்றிலிருந்து மீட்க ஆசைப்பட்டாள். அதற்காகத் திருடவோ, விபச்சாரம் செய்யவோ, போதைப்பொருள் கடத்தவோ- விற்கவோ முனையவில்லை. சொற்ப அளவே எழுதவும் படிக்கவும் தெரிந்த அவள் உழைத்து வாழ விரும்பினாள். அதற்கு தாய் நாட்டில் வழியில்லை. குடும்பத்தினர் தடுத்தும் கேளாமல் 4000மைல்களுக்கு அப்பால் உள்ள பாலைவன நகரான அபுதாபிக்குப்போய் வீட்டு வேலைக்காரியாகச் சேர்ந்தாள்.

அங்குதான் இந்தக் கொடூரம் அவளுக்கு நேர்ந்தது. அவளது சின்னச் சின்னச் ஆசைகள் நொறுங்கிச் சிதைந்தன. ஒவ்வொரு நாளும் பயங்கர சோதனைகளாகவே வடிந்தன. 17 மாதகாலநரக வாழ்க்கைக்கு முடிவு கட்டத் துணிந்த அந்தப் பேதைப் பெண் தனது எஜமானனை பாலியல் வல்லுறவு செய்த கொடூரத்துக்குப் பழிதீர்க்க அவனைக் கத்தியால் குத்திக் கொன்று விட்டாள். அந்தக் ''குற்றத்திற்காகத்தான்'' அவளுக்கு இஸ்லாமிய நீதிமன்றம் மரண தண்டனை விதித்தது.

பேராசையினால் அல்ல; வறுமையில் இருந்து மீளும் கனவுகளோடு அபுதாபிக்கு வந்து இறங்கியவள் சாரா. அங்கிருந்து தொலைதூரத்திலுள்ள பாலைவனச்சோலை நகராகிய அல் - அயினுக்குத் தரகர்களால் அனுப்பப் பட்டாள். அந்நகர ஷேக் ஜாயித்தின் அரண்மனைக் காவல் அதிகாரியாக இருந்த முகமது பலௌசி என்பவனது வீட்டு வேலையாளாகச்சேர்ந்தாள்.

அந்தக் கிழவனது பாலியல் சீண்டல்களைச் சமாளிப்பதே அவளது அன்றாடப் போராட்டமானது. அவளது கன்னித்தன்மைக்கு ஒரு தங்க நகை விலைபேசினான் பலௌசி. இஸ்லாமிய மத நம்பிக்கையுடைய அது போதிக்கும் நல்லொழுக்கமும் பேணும் அவள் அவனது கொடுமைகளைத்தாளாமல் ஒரு நாள் தப்பியோடினாள். வேலை வாங்கித் தந்த ஏஜென்டிடமே ஓடித் தஞ்சம் கோரினாள். ஒரு ஆட்டுக்கொட்டிலில் அடைத்து வைத்திருந்த அவன் மீண்டும் அதே கொடூர பலௌசியிடம் சாராவை ஒப்படைத்தான். மீண்டும் அவளது நகரவாழ்வு துவங்கியது. 1994, மே 22ம்நாள் படுக்கை அறைக்குள் சாராவைத் தள்ளிய பலௌசி, அவளது கழுத்திலே கத்தி வைத்து மிரட்டிக் கொண்டே பாலியல் வல்லுறவு புரிந்தான். அவனிடமிருந்த மீண்ட சாரா தரையில் கிடந்த அதே கத்தியை எடுத்து 33முறை மாறி மாறி ஆத்திரம் பொங்கக் குத்திக் கொன்றாள்.

கொடூரமான ஒரு குற்றவாளிக்குத் தகுந்த தண்டனைதான் கொடுத்தாள் என்றே மனித நாகரிகமுள்ள எவரும் கருதவேண்டும். ஆனால் அடிமைக்காலச் சட்டமல்லவா அங்கே கோலோச்சுகிறது! அராபிய பதூயின் இனக்குழுவின் ''இஸ்லாமிய நீதிமன்றம்'' மனிதவதை புரிந்து விட்டாள் என்று கூறி அதற்காக ஏழு மாத சிறையும், அழித்தொழிக்கப்பட்டவன் குடும்பத்துக்கு ஐம்பதாயிரம் டாலர் இரத்தப்பணமும் தரவேண்டும் என்று தீர்ப்பு வழங்கியது.

அதே சமயம் பாலியல் வல்லுறவுக்காக அவள் குடும்பத்திற்காக 33ஆயிரம் டாலர் ஈடு தரவேண்டும் என்றது.

தாய்நாட்டுச் சிறுமிகளையே வைத்து பாலியல்விடுதிகள் நடத்தி மேலைநாட்டு சுற்றுலாப் பயணிகளை வரவேற்கும் வெட்கங்கெட்ட அரசு தானே பிலிப்பைன்சில் இருக்கிறது. அதுவே ''சாராவை விடுதலை செய்'' என்று வீதிக்கு வந்து முழக்கமிடும் இஸ்லாமியப் பெண்களது ஆத்திரத்தைக் கண்ட பின் அசைந்து கொடுத்து பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கப்பட்டாள் என்று ஏற்கும் போதே தற்பாதுகாப்புக்காக செய்தது எப்படிக் கொலையாகும் என்று அபுதாபி அரசுக்கு முறையீடு செய்தது. அல் - அயின் நகர ஷேக் மறுவிசாரணைக்கு உத்திரவிட்டான். முடிவோ காட்டுமிராண்டித்தனமானதாகவும் அதிர்ச்சியூட்டக்கூடியதாகவுமே அமைந்தது. ''சாரா பாலியல்வல்லுறவுட்பட்டதற்கு ஆதாரம் இல்லை; அவள் வேண்டுமென்றே திட்டமிட்டுக் கொலை செய்தாள். ஆகவே மரண தணடனை தான்'' என்றனர் இஸ்லாமிய மன்றத்தார். இந்த அநீதிக்கு எதிராக உலகம்முழுவதும் கண்டன அலைகள் எழுந்தன. உலகின் பல நாடுகளிலும் மனித உரிமைகள் மற்றும் மகளிர் அமைப்புக்கள் ஆர்ப்பாட்டங்கள் நடத்தின. பிலிப்பைன்சின் தலைநகர் மணிலாவில் உள்ள அரபு நாட்டு தூதரகத்தின் முன்பு சாராவை விடுதலை செய்யக்கோரி நாள்தோறும் பேரணிகள் நடந்தன. ஏற்கெனவே இந்தமாதிரியானதொரு வழக்கில் பிலிப்பைன்ஸ் வேலைக்காரப் பெண் ஃப்ளோர் கண்டம் பிளாசின் இரட்டைக் கொலை செய்தாள் என்பதற்கே சிங்கப்பூர் அரசின் மரண தண்டனைக்குப் பலியானாள். அவளைக் காப்பாற்ற முயலாமல் அசிரத்தையாக நடந்து கொண்டதற்காக கடும் கண்டனத்திற்குள்ளாகி இருந்தது பிலிப்பைன்ஸ். இப்போதும் அப்படி நடக்க முடியாது என்பதால் சாரா வழக்கில் அக்கறைகாட்டத் தலைப்பட்டது. சாராவை மன்னிக்கும்படி அபுதாபி ஷேக்கிடம் மன்றாடியது.

இப்படிப் பலவாறான எதிர்ப்புகளின் காரணமாக அந்த அரபுநாட்டு அதிபர் சாரா வழக்கில் தலையிட்டு இன்னமும் வெட்கக்கேடான ஒரு ''சமரசம்'' செய்தார். சாராவின் மரணதண்டனை ரத்து செய்யப்படும்; ஆனால் அவளால் கொல்லப்பட்ட அந்த காமுகன் ஃபிலௌசியின் குடும்பத்துக்கு பழங்கால பதூயின் இனக்குழு மரபுப்படி சாரா ''இரத்தப் பணம்'' நட்ட ஈடாக செலுத்த வேண்டும்; அது' எவ்வளவு என்று பகிரங்கமாக அறிவிக்கமாட்டார்கள்.

''இரத்தப்பணம்'' அது எவ்வளவு தொகையாக வேண்டுமானால் இருக்கட்டுமே. தன்னைப் பாலியல் வல்லுறவுக்குட்படுத்திய காமுகனை அழித்தொழிப்பதும் குற்றம் என்று முத்திரை குத்துவது தானே. சாராவுக்கு அல்ல, இது மனிதநாகரிகத்துக்கே ஒரு களங்கம் தானே!

சாரா சாவின் பிடியிலிருந்து உயிர் தப்பிவிட்டாள். ஆனால் இந்தச்சம்பவம் அரேபியத் தீபகற்பத்தில் நிலவும் இருண்ட பக்கத்தை வெளிச்சத்துக்கு கொண்டு வந்தது. முகமது நபி தோன்றிய அதே காலத்து அடிமை முறைதான் இன்னமும் அங்கு நிலவுகிறது. ஆண்டுதோறும் ஆயிரக்கணக்கான இளம் பெண்கள் பின்தங்கிய ஆசியநாடுகளில் இருந்து செல்வந்த அரேபியக் குடும்பங்களில் அடிமைகளாக கடத்தப்படுகிறார்கள். ஐதராபாத்தில் உள்ள ''ரிக்ஷா'' தொழிலாளியின் மகள் 14 வயது அமீனாவை 80 வயது ஷேக் மணந்து கொண்டு கடத்திப்போக முயன்றானே அது ஒரு வகை! கை நிறைய சம்பளம். கவர்ச்சியான வேலை என்று கூறி சந்தேகத்துக்குரிய வேலை வாய்ப்புத் தரகர்கள் ஆசை காட்டி ''அனுப்பி'' வைப்பது இன்னொருவகை.

அங்கே போனதும் புதுமனைவியாகப் போனவரானாலும், வேலை தேடிப் போனவரானாலும் அடிமைதான். அவர்களது ஊதியத்தில் பெரும்பகுதி விமானப் பயணக்கட்டணத்துக்காகவும், வேலை வாங்கிக்கொடுத்த தரகுத் தொகைக்காகவும் பறித்துக் கொள்ளப்படுகிறது. வேலைக்கான ஒப்பந்தக்காலம் முடிந்த பிறகும் விடுதலை பெற்றுத் தப்பித்து சொந்த நாட்டுக்குத்திரும்ப முடியாதவாறு அவர்களுடைய கடவுச்சீட்டுகளையும் கைப்பற்றி வைத்துக் கொள்கிறார்கள்.

வாரத்தில் ஏழு நாட்களும் அதிகாலை முதல் நள்ளிரவு வரை உழைக்கும் படி நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள். மீந்துபோனதையும் எச்சில் உணவையுமே உண்டு உயிர் பிழைத்திருக்கிறார்கள். அடி- உதை, ஏச்சுப் பேச்சு, பாலியல் சித்திரவதை -பாலியல் வல்லுறவு படுகொலைகள் ஆகியவை அவர்கள் சந்திக்கும் ஈவிரக்கமற்ற கொடுமைகள். மிகமிக அப்பட்டமான, மறைக்கவே முடியாத விவகாரங்களிலேயே பாலியல்வன்முறைகள் வெளிக்கு வருகின்றன.

இந்த அக்கிரமங்களுக்கு அரசே அனுமதியும் அளித்துள்ளது என்பதுதான் விபரீதமே! ஆண்களின் கொடுமை தாங்காமல் பணிப்பெண்கள் தப்பி ஓடுவதும், அரபு நாடுகளின் குடியேற்றச் சட்டத்தை மீறுவதாகக் கருதப்படும். இருப்பினும் பிலிப்பைன்ஸ், இலங்கை, வங்கதேசம், பாகிஸ்தான் மற்றும் இந்தியத் தூதரகங்களில் ஒவ்வொரு நாளும் நூற்றுக்கணக்கானோர் தஞ்சமடைகின்றனர். அரபு ஷேக்குகள் சுல்தான்கள் அளிக்கும் விருந்துகளில் குடித்தும் கும்மாளமிடும் இந்நாடுகளின் தூதரக அதிகாரிகளோ இப்பிரச்சினையை அலட்சியமாகவே அணுகுகின்றனர்.

உலகின் பலநாடுகளும் கூடி, ஈராக்குக்கு எதிராகப் போரிட்டு மீட்ட குவைத் நாடுதான் மிக மோசமான அட்டூழியங்கள் நிறைந்ததாக உள்ளது. குவைத் நகரில் தான் மிக அதிகமான பணிப்பெண்கள் தமது தாய்நாட்டுத் தூதரகங்களில் தஞ்சம் தேடி வருகின்றனர். ''இங்குள்ள பலவீடுகளிலும் ஆசியப் பணிப்பெண்களை முறைகேடாக நடத்துவதும் அடித்து உதைப்பதும் பாலியல் வல்லுறவு புரிவதும் உரிமையோடும் ஒரே வழமையாகவும் நிகழ்வதை எங்களது ஆய்வுகளின் போது கண்டோம்'' என்று பெய்ஜிங் மகளிர் மாநாட்டின் போது சமர்ப்பித்த மனித உரிமைகள் கண்காணிப்புக் குழு அறிக்கை குவைத் பற்றிக் கூறுகிறது.

இலங்கைத் தூதரகத்தில் தஞ்சமடைந்த பல பணிப்பெண்களின் கண்ணீர்க்கதை தெளிவான சித்திரத்தை தரக் கூடியவையாக உள்ளன.

ஃபாத்திமா, 21 வயது இஸ்லாமியப் பெண். இலங்கையின் குருநாகலைச் சேர்ந்தவர். பென்சில், தாள் வைத்து எழுதித்தான் மற்றவருடன் தன் எண்ணத்தைச்சொல்ல முடியும். வேலை வாங்கித் தரும் தரகனால் பாலியல் வல்லுறவுக்கு உட்பட்ட அதிர்ச்சியினால் அவரது நாக்கு அவளது மேலன்னத்தில் ஒட்டிக் கொண்டு பேசும் சக்தியை இழந்தாள் என்று மருத்துவர்கள் சொல்கிறார்கள். ஆனால் அவள் இலங்கைத் தூதரகத்தில் தஞ்சம் புகுந்ததும் வரவழைக்கப்பட்ட பொலிஸ் மருத்துவர் 'அவள் கன்னி கழியாதவள்' ஆகவே பாலியல் வல்லுறவு உட்பட்டாள் என்பதை ஏற்கமுடியாது' என்று பொய்யான சான்றிதழ் அளித்தார். குற்றவாளி தப்பியதோடு அந்தப் பெண் மீதே பொய்யான புகார் தந்ததாக பழிபோடப்பட்டது.

மரியம் திருமணமான 25 வயதுப்பெண். இலங்கையில் அவளது கணவனும் ஒரு குழந்தையும் உள்ளனர். இவளோ ஒரு வயதுக் குழந்தையுடன் இலங்கைத் தூதரகத்தில் தஞ்சம் அடைந்தாள். அது அவளது ஆண்டையின் மகனால் பாலியல் வல்லுறவு உள்ளாக்கப்பட்டு பிறந்த குழந்தை: அவனோ அடியோடு மறுக்கிறான். விசாரணை என்கிற பெயரில் 8 மாதகாலம் மருத்துவமனையில் சிறை வைக்கப்பட்டாள். பாலியல் வல்லுறவு உட்படுத்தியவன் சொன்னதையே குவைத் பொலிஸ் ஏற்றதால் தூதரகத்தின் ஒரு மூலையிலே வாழ்ந்து வருகிறாள். யாராவது போடும் ''பிச்சை''யே பிழைப்புக்கு வழியாக உள்ளது. பாலியல்வல்லுறவுக்குட்பட்டதால் கணவனும் சமூகமும் அவளை ஏற்க மறுத்து அநாதையாக்கப் பட்டாள்.

துசாரி, 26 வயது பெண். இலங்கை அனுராதபுரத்தைச் சேர்ந்தவள். இவளுக்கு பாலியல் சித்திரவதைகள் கிடையாதுதான். ஆனால் வேலையில் அதிகாலை முதல் நள்ளிரவு வரை கசக்கிப் பிழிகிறார்கள். வீட்டில் குழந்தைகளை பராமரிப்பது முதல் எல்லா வேலைகளையும் செய்து கொண்டு ஆண்டையின் மனைவி நடத்தும் அழகு நிலையத்திலும் வேலை செய்ய வேண்டும். ஆனால் முறைப்படி ஊதியம் தருவதில்லை. சிறு தவறு செய்தால் கூட ஆண்டையின் மனைவி துசாரியின் வயிற்றில் ஓங்கிக் குத்துவாள். இந்தக் கொடுமைதாளாமல் தப்பிவந்து தஞ்சமடைந்த துசாரி கசப்போடு சொன்னாள். ''நான் இலங்கைக்கே திரும்பிப் போக விரும்புகிறேன். இங்கு இருப்பதே வெறுப்பாக உள்ளது. அவர்கள் பணக்காரர்கள்; நாங்கள் பரம ஏழைகள்; அதுதான் எங்களை பிராணிகளைப் போல நடத்துகிறார்கள்.

குவைத்திலிருந்து இந்தக் கொடூரங்கள் வெளிவருகின்றன. இதே அளவு மோசமான நிலை சவூதி அரேபியாவில் இருந்தாலும், அந்த அரசு அவற்றை மூடி மறைத்து விடுகிறது. அங்குள்ள 43,000 பிலிப்பைன்ஸ் பணிப்பெண்களில் ஆண்டுதோறும் 4000 பேர் தமது தாய் நாட்டு தூதரகத்தில் தஞ்சமடைகின்றனர். அவர்களில் 11 பேர் பாலியல் வல்லுறவு உள்ளாக்கப்பட்டவர்கள். இதற்கும் மேலாக பாலியல் வல்லுறவு சம்பவங்கள் இருக்கலாம்: புகார் கொடுத்தால் தானே விசாரிக்க முடியும் என்கிறது தூதரகம்.

''இதெல்லாம் கலாசார வேறுபாடுகளால் ஏற்படுவன; பெண்கள் பர்தா அணியும் வழக்கமுள்ள நாடுகளில் அரைகுறை உடையுடன் புழங்கும் பணிப்பெண்கள் ஒழுக்கங்கெட்டவர்களாக எண்ணத் தோன்றுகிறது. செல்வந்தர்களான அரேபியர்கள் கல்வி அறிவில்லாததால் பணிப்பெண்களை அடிமைகளாகவே கருதுகின்றனர்'' என்று குவைத் ஆட்சிக் குழுவின் மனித உரிமைக் கமிட்டி நியாயம்கற்பிக்கிறது. ''ஏதோ சில சம்பவங்கள் நடக்கின்றன; அவற்றைப் பிரசுரித்துப் பெரிதுபடுத்தும் அளவுக்கு ஒன்றுமில்லை. இதைக் கூட சகித்துக்கொள்ள முடியாவிட்டால் உங்கள் பெண்களை வெளியே ஏன் அனுப்புகிறீர்கள்; பூட்டிவைத்துக் கொள்வதுதானே; இதுவே தொல்லையாகப் போய்விட்டது என்று திமிரோடு கேட்கிறார் குவைத் அதிகாரி.

இந்த நிலையில் சாராவை மீட்பதற்கு உலகின் பல்வேறு இயக்கங்களும் மேற்கொண்ட முயற்சியை கசப்போடு வெறுப்போடு பார்க்கிறார்கள் அரேபியர்கள். ''ஒரு மனிதனைக் கொன்றவளுக்கு ரோஜப்பூவா தந்து பாராட்ட முடியும். அரேபியர்களும், முஸ்லிம்களும் எப்போதும் சந்தேகத்துக்குரியவர்கள் என்று இழிவாகவே கருதப்படுகிறார்கள். எங்கள் நாட்டிலே எங்கள் சொந்தச் சட்டத்தை அமுலாக்கவும் கூடாதா?'' என்று ஆணவத்தோடு எழுதுகிறது. ''அல் சுருக்'' என்ற துபாய் செய்தித்தாள்.

அவர்கள் சொந்தச் சட்டத்தின் யோக்கியதை என்ன? ஆயிரக்கணக்கான பணிப்பெண்கள் அங்கே உழைத்தாலும் அவர்கள் சட்டப்படி அங்கே இருப்பவர்கள் அல்ல. அவர்களை அச்சட்டம் மனிதர்களாகவே கருதி அங்கீகரிப்பதில்லை. ஒரு அரபுப் பெண்ணுக்கு மானபங்கம் ஏற்பட்டாலோ, ஒரு அரேபியனின் உயிருக்கு ஆபத்து என்றாலோ மரணதண்டனை தரப்படுகிறது. சில மாதங்களுக்கு முன்பு ஒரு பணிப்பெண் தனது எஜமானியை திருப்பி அடித்தாள் என்பதற்காக வழங்கப்பட்ட தண்டனையோ ஐந்தாண்டு சிறைவாசம். ஆனால் உழைக்க வந்தவள் பாலியல்வல்லுறவு உட்பட்டாலோ ஆண் கொலை செய்யப்பட்டாலோ, அங்கே சட்டப்படி குற்றவாளிகள் தப்பித்துக் கொள்ள முடியும்.

ஜனநாயகப் பண்பும் மனித நேயமும் போற்றும் இஸ்லாமியர்களிடமும் எம்மதமும் சம்மதம் எனக்கூறும் நெறியாளர்களிடமும் கேட்கிறோம். இதுதான் இஸ்லாமிய தர்மமா? அடிமைத்தனமும் அராஜக வாழ்வும் அன்றைய அரேபிய பாலைவன நாடோடிகளான பதூயின் இனக்குடிகளை நாகரிக வாழ்வுக்குத்திருப்பிய முகம்மது நபி போதித்த தர்மம் இத்தகையதுதானா? இதற்காகத்தான் நபி பெருமானாரின் வாரிசுகள் அரேபிய சுடுமணலில் இரத்தம் சிந்தினரா? அந்தத் தியாகத்தை நினைவு கூற மொகரம் என்ற தியாக நாளில் ஆண்டுதோறும் இரத்தச் சன்னங்களை இஸ்லாமியர் வரைந்து கொள்வது இத்தகைய தர்மநெறியைக் காப்பதற்குத் தானா?

''எங்கே இல்லை இப்படிப்பட்ட கொடுமைகள்! இந்த நாட்டில் மட்டும் என்ன வாழ்கிறது!'' என்று இஸ்லாமிய மதவாதிகள் கேட்பது புரிகிறது. ஆம்! இங்கேயும் இதேநிலைதான். இராஜஸ்தானில் பண்வாரிதேவி என்ற தாழ்த்தப்பட்ட பெண்ணை பாலியல் வல்லுறவு உட்படுத்திய குற்றவாளிக்கு எதிரான வழக்கில் மேல்சாதிக்காரர்கள் ஒரு கீழ்சாதிப் பெண்ணை தொட்டு அப்படி நடந்திருக்க மாட்டார்கள் என்று விடுதலை செய்தது உயர் நீதிமன்றம். பார்ப்பனிய சனாதன இந்து தர்மத்துக்கு எதிராக எவ்வித சமரசமும் இல்லாமல் போராடி வருபவர்கள் என்ற உரிமையில் தான் இதைக் கேட்கிறோம். ''ஷாரியத்'' தானாலும் ''மனுதர்ம''மானாலும் ஒன்று மோசமானது என்பதால் இன்னொன்று நல்லது என்றாகாது. ஏதோ ஒரு பன்வாரிதேவி, ஏதோ ஒரு சாரா விவகாரத்தில் மட்டுமல்ல; கோடிக்கணக்கான சாராக்களும் பன்வாரிதேவிகளும் ''ஷாரியத்'' தாலும், ''மனுதர்ம''த்தாலும் மிருகத்தனமாக ஒடுக்கப்பட்டு வருகிறார்கள்.

நன்றி: புதிய கலாசாரம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# கறுப்பு யுகம் வேண்டாம்

தமிழ் முஸ்லிம்களின் ஒற்றுமையின் அடிநாதமாயத் திகழ்வது கிழக்கு மாகாணம்தான். அவற்றிலும் குறிப்பாக அம்பாறை மாவட்டத்தில்தான் இவ்விரு இனங்களின்சமூக கலாசார, விழுமியங்களின் வெளிப்பாட்டின் சாதகத்தன்மைகள் நன்கு புலப்படும். மாறாக இன வன்முறைகள் வெடிப்பதும், இனப்பூசல்கள் உதிர்ப்பதும் இம்மாவட்டத்திலிருந்துதான்.

இதற்கு புவியியல் ரீதியான இட அமைவுகள் முக்கிய காரணிகளில் ஒன்றாகவும் விளங்குகிறது. அக்கரைப்பற்று, ஆலையடிவேம்பு, சம்மாந்துறை, காரைதீவு, மருதமுனை, பாண்டிருப்பு, நிந்தவூர், திராய்கேணி, மாளிக்கைகாடு இப்படி முஸ்லிம்தமிழ்க்கிராமங்கள் அடுத்தடுத்து வீதிகளின் மருங்கே காணப்படுகிறது.

கடந்த காலத்து இனவன்முறைகளை கவனத்திற்கெடுக்கும் போது அம்பாறை மாவட்டம்தான் கூடியளவு அனர்த்தங்களையும், அகோரத்தையும் கண்டுள்ளது. இனத்துவேசத்தின் அத்துமீறிய செயற்பாடுகள், ஆத்திரமூட்டும் பழிவாங்கல்கள், ஏற்படுத்திய விளைவு வரலாற்றின் பதிவுகளிலிருந்து அழித்திட முடியாதவை. ஆனால் இவையெல்லாம் மறந்து தூரநோக்கோடு சிந்தித்து சமாதானமே வேண்டும். சாந்தியே பெரிது என்ற சுபாவத்தோடு வாழ்ந்து வந்த மக்களுக்கு அண்மையில் நடந்த ''மருதமுனை சம்பவம்'' தலையில் இடியை தூக்கிப்போட்டுள்ளது.

மருதமுனையிலிருந்து பாண்டிருப்புக்குச் சென்ற 5 முஸ்லிம் ஊர்காவற் படையினர் சுட்டுக்கொல்லப்பட்டனர். இதனை செய்தது யார்? இதற்கான பின்னணி என்ன? இதன் மூலம் ஏற்படும் விளைவுகள்? இதற்கான விடைகளைக் காணவேண்டும். விடுதலைப் புலிகள் தமக்கெதிரானவர்களையும், தம்விரோதிகளையும், அழித்து வரும் இக்காலத்தில் அவதானமாக நடக்கவேண்டியது ஒவ்வொருவருடைய கடமையாகும். இப்படுகொலைகளைச் செய்தது புலிகளா? அல்லது தனிப்பட்ட கோபதாபங்களா என்பதையெல்லாம் கொஞ்சமேனும் சிந்திக்க வேண்டும்.

வேண்டுமென்றே இனவிரிசலை ஏற்படுத்தி அதன் மூலம் சுயலாபங்களை ஏற்படுத்த நினைக்கும் சண்டாளர்களுக்கு இது தக்கதருணமாக அமைந்து விடும். இனமோதலில் கிடைக்கின்ற சாதகத்தன்மையால் தமது குறிக்கோள்களை அடையக்காத்திருக்கும் ''கும்பல்கள்'' ஏராளம் இருக்கின்றது.

மருதமுனைச் சம்பவத்தை ஒருபொருட்டாக வைத்துக்கொண்டு கிழக்கின் ஏனைய பிரதேசங்களிலும் இனவன்முறைகளை ஏற்படுத்தி வக்கிரத்தை உண்டு பண்ணி, மீண்டும் ஒரு கறுப்பு யுகத்தை ஏற்படுத்த எந்தவொரு சமூகமும் இடங்கொடுத்து விடக்கூடாது.

இனப்பிரச்சினைக்கான தீர்வுத்திட்டத்தினை முன்வைத்து அதற்கு சிறுபான்மை சமூகத்தின் ஆதரவினை திரட்ட முயற்சிக்கும் தருணத்தில் தமிழ், முஸ்லிம் மோதல்கள் பேரினவாதத்திற்கு சாதகமாய் அமைந்து விடும்.

வடகிழக்கிலே யாருடைய அபிப்பிராயத்தையும் பொருட்படுத்தாது ஏற்பட்டிருக்கும் நிருவாகசபையும் தமிழ், முஸ்லிம் உறவில் சிக்கல் உண்டு பண்ணக்கூடிய தொன்றாகவே எண்ணத்தோன்றுகின்றது. நிதானமற்று தீர்க்க தரிசனமில்லாமல் சிந்திக்கின்ற அரசின் நடுவே வடகிழக்கு தமிழ் முஸ்லிம்கள் ஒற்றுமையோடும், விழிப்புணர்ச்சியோடும் செயற்பட வேண்டும்.

*ஷெபானா பெனாசீர்*
*அக்கரைப்பற்று*

# உரத்துக்கேட்கும் சுகன்

அம்பனைச் சந்திக்கும் தெல்லிப்பளைச் சந்திக்கும் இடையிலுள்ள தமிழ் மரங்களைக் கொண்ட வழியிலுள்ள மகாஜனாக்கல்லூரி அபிமானத்திலிருந்து இன்னும் விடுபடவியலாத விஜயேந்திரன். தமிழ் அபிமானத்திலிருந்து விடுபட முடியும் என்று இங்கு யாரும் எதிர்பார்க்கவில்லை.

அதிகார வர்க்கங்களுக்கிடையில் நிகழும் இந்த யுத்தத்தில்பங்கு கொள்ளாத அதனால் பாதிப்படைந்த மக்கள் கொடுங்கோலர்களது புனிதமாக்கப்பட்ட கருத்தியல்கள், நடவடிக்கைகள் இவற்றைக் கேள்விக்குள்ளாக்குவதும் கேலி செய்வதும் நிராகரிப்பதும் இயல்பு.

''மற்ற வகுப்பாருடைய அரசியல் கிளர்ச்சிகளில் நீங்கள் பட்டுக்கொள்ளாதீர்கள். அதெல்லாம் பணக்காரனும் மேல்சாதிக்காரனும், படித்த கூட்டமும் இன்னமும் அதிகமாய் ஆதிக்கம் செலுத்தவே பாடுபடும் கிளர்ச்சியாகும்...'' என்று ராமசாமியார் சொன்னார். தமிழ் கூறும் நல்லுலகத்திற்கும் வளரும் முப்பத்தைந்து லட்சம் மக்கள் கொண்ட பகுதியினளாகிய தமிழ்ப் பிச்சைக்காரிக்கும் தமிழ்த்தங்கச்சிக்கும் தமிழ் அக்காவுக்கும் தமிழ் மச்சாளுக்கும் சரிநிகரை விட்டால் வேற வேலையில்லை என்று இளவாலை சொல்வது கொஞ்சங்கூட நல்லாயில்லை.

அரிகண்டப்படுத்தி, ஆக்கினைப்படுத்தி, வில்லங்கப்படுத்தி, வெருட்டி சொல்லிக் கேட்ட சுயநிர்ணய உரிமை, தேசிய விடுதலைப்போராட்டம், தமிழீழம், ஈழம், விடுதலை, இன்னோரன்ன கலைச் சொற்களைக்கேட்டு இன்று பயப்படாதவர் யாருளர்?

அச்சம், மடத்தனம், பலவீனம், ஒடுக்குமுறை, பொய், கபடம், வன்முறை, எச்சரிக்கை, தணிக்கை, தடை, அச்சுறுத்தல், பித்தலாட்டம், அனைத்துமானவைதானே மேற்போந்த சொல்வழக்குகள் யாவும்.

விஜயேந்திரன் கடிதத்தின் மூன்றாம் பந்தியிற்கூட இந்தப் பயமுறுத்தல் மிரட்டல் தெரிகிறது.

'தமிழனாய் இரு' என்று துவக்குடன் சொல்கிறார்கள். விஜயேந்திரன் துவக்கில்லாமல் அல்லது மறைத்துக்கொண்டு சொல்கிறார். - பாவம் விஜயேந்திரன். நாம் தமிழர் அல்ல என்று கூறுவது எதிர்வினையற்றுப்போகுமாயின் யாரடா தமிழன் என்று இன்னும் உரத்துக் கேட்பது நமக்கு முக்கியமானது.

*சுகன்*
*பிரான்ஸ்*

திருமலை

# ஆசிரிய நியமனங்களில் முஸ்லிம்களுக்கு அநீதி?

1996 ஜனவரியில் வழங்கப்பட்ட ஆசிரிய நியமனத்தில் திருகோணமலை முஸ்லிம்களுக்கு திட்டமிடப்பட்டு அநீதி இழைக்கப்பட்டுள்ளது. திருமலை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் முஸ்லிம் மாணவர் தொகையே அதிகமாகும். 35048, (தமிழ் மாணவர் 29898) ஆசிரியரைப் பொறுத்தவரையில் தமிழ் ஆசிரியர் தொகையே அதிகம். (தமிழ் ஆசிரியர் - 1256, முஸ்லிம் ஆசிரியர் - 1051) இந்நிலையில் முஸ்லிம்களுக்கான ஆசிரிய வெற்றிடம் மிக அதிகமாகும். ஆனால் வழங்கப்பட்ட நியமனோ அநீதியாகவே வழங்கப்பட்டுள்ளது. இவ்வநீதி தொடர்பாக கிண்ணியா சமூக சேவைகள் அமைப்பு கௌரவ ஜனாதிபதி கல்வியமைச்சர், துறைமுகங்கள் கப்பற்துறை அமைச்சர் உட்பட அநேகமான ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி எம்பிக்களுக்கு சுட்டிக்காட்டிய போதும் நியாயம் வழங்கப்படாததுடன் எதுவிமான பதிலும் அளிக்கப்படவில்லை. குழுக்களின் பிரதித்தலைவர் கடந்த ஜுன் மாதம் பாராளுமன்றத்தில் குரல் எழுப்பியும் எதுவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இவ்வாறு அநீதியாக நியமனம் வழங்கப்படக் காரணம் என்ன?

1994, 812ம் இலக்க வர்த்தமானி அறிவித்தலுக்கு முரணாகவே நியமனம் வழங்கப்பட்டுள்ளது. கல்விச் சேவை ஆணைக்குழுவின் க.சே.ஆ/டீஈ/08/21, 081095 என்ற கடிதத்தின்படி பிரதேச இனவிகிதாசாரமும், புள்ளியும் கவனத்தில் கொள்ளப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. எனினும் அது கவனத்தில் கொள்ளப்படவே இல்லை. அதற்கான ஆதாரங்கள் வறுமாறு:

***கிண்ணியா***

1. 93% முஸ்லிம்களுக்கு 157 வெற்றிடங்களுண்டு. வழங்கப்பட்ட நியமனங்கள் 5 (முன்பு 3 முஸ்லிமும் 2 தமிழரும் நியமிக்கப்படுவர் என ESB/IE/08/21-9/10/95என்ற கடிதத்திற்கு ஆட்சபேம் தெரிவித்தமையடுத்து 2 முஸ்லிம் நியமிக்கப்பட்டனர்) 6% தமிழருக்கு 2 வெற்றிடங்களுண்டு வழங்கிய நியமனம் 3.
2. இனவிகிதாசாரப்படி 18 முஸ்லிம்களுக்கு 1 தமிழரே நியமிக்கப்படமுடியும்.
3. புள்ளியடைப்படையில் பார்ப்பின் 1-22-தர நிலை வரை முஸ்லிம்களேயுண்டு. 22-36க்குமிடைப்பட்ட 3 தமிழ் பரீட்சாத்திகளுக்கு நியமனம் வழங்கப்பட்டுள்ளது.
4. வர்த்தமானி அறிவித்தலின்படி குறித்த பிரதேசத்தவரே நியமிக்கப்படவேண்டும். தகுதியான பலர் கிண்ணியாவில் இருக்க தம்பலகாமம் பிரதேசத்தைச் சேர்ந்த வி.டீ. சுபாஸினி என்பவர் கிண்ணியாவுக்கு நியமனம் வழங்கப்பட்டு இரகசியமான முறையில் மாகாண சபையின் T/G/A/1/87/,1-03-96 என்ற கடிதத்தின் படி தம்பலகாமத்திற்கு இடமாற்றப்பட்டு அங்கு கடமையேற்றுள்ளார்.
5. கிண்ணியாவில் வழங்கப்பட்ட 3 தமிழ் நியமனங்களில் ஒருவர் மட்டுமே கிண்ணியாவைச்சோநதவா. முஸ்லிம் பாடசாலைகளில் அதிகமான தமிழ் ஆசிரியர்கள் கடமையாற்ற முடியுமானால் ஏன் தகுதியுடைய முஸ்லிம் ஆசிரியர்கள் கிண்ணியா தமிழ்ப் பாடசாலைகளில் கடமையாற்ற முடியாது?

***தம்பலகாமம்***

தம்பலகாமத்தில் முஸ்லிம்கள் 45% அவர்களுக்கான ஆசிரிய வெற்றிடம் 87. வழங்கப்பட்ட நியமனம் 3.

34% தமிழருக்கான வெற்றிடம் 9 வழங்கப்பட்ட நியமனம் 6. இது நியாயமான நியமானமா?

இவ்வாறே கந்தளாய், மூதூர், குச்சவெளி, மொராவெவப்பகுதிகளில் முஸ்லிம் ஆசிரிய வெற்றிடங்கள் அதிகமாகக் காணப்படுகின்றன. இங்கு எவ்வாறு நியமனம் வழங்கப்பட்டது? இந்த அநீதியான நியமனத்திற்கு திட்டமிட்டது யார்? மாகாண சபையா? கல்விச்சேவையா ஆணைக்குழுவா?

திருமலை நகரத்தில் தேவைக்கதிகமாகக் காணப்படும் ஆசிரியர்கள் வெற்றிடமுள்ள தமிழ்ப்பாடசாலைகளுக்கு இடமாற்றப்பட வேண்டும். முற்றிலும் தமிழ்ப்பகுதி என்பதால் ஈச்சிலம்பற்றைக்கு 17 நியமனம் வழங்கப்பட்டுள்ளது. தேவைக்கதிகமான ஆசிரியர்கள் அங்கு இடமாற்றப்படவேண்டும். திருமலை மாவட்டத்தில் சகல துறைகளிலும் முஸ்லிம்கள் திட்டமிட்டப்பட்டு புறக்கணிக்கப்படுவது உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்.

*ஜாபிர் அப்துல்ஸலாம்*
*செயலாளர்*
*கிண்ணியா சமூக சேவைகள் அமைப்பு*

# நியாயம் வேண்டும்

1958 முதல் பயிற்றப்பட்ட ஆசிரியராகப் பணியாற்றி வந்தேன். எனது சேவை மூப்பு, சேவைக்காலத் திறமை அடிப்படையில் 1980 முதல் 3 ஆம் தர அதிபராகவும், 1990 முதல் 2ஆம் தர அதிபராகவும் தெரிவு செய்யப்பட்டு கடைமையாற்றி 1995 ஆனி 03ம் திகதி ஒய்வு பெற்றேன்.

அரசு பல்வேறு தகைமையுடைய ஆசிரியர்களுக்கு 01.01.1995 முதல் புதிய சம்பளத் திட்டத்தை அமுல் செய்து வழங்கி வருகின்றது. குறித்த திகதிக்குப் பின்னர் ஆசிரிய சேவையில் இருந்து ஓய்வு பெற்றவர்களுக்கும் புதிய சம்பளத் திட்டத்தின் அடிப்படையில் ஒய்வூதியம் வழங்கப்பட்டு வருகின்றது.

அரசு, வாக்குறுதியளித்தபடி 01.01.1995 முதல், அதிபர்களுக்கான புதிய சம்பளத் திட்டத்தை அமுல் நடத்தவில்லை. இதனால் ஆசிரியர் பெறும் சம்பளத்தை விட அதிபர்கள் மிகக் குறைந்த சம்பளத்தையே பெற்று வந்தனர். இந்த ஏற்றத்தாழ்வு நீடித்த காரணத்தினால் அதிபர்கள்; ''புதிய சம்பளத் திட்டத்தை அரசு அமுல்படுத்த வேண்டும்'' என்று கோரிக்கை விடுத்து சட்டப்படி வேலைசெய்து தமது எதிர்ப்பைத் தெரிவித்தனர்.

இதனைக் கண்ணுற்ற அரசு தற்போது சேவையிலுள்ள அதிபர்களுக்கு 1996 வைகாசி முதல் புதிய சம்பளத்திட்டத்தை அமுல்செய்து வருகின்றது. ஆனால், 01.01.1995 முதல் 30.04.1996 வரை அதிபராகவிருந்து இக்கால எல்லைக்குள் ஒய்வு பெற்ற அதிபர்களுக்கு பழைய சம்பளத்திட்டத்தின் அடிப்படையிலேயே ஒய்வூதிய மொத்த தொகையும்; ஒய்வூதியமும் வழங்கப்பட்டு வருகின்றது.

இக்கால எல்லைக்குள் அதிபர் பதவி பெறாமல் இவர்கள் ஆசிரியர்களாகப் பணியாற்றியிருந்தால், ஆசிரியர்களுக்குரிய புதிய சம்பளத் திட்டத்தின் அடிப்படையில் கூடிய மொத்தத் தொகையையும், ஒய்வூதியத்தையும் பெறக்கூடியதாக இருந்திருக்கும் அல்லவா?

எனவே 01.01.1995 - 30.04.1996 வரையான காலத்துள் அதிபராகவிருந்து ஒய்வு பெற்ற அதிபர்களின் நியாயமான மேற்போந்த காரணங்களை பரிசீலனை செய்து அவர்களுக்கு உரிய மொத்தத் தொகையையும், ஒய்வூதியத்தையும் அரசு வழங்கி உதவ வேண்டும்.

இது முடியாத பட்சத்தில் அதிபர் தரத்துக்கான சம்பளத்திட்டம் இல்லா விட்டாலும் சாதாரண ஆசிரியருக்குரிய புதிய சம்பளத்திட்ட அடிப்படையில் மொத்தத் தொகையையும் ஒய்வூதியத்தையுமாவது வுழங்குமாறு அரசையும்; நியாயத்தை அரசுக்கு எடுத்து விளக்குமாறு ஆசிரிய தொழிற்சங்கங்களையும் விநயமாக வேண்டுகின்றேன்.

*வே. சிவகுரு*
*ஒய்வு பெற்ற அதிபர்*
*அக்கரைப்பற்று -07*

# மு.பொ இன்னும் விரித்துச் சொல்ல வேண்டும்

சரிநிகர் 105வது இதழில் ஆரம்பித்துத் தொடரும் மு.பொன்னம்பலத்தின் ''90களில் ஈழத்துத் தமிழ்க்கவிதைகளில் மாற்றம் ஏற்பட்டதா?'' கட்டுரைத்தொடர் இன்றைய காலகட்டத்தின் தேவையாக இருக்கிறது. இன்றும் கூட ''எது கவிதை...?'' என்ற வினாவுக்கு மயக்கங்களையே விடையாகக் கொண்டிருப்போர்க்கும் தங்களுக்குப் பிடித்தமானவர்களை பிதாமகர்களாகக்கொண்டு கவிதை சமைப்போர்க்கும் ஏன் சில பெயர்களையே வாய்ப்பாட்டுத் தனமாக உச்சரிக்கப்பழகிய 'ஆய்வாளர்கள்' என்று சொல்லிக்கொள்பவர்களுக்கும் சில தேடல்களை அகலிக்கக்கூடிய செய்திகளைச் சொல்லும் மு.பொ.வின் கட்டுரை இடையில் முடிவடையாமல் இன்னும் சிலவாரங்கள் தொடர்ந்து சில குருட்டு விமர்சர்களின் விழிகளைத்திறக்க வேண்டும்.

ஆனாலும் தர்மு சிவராமுவின் கவிதைகளுடன் சோலைக்கிளியின் கவிதைகளை ஒப்பிடுகையில் சில முரண்பாடுகள் நேர்ந்திருக்கிறது. தர்மு சிவராமு படிமக் குவியல்களுக்கிடையே தனது கவிதைகளைத் தொலைத்தாலும் அதில் ஒரு கவிதைத் தன்மை இருந்தது. மனித எச்சங்களையும் மானுட படிமங்களையும் தேடும் ஒரு தேடல் நிறைந்திருந்தது. எனவே அதில் மெல்லியதாகக் கவிதையுணர்வு இழையோடியதையும் தமிழருக்கு பல புதிய வார்த்தைப் பிரயோகங்கள் ஆகர்ஷிக்கப்பட்டிருப்பதையும் மறுக்க முடியாது.

''கைப்பிடியளவு கடல்' தொடக்கம் 'மேல் நோக்கிய பயணம்' வரை அவரது கவிதைத் தொகுப்புகள் கவிதைகளாக இருந்தது. ஆனால் சோலைக்கிளியின் 'எட்டாவது நரகம்' தொடங்கி 'பாம்பு நரம்பு மனிதன்' வரை அவர் இன்னும் கவிதை எழுதவே தொடங்கவில்லை கவிதை செய்திருக்கிறார்.

இங்கு சோலைக்கிளிக்கு வக்காலத்து வாங்குபவர்கள் 'பழமழய்' கவிதைகளை உதாரணத்துக்கு கொண்டு வருவார்கள். 'சனங்களின் கதை' பற்றியும் 'குரோட்டன்' பற்றியும் பாடும் பழமழயிடம் தலி கவிதை இருக்கிறது. அறையை பூட்டி வைத்துவிட்டு நான்கைந்து கவிதைகளை ஒரே நேரத்தில் எழுதும் சோலைக் கிளியிடம் என்ன இருக்கிறது?

எனவே அன்புடன் மு.பொவிடம் கேட்டுக்கொள்வதென்னவென்றால் இனிமேலும் 'சேரமான் கணைக்கால் இரும்பொறை' போன்றவர்களின் அறியாமை நிறைந்த விமர்சனம் ஏற்பட வழிசமைக்காத வகையில் தங்கள் தொழில் பன்முகப் பார்வையுடன் விரிந்து செல்ல வேண்டும். சில ஆய்வுபூர்வமான தகவல்களை தற்கால நவீன தமிழ் கவிதா உலகிற்குத்தரவேண்டும்.

*ஹஜேந்தினி*
*மட்டக்களப்பு*

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

SARINIHAR
சரிநிகர்

## அரசு எவ்வழி குடிகள் அவ்வழி!

கடந்த சில மாதங்களாக தென்னிலங்கை (சிங்கள)கட்சி அரசியல் நீரோட்டத்தில் அதிகரித்து வரும் அரசியல் வன்முறைகளானது மீண்டும் சலனத்தை ஏற்படுத்தியுள்ளது.

1956ம் ஆண்டு சிங்கள அரச கருமமொழிச் சட்டம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டபொழுது தமிழ் மொழிக்கும் சமவுரிமை கோரி ஜனநாயக ரீதியில் காலிமுகத்திடலில் எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்ட தமிழ்த் தலைவர்களுக்கு எதிராக அப்போதைய பண்டாரநாயக்க அரசு குண்டர்களை ஏவிவிட்டு தாக்குதல் நடத்திய சம்பவத்தை சுதந்திர இலங்கையின் அரசியலில் வன்முறைப் பிரயோகத்தின் ஆரம்பமாகக் குறிப்பிடலாம்.

பண்டாரநாயக்கவினதும் அவரது மனைவியான சிறிமா பண்டாரநாயக்கவினதும் ஆட்சிக்கால (1960 -65, 1970- 77) கட்டங்களில் இனமுரண்பாட்டை அடிப்படையாகக் கொண்ட வன்முறைகள் நிறுவனமயப்படுத்தப்பட்டன. 1971ம் ஆண்டின் தென்னிலங்கை இளைஞர்களின் ஆயுதக் கிளர்ச்சியை வன்முறைகளின் மூலம் முறியடித்த அரசு, அதே வன்முறைகளைத் தமிழர்களின் ஜனநாயகப்போராட்டத்திற்கு எதிராகப் பயன்படுத்தியன் மூலம் இனமுரண்பாட்டையும் வன்முறை மயப் படுத்தியது.

1977ம் ஆண்டு பதவிக்கு வந்த ஜே.ஆர். ஜயவர்தனவின் ஐ.தே.கட்சி அரசு இனவாதத்தையும் அரசியல் வன்முறையையும் ஆயுதங்களாகக் கொண்டு அடக்கு முறை மூலம் ஆட்சி நடத்த முயன்றதன் விளைவாக இந்நாட்டு அரசியல் முழுமையாக வன்முறையை மயப்படுத்தப்பட்டது.

தமிழ் மக்களையும் தமிழ் மக்களின் பிரச்சினையையும் தளமாகக் கொண்டே சிங்கள அரசியற் தலைமைகளினால் அரசியல் வன்முறைக்கான அடித்தளம் அமைக்கப்பட்டது. தமிழர்களுக்கு எதிராக ஏவிவிடப்படும் வன்செயல்கள் சிங்கள அரசியல் சக்திகளினால் ஏற்றுக் கொள்ளப்பட்டமை அல்லது இவ்வன்முறைகளைக் கண்டும் காணாததுபோல மௌனம் சாதிக்கும் இவர்களின் நடவடிக்கைகள் இந்நாட்டின் அரசியலில் வன்முறை நிறுவனமயப்பட உதவியாக அமைந்தது. எனினும் 80களின் பிற்பகுதியில் தென்னிலங்கையில் பரவிவந்த வன்முறைச் சம்பவங்கள் அம்மக்களின் விரக்திக்கு வழிவகுத்ததோடு ஐ.தே.கட்சியின் தோல்விக்குமான பிரதான காரணங்களில் ஒன்றாக அமைந்தது.

பீதியற்ற ஊழலற்ற ஜனநாயக ஆட்சியை ஏற்படுத்துவதற்கான வாக்குறுதியின் அடிப்படையில் தான் பொதுஜன ஐக்கிய முன்னணி பதவிக்கு வந்தது.

பதவிக்கு வந்து இரு வருடங்களில பல்வேறு அரசியல் வன்முறைச் சம்பவங்கள் மூலம் வன்முறை அரசியலுக்குத் தேவையான பின்னணியை ஏற்படுத்த முழுமையாக முயன்று வருகின்றது. இவை அக்கட்சியின் தனிநபர்களை அடிப்படையாகக் கொண்ட சம்பவங்களல்ல. இவ்வரசின் ஆட்சித் தலைவியான ஜனாதிபதி சமீபத்தில் கம்பஹா - பத்தலகெதர பொதுக்கூட்டத்தில் தமது கட்சியினர் நடத்தும் வன்முறைத் தாக்குதல்களை நியாயப்படுத்திப் பேசிய பேச்சிலிருந்து இவ்வரசியல் வன்முறைகளுக்கு அரசின் மேலிட இணக்கமும் இருப்பது மிகவும் தெளிவாகின்றது. இவ்வன்முறை அரசியலை ஆரம்பத்திலேயே தோற்கடிக்காமல் மேலும் வளர விடுவதானது கடந்த 17 வருட ஐ.தே.கட்சியின் ஆட்சிக்கு பொ.ஐ.முன்னணியின் பெயரை மாற்றுவதாக மட்டுமே அமையும்.

இவை எல்லாவற்றுக்கும் மேலாக அதிர்ச்சி தரும் சம்பவம் ஒன்று நிகழ்ந்துள்ளது.

சென்றவாரம் தனது அலுவலகத்தில் சில அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தும் போது, ஜனாதிபதி ''புலிகள் சிறி மகாபோதி போன்ற மதநிலையங்களைத் தாக்கினால் நான் தமிழர்களை தாக்குவேன்'' எனக் கூறியுள்ளார். இந்நாட்டின் முப்படைகளின் தளபதியாகவும் இவர் திகழ்கின்றார் என்பதுவும், இராணுவத்தினரை வடகிழக்கில் தனக்குத்தேவையான வகையில் பயன்படுத்தி வருகின்றார் என்பதுவும் நாடறிந்த உண்மை.

ஜனாதிபதி சந்திரிகா அவர்களே! மேற்கூறிய உங்கள் கூற்று இரண்டு முக்கிய அம்சங்களை தெளிவு படுத்துகிறது என்பதைக் கூறிவைக்க விரும்புகிறோம்.

ஒன்று, உங்கள் அரச இராணுவத்தின் தமிழர்களுக்கெதிரான கூட்டுப் பழிவாங்கல்கள் (Collective punishment against Tamils) நடவடிக்கையை நீங்கள் ஏற்றுக் கொள்வதாகவும், தமிழர்களுக்கெதிரான தாக்குதல்களை நீங்கள் நியாயப்படுத்துவதாகவும் அமைந்துள்ளது. அத்தோடு தமிழர்களுக்கெதிரான வன்செயலை விரும்புபவர்கள் சிறி மகாபோதியைத் தாக்கினால், அவர்களின் எதிர்பார்ப்பு நிறைவேற்றப்படும் என்பதாகும்.

இரண்டாவது இக்கூற்றின் மூலம் இலங்கை என்னும் பல்லின நாட்டின் 'சிங்கள' மக்களின் ஜனாதிபதி என்பதை நீங்கள் தெளிவு படுத்த முயலும் உங்கள் முயற்சியானது, தமிழ் மக்களை ஆளும் ஜனநாயக நியாயத்தன்மையை (Democratic Legitimacy) இழப்பதற்கே வழி வகுக்கும்.

பழிவாங்கல்களும் பலாத்காரமும் தான் உங்கள் அரசியல் வழி என்றால் மக்களும் அவற்றை எதிர்கொள்ளத் தயாராகி விடுவார்கள் என்பதையும் மறந்து விடாதீர்கள்!

''அரசன் எவ்வழி குடிகள் அவ்வழி!''

## வெண்டாமரைக்குத் தகாத சொல்!

இனப் பிரச்சினை தொடர்பாக சந்திரிகா அவர்கள் உண்மையில் என்ன கருதுகிறார் என்பது அவர் தெரிவித்த அண்மைய கருத்தொன்றின் போது தெளிவாகத் தெரிந்தது.

அண்மையில் தனது அலுவலர்கள் மத்தியில் பேசும் போது அவர் இதைத் தெரிவித்திருந்தார். விடுதலைப் புலிகள் அனுராதபுரத்திலுள்ள ஸ்ரீ மகாபோதியைத் தாக்குவதற்கு முயல்வதாக தான் கேள்விப்பட்டதாகவும் அப்படி ஒன்று நடந்தால் பதிலுக்கு தமிழர்களை தாக்குவதில் தான் ஈடுபடுவேன் என்றும் அவர் தெரிவித்திருந்தார். சமாதானப் புறா என வர்ணிக்கப்பட்ட சந்திரிகாவின் "காட்டேறித்தனமான" இந்தத் தாக்குதல் மிரட்டல், அவரை சமாதானத்தின் தூதுவராக இனங்காண்கிற அனைவரையும் தலைகுனியச் செய்திருக்கிறது.

இத்தகைய மிரட்டலினை ஜனாதிபதி தவிர்ந்த வேறொரு அதிகாரி செய்திருந்தால் அதற்காக அவர் மீது சட்ட நடவடிக்கையை எடுத்திருக்க முடியும். ஆனால் சந்திரிகாவுக்கு இருக்கவே இருக்கிறது, அவரை நீதி விசாரணைக்கு அப்பாற்பட்டவராக வைத்திருக்கும் நிறைவேற்று ஜனாதிபதிப் பதவி.

இந்தப் பேச்சின் போது தமிழர்களை அவர் தாக்கப் போவதாகக் குறிப்பிட்ட போது உதாரணமாக "மகாராஜா" நிறுவனத்தினையும் குறிப்பிட்டுக் காட்டியிருந்தார். ஞாயிறு ஆங்கிலப் பத்திரிகை ஒன்றில் (Sunday Leader-20-10-1996) வெளிவந்த இந்தச் செய்தியை மறுத்து ஜனாதிபதிச் செயலகம் எந்த மறுப்பறிக்கையும் வெளியிட இல்லை. எனவே இந்தக் கூற்றை ஜனாதிபதி "புத்தி சுவாதீனத்துடன் தான் சொல்லியிருக்கிறார்" என்று எடுத்துக் கொள்ள வேண்டியுள்ளது.

தமிழர்கள் மீது கடந்த காலங்களில் பல தடவைகள் யுத்தப் பிரகடனம் செய்த ஐ.தே.கவே இந்தப் பேச்சைக் கண்டித்து அறிக்கை வெளியிட்டுள்ளது. இதற்கெதிராக வேறு நடவடிக்கைகளில் இறங்கப் போவதாகவும் வேறு கூறியுள்ளது.

ஆனால் தமிழ்க் கட்சிகள் எதுவும் இதுவரை வாயைத் திறந்ததாகத் தெரியவில்லை!

எவ்வாறாயினும் பொ.ஐ.முவினதும் சந்திரிகாவினதும் சமாதான மற்றும் ஜனநாயக வேசத்தை மிகத் தெளிவாக இந்தப் பேச்சு வெளிக்காட்டியுள்ளது.

எஸ்கே.

## இவர்களும் காரணம்!

பொடிமாத்தயா என்கிறார்கள் அவரை தர்மதாசா என்றும் சொல்கிறார்கள். இவர்தான் பொ.ஐ.முன்னணியின் கல்குடாத் தொகுதி அமைப்பாளராகும். இப்போது மேலதிகமாக இவர் கடதாசிக் கம்பனியின் பணிப்பாளர் சபை உறுப்பினராகவும் நியமனம் பெற்றுள்ளார்.

இவருடைய உத்தியோகபூர்வ வாசஸ்தலம் வாழைச்சேனைக் கடதாசி கம்பனியிலேயே அமைந்துள்ளது. இப்பகுதியின் வெண்தாமரை இயக்க அமைப்பாளராகவும் இவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

ஆனாலும் ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியிலிருந்த 17 வருடங்களும் பொடிமாத்தயா எங்கே போனார் என்பதுதான் ஒரு கேள்வி?

பொடிமாத்தயாவிடம் நிறைய தொழில் வாய்ப்புக்கள்? இளைஞர்கள் அடிக்கடி கடதாசிக் கம்பனிக்கு விஜயம் செய்வார்கள். வேலைவாய்ப்புக்கள் தருவதாக சொல்லி நிறைய பணத்தொகையை வாங்குகிறாராம் பொடிமாத்தயா. ஆனாலும் அவர் முறையாக வாங்கிய பணத்திற்கு வெண்தாமரை இயக்கத்தின் பற்றுச் சீட்டினையும் வழங்குகின்றார்கள். வெண்தாமரை இயக்கம் இப்படிப்பட்ட அமைப்பாளர்களின் நலனுக்காகவா உருவாகியது என்பதும் சந்தேகமே! ஆனால் பொடி மாத்தயா ஒருவருக்காவது வேலை வாய்ப்புக்கள் வழங்கியதாகத் தெரியவில்லை.

எல்லாம் ஒன்றேதான். ஐக்கிய தேசியக் கட்சி கவிழ்ந்து பிரண்டது போல் பொதுஜன ஐக்கிய முன்னணியும் பிரளுமானால் அதற்கு இப்படிப்பட்ட மாத்தயாக்களும் காரணமாகும். அடுத்த ஆட்சியிலும் இப்பகுதியிலிருந்து ஒரு மாத்தயா தோன்றுவாரா?

ஹிஸாம்

## உயரும் இராணுவம்!

இராணுவ சேவையில் ஈடுபட்டோரினது சம்பளங்களை உயர்த்துவது தொடர்பாக ஜனாதிபதி நடவடிக்கை ஒன்றை எடுக்க விருப்பதாக லெப்டினன் ஜெனரல் ரொஹான்தளுவத்த குறிப்பிட்டார்.

தற்போது இராணுவ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் பிரதேசங்களில் சேவை புரியும் இராணுவத்தினருக்கு சம்பளம் நான்கு மடங்காக அதிகரிக்கப்பட்டுள்ளது. இதன்படி மோசமான பிரதேசங்களில் சேவையில் ஈடுபடும் இராணுவத்தினன் ஒருவருக்கு பிரத்தியேகமாக ரூ. 2400 கொடுக்கப்படும்.

அத்துடன் இராணுவச் சேவையில் ஈடுபட்டிருக்கும் இராணுவத்தினருக்கு அரசாங்கம் பல சலுகைகளை வழங்கியுள்ளது. இராணுவச் சேவையிலிருந்து விடுபட விரும்புவர்களுக்கு வெளிநாட்டில் வேலைவாய்ப்பு பெற்றுக்கொடுக்கப்படும் எனவும், அவர்கள் காணி வாங்கும் பொழுது அதன் பெறுமதியில் அரைவாசியை அரசாங்கம் வழங்குமெனவும் கூறப்பட்டுள்ளது.

இராணுவத்தினரின் குடும்பங்களுக்கும் இவ்வடிப்படையில் சலுகைகள் பல வழங்கப்படவுள்ளன. குழந்தைகளை பாடசாலையில் சேர்ப்பதிலும் புதி அணுகுமுறைகள் கடைப்பிடிக்கப்படும் எனவும் தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

பியார்




## முஸ்லிம்...

''நானும் இந்தக் கட்சியைப் பொறுத்த மட்டில் சில தெளிவுகள் இல்லாமல் சில இருட்டுக்களில் வாழ்ந்து கொண்டுதான் இருந்தேன். இன்று எனக்கு பூரணமாக தெளிவையும், என்னுடைய இருட்டிலிருந்து வெளிச்சத்தையும் தந்த என் அன்பு சகோதரன் இனாமுல்லாஹ்வுக்கு நான் என்றைக்கும் கடமைப்பட்டிருக்கிறேன்....'' என்றும் கூறியிருப்பது இஸ்லாமிய அடையாளங்களுடன் கட்சியை முன்னெடுத்துச் செல்வதற்கான தோற்றப்பாடாகவுள்ளது. எனினும் இந்த முன்னெடுப்புகளுக்கூடாக முஸ்லிம் காங்கிரஸ் பற்றிய எதிர்ப்பிரச்சாரங்களும், கிளறல்களும் முதன்மைப்பட்டு வருகின்றன. இது கூறப்படுகின்ற கட்சியின் கொள்கைகளுக்கு எவ்விதத்தில் நலன்பயக்கப்போகிறது? அல்லது இவ்வாறான ''எதிர்க்கீரைக்கடை'' நிலைப்பாட்டில் தானா தன்னை இனங்காட்டிக்கொள்ள முடியும்? இது எமக்கு எழுகின்ற கேள்விகள்.

எப்படியாயினும் எதைக் குறிவைத்தோ முஸ்லிம் கட்சி மும்முரமான செயற்பாடுகளில் இறங்கியுள்ளது. எந்தக் கட்சிக்கும் நடக்கவிருக்கின்ற தேர்தல்களே பிரதான குறி. முஸ்லிம் கட்சிக்கும் கூட அதுதான். எனினும் அக்கட்சி தன்னை இனங்காட்ட, வளர்க்க பல பிராயச்சித்தங்களை மேற்கொள்ளவேண்டியிருக்கிறது. அதற்கான ஆரம்பங்கள் ''மீஸான்'' மாநாடுகளாகவும்...''முஸ்லிம் எழுச்சிப் போராட்டங்கள்...'' போன்ற பிரசுரங்களாகவும் இருக்கின்றன. அடையாளப்படுத்தப்பட்ட தனித்துவ இனத்தில் தனித்துவக் கட்சியின் அதிகாரங்கள் ஓர் உயரிய நிலையில் இருக்கின்றவேளை இன்னொரு கட்சி தன் செயற்பாடுகளை இப்போதே முடுக்கிவிட்டிருக்கிறது.

முன்னர் குறிப்பிட்டது போல இஸ்லாமியத்தின் மீதான முஸ்லிம்களின் அடிப்படை உணர்வுகள் மீதான பயணத்தையே முஸ்லிம் கட்சியும் தொடங்கியுள்ளது. ஸ்தாபாத்துணைவர் இனாமுல்லாஹ்வும் கூட அவருக்கு கிடைத்த பல சந்தர்ப்பங்களையெல்லாம் நழுவவிட்டு இதற்காகத் தன்னை அர்ப்பணித்திருக்கிறார். இதனை அவரது உரைகள் மூலமும் முஸ்லிம் கட்சித்தலைவரது உரைகள் மூலமும் அறியக்கிடைக்கிறது. இருந்தும் இவ்விடத்தில் ஒரு கேள்வியும் எழுகிறது. சகல தரப்பு அனுபவமும் அறிவும்மிக்க முஸ்லிம்காங்கிரஸ் தலைவர் அவர்களால் கூட இனாமுல்லாஹ் போன்றோரது இஸ்லாமிய அடிப்படைகளில் அமைந்த அரசியற் செயற்பாடுகளை முன்னெடுத்துச்செல்ல முடியாத போது எந்த அடிப்படைகளின் மீது எந்த நம்பிக்கைகளின் மீது மீண்டும் ஒரு கட்சியில் முற்றிலும் பிரிந்து வந்து கட்சி அமைத்துக்கொண்டவர்களைக் கொண்ட ஒரு அணியில் நம்பிக்கை வைக்க முடிந்தது? எதற்கும் நம்பிக்கைதான் அடிபடையாக அமைந்தாலும் உயரிய குறிக்கோளுக்கு வெறும் அரசியல் கட்சி நம்பிக்கை எந்தளவு துணை செய்யப் போகிறது என்பதும் ஏதோ ஒரு நம்பிக்கையில் எழுகிற கேள்விதான். இந்த கேள்விக்கான விடைகள் வெறும் நடைமுறைக்குதவாத சித்தாந்தங்களைத் தெரிவிப்பதாகவோ, அல்லது எதிர்த்தரப்பு பிரச்சாரங்களைக் கொண்டு தங்களை நியாயப்படுத்துவதாகவோ அல்லது மக்களின் அடிப்படை உணர்வுகளைத் தூண்டியெழுப்புகிற விதமானதாகவோ அமையாத விதத்தில் இருக்க வேண்டும் என்பதுவுமே எமது எதிர்ப்பார்ப்பு. விடை தாருவார்களா உரியவர்கள்!?

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்



எல்லாத் தொடர்புகட்கும் : இல. 04, ஜயரத்ன வழி, திம்பிரிகஸ்யாய, கொழும்பு 05, தொலைபேசி : 593615.